DICTIONARY OF TECHNICAL TERMS
(ENGLISH - TAMIL)

அருங்கலைச்சொல் அகரமுதலி
(ஆங்கிலம் - தமிழ்)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

மா. தமிழ்ப்பரிதி

DICTIONARY OF TECHNICAL TERMS

(ENGLISH - TAMIL)

அருங்கலைச்சொல் அகரமுதலி

(ஆங்கிலம் - தமிழ்)

DICTIONARY OF TECHNICAL TERMS

(ENGLISH - TAMIL)

அருங்கலைச்சொல் அகரமுதலி

(ஆங்கிலம் - தமிழ்)

Editor in Chief

PA. ARULI

Scholastic Researcher

Department of Dictionary of Pure Tamil - Technical Terms and Transcreation

முதன்மைப் பதிப்பாசிரியர்

ப. அருளி

ஆய்வறிஞர்

தூய தமிழ் - சொல்லாக்க அகரமுதலித் துறை

TAMIL UNIVERSITY
THANJAVUR - 613 005
TAMIL NADU

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005
தமிழ் நாடு

ISBN : 81 - 7090 - 301 - 7

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுப் பதிப்புச் சுழல் நிதியிலிருந்து இந்நூல் வெளியிடப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : **241**

திருவள்ளுவராண்டு 2033 சித்திரை - மே 2002

நூல்	:	அருங்கலைச்சொல் அகரமுதலி **(Dictionary of Technical Terms)**
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	ப. அருளி
மொழி	:	ஆங்கிலம் - தமிழ்
பொருள்	:	அகராதி
பதிப்பு	:	முதற்பதிப்பு
மறுஅச்சு	:	**செப்டம்பர் - 2012**
பக்கம்	:	(96 + 1216) 1312
தாள்	:	டிஎன் பி எல். மேப்லித்தோ 16Kg.
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிகோ
விலை	:	**உரூ. 1200.00**
படிகள்	:	1500
கணினி அச்சுப்பதிவம்	:	கம்ப்யூடெக், சென்னை.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

துணைவேந்தர்

முனைவர். பேரா. இ. சுந்தரமூர்த்தி

அணிந்துரை

காலந்தோறும் மொழிகள் பல்வேறுநிலைகளில் வளர்ந்து வருவன. அறிவுச் சூழலுக்கேற்பவும் பயன்பாட்டுச் சூழலுக்கேற்பவும் சொற்கள் ஒவ்வொரு மொழியிலும் தோன்றிக்கொண்டிருக்கும். அவற்றின் பயன்பாட்டினைப் பல்வேறு முறைகளில் பதிவுசெய்கின்றோம். பழந்தமிழ் இலக்கணங்களிலும், இலக்கியங்களிலும் தமிழ்மொழியின் பல்துறைச் சொற்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளமையை அறிவோம். இச்சொற்களைத் தொகுத்துப் பார்க்கும்போதுதான் சொற்களின் ஆழமும் அவற்றின் பொருள்விரிவும் நமக்குத் தெளிவாகும். முன்னையோர் நிகண்டு போன்ற நூல்களில் இத்தகு சொற்தொகுப்புப் பணியைச் செய்துள்ளனர். தமிழ்மொழி வரலாற்றில் அகரமுதலிகளின் முன்னோடியாகத் திகழ்ந்தவை நிகண்டுகளேயாகும். நிகண்டுகளுக்குப்பின் அகராதியியல் தமிழ்மொழிவரலாற்றில் காலூன்றத் தோன்றியது. இந்திய மொழிகளுள் தமிழ்மொழி அகராதிக்கலையின் முன்னோடியாகத் திகழ்ந்தது என்பர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி அகராதியியலுக்குப் புதுவரவாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டிலும் அதற்குமுன்னரும் தமிழில் பல்வேறு அகராதிகள் தோன்றின. இருமொழி அகராதிகள், ஒருமொழி அகராதிகள், கலைச்சொற்கள் அடங்கிய பல்வேறு அகராதிகள் என அகராதிகள் பலவும் தோன்றியுள்ளன. காலத்திற்கேற்றவாறு புதிய புதிய அகராதிகள் தேவைப்படுகின்றன. அவ்வகையில் தமிழ்ப்பல்கலைக்கழகம், **'அருங்கலைச்சொல் அகரமுதலி'** என்னும் இத் தொகுதியை வெளியிடுவதில் மகிழ்வெய்துகின்றது.

முதன்மைப் பதிப்பாசிரியர் திரு. ப. அருளி இவ்வகரமுதலியைப் பல்லாண்டுகள் உழைத்து அரிய தரவுகளோடு பதிப்பித்திருப்பது பெரிதும் பாராட்டிற்குரியது. இதற்குமுன்னர்ப் பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு தலைச்சொற்களின் வடிவங்களையும் ஆராய்ந்து திரட்டி இவ்வகரமுதலியை உருவாக்கியுள்ளார். பதிவு செய்யப்பெற்றுள்ள தலைச்சொற்களின் பல்வேறு இயல்புகளையும் ஆராய்ந்து தொகுத்துள்ளமை பெரிதும் கருதத்தக்கது. பல்வேறு பணியரங்குகள் நடத்தியும், அறிவர்குழு ஆய்ந்தும் சொற்கள் தொகுக்கப்பெற்றன. சொற்களின் மூலவடிவங்கள் பல்வேறு நெறிகளில் ஆராயப்பெற்றுத் தேர்வு செய்யப்பெற்றன. இத்தொகுப்பு நெறியினை முதன்மைப்பதிப்பாசிரியரின் முன்னுரையில் காணலாம்.

அருங்கலைச்சொல் அகரமுதலியின் தனிச்சிறப்பாகக் கருதத்தக்கது இன்றைய அறிவியல் கலைச்சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும், மக்களின் வழக்காற்றுச் சொற்களிலிருந்தும் தக்கவாறு தொகுத்துப் பயன்படுத்தியிருப்பதுதான். இன்றைய அறிவியல் சூழல்களுக்கேற்றவாறு உருவான ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்சொற்களை உருவாக்கம் செய்து தந்திருப்பது இவ்வகரமுதலியின் பிறிதொரு சிறப்பு என்று கூறலாம். வேர்ச்சொல் அடிப்படையிலான பல கலைச்சொல்லாக்கங்கள் இத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு சொல்லுள்ளும் அமைந்திருந்த கருத்தமைவும், துறைப்பெயர் வகுப்பமைவும் பெரிதும் கருதிப்பார்க்கப்பெற்று அறிஞர்குழுவால் ஆராயப்பெற்றுள்ளன. ஒவ்வொரு கலைச்சொல்லின் பொருளும், வரலாறும் இத்தொகுதியில் பதிவுசெய்யப்பெற்றுள்ள பல்வேறு மருத்துவ, பொறியியல் கலைச்சொல்லாக்கங்களால் தெளிவுறக்கூடும். தொடக்கத்தில் அமைந்திருந்த கலைச்சொல்லாக்கங்கள் எவ்வெவ்வாறெல்லாம் பல்வேறு வடிவங்களை எய்தின என்பதனைப் பதிப்பாசிரியர் நன்கு ஓர்ந்து இறுதியில் இன்றைய நிலைபேற்றுக்குரிய வடிவமாக்கித் தந்திருப்பது இவர்தம் கடுமையான உழைப்பைக் காட்டும். சொல்லாக்கங்கள் காலந்தோறும் மாறக்கூடியன என்றாலும் இவற்றின் வரலாறு இப்பதிவுகளால் மேலும் தெளிவாகின்றன.

கால அறிவு வளர்ச்சிச் சூழலில் - சொற்களிடையே வரலாற்று நோக்கில் ஏற்பட்டுள்ள பொருள் புலப்பாட்டு மாற்றங்களின் இயல்பைக் கூர்ந்தாய்ந்து இன்றைக்கு வழங்கப்பெறும் சொற்பொருள்களையும் பதிவுசெய்தல் மிகமிக இன்றியமையாததாகும். இவ்வகரமுதலி அத்தகைய பயனையும் கருத்தில் கொண்டு உருவாக்கப் பெற்றுள்ளது.

அருங்கலைச்சொல் அகரமுதலியின் முதன்மைப்பதிப்பாசிரியர் திரு. ப. அருளி அரிதின் முயன்று பல்லாண்டுக்காலம் உழைத்து இத்தொகுதியை உருவாக்கியுள்ளார். அவர்கட்கு நம் இனிய பாராட்டுதல்கள். இப்பணி நன்கு நிறைவேறத் தமிழுணர்வாளர்களும் தமிழறிஞர்களும் ஒல்லும் வகையெல்லாம் துணைநின்றுள்ளனர். ஆய்வறிஞர்கள், அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் பாராட்டிற்குரியவர்கள். இவ்வகரமுதலித்திட்டத்தை உளத்தமைத்து உருவாக்கி அளித்த தமிழ்ப்பல்கலைக்கழக முதல்துணைவேந்தர் பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியனார் அவர்கட்கும், தொடர்ந்து ஊக்கம்தந்து இச்செயலை முற்றுவிக்கத் துணைநின்ற பின்னைத் துணைவேந்தர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தின் நன்றி உரியது.

'அருங்கலைச்சொல் அகரமுதலி' தமிழ்கூறுநல்லுலக மக்களால் பெரிதும் போற்றப்பெறும் என்று நம்புகின்றேன்.

தஞ்சாவூர்
07-02-2002

(இ. சுந்தரமூர்த்தி)

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010.

அணிந்துரை

உலகில் ஒவ்வொரு நொடியிலும் மாற்றங்கள், வளர்ச்சிகள் நிகழ்ந்து கொண்டேயுள்ளன. அறிவியல், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மனித வாழ்விற்கு அளப்பரிய நன்மைகளை அள்ளித் தருகின்றன. இவற்றை நாம் மிகுதியும் நுகர்ந்து இன்புறுகிறோம். ஆயினும், இத்துடன் அமைந்துவிடுதல் ஆகாது. தாமின்புறுவது உலகின்புற ஆவன செய்தல் நம் கடமை. நாம் பெற்ற பயன் அடுத் தடுத்த தலைமுறைகளுக்கு உறுதிசெய்யப்பட வேண்டும். இதை நிறைவேற்றுவதில் மொழிக்கு முதன்மைப் பங்குள்ளது. எனவே, மொழி காக்கப்பட வேண்டியதும் வளர்க்கப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும். மொழி வளர்ச்சி என்பது இலக்கண இலக்கிய வளர்ச்சி மட்டுமன்று. அது அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மொழி வாழ்விற்கு வளம் சேர்க்கும் மொழியாக நின்று நிலைக்க முடியும். அறிவியல் - தொழில்நுட்பச் செய்திகள் மொழியில் இடம்பெறக் கலைச்சொற்கள் மிகமிக இன்றியமையாதவை. கலைச்சொற்கள் என்பன சுருக்க வடிவிலும் பொருளை முழுமையாக விளக்கும் வகையிலும் அமைதல் வேண்டும். இவ்வகையில் கலைச்சொற்களை உருவாக்க மொழியின்கண் பொதிந்துள்ள சொல் வளத்தை முழுமையாய் அறிந்திருத்தல் இன்றியமையாதது. தமிழ்மொழியைப் பொறுத்த வரை இலக்கண, இலக்கிய நூல்கள், நிகண்டுகள் முதலியன சொல் வளத்தை அள்ளி அள்ளி வழங்குகின்றன. இதனையடுத்துப் பொதுவாகவும், பல்வேறு துறைகள் சார்ந்தும் அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், அகரமுதலிகள் தோன்றியுள்ளன. இவ்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் 2002ஆம் ஆண்டில் அருங்கலைச்சொல் அகரமுதலி (ஆங்கிலம் - தமிழ்) எனும் அரிய நூலை வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளது. இப்பணி ஒரு மிகப்பெரிய சாதனைப் பணியாகும். இக்கூற்று சற்றும் மிகையன்று என்பதை இந்நூலினைப் படிப்போர் எளிதில் உணர்வர். ஆய்வறிஞர் திரு. ப. அருளி அவர்கள் முதன்மைப் பதிப்பாசிரியராகவிருந்து தம் நுண்மாண் நுழைபுலத்தையும், தூய தமிழ் ஆற்றலையும் கொண்டு இவ்வரிய நூலை உருவாக்கி யிருக்கிறார். துறைசார் அறிவர்களின் மேதைமையையும் முழுமையாய்ப் பயன் கொண்டுள்ளார். அகரமுதலி நூல்கள் பல முன்பு வெளிவந்திருப்பினும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ள இவ்வகரமுதலி நூல் தனித் தன்மை வாய்ந்ததாய்த் திகழ்கிறது. இந்நூலுள் நூற்று முப்பத்தைந்து துறைகளுக் குரிய கலைச்சொற்கள் ஆங்கிலம் - தமிழ் வடிவில் இடம் பெற்றுள்ளன. இடம் பெற்றுள்ள சொற்கள் ஓராயிரம் ஈராயிரம் அல்ல; ஒரு இலட்சத்து இருபதாயிரத் திற்கும் மேற்பட்ட கலைச் சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு

ஆங்கிலக் கலைச்சொல்லும் குறித்து நிற்கும் பொருளாழமும் நுட்பமும் ஒரு சிறிதும் குறையாவண்ணம் அழகிய - தூய தமிழ்க் கலைச்சொல்லாக்கங்கள்தாம் இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

துறைசார் ஆங்கிலக் கலைச்சொற்களை முழுமையாகத் தொகுத்து அவற்றிற் குரிய நுண்ணிய வேறுபாடுகள் விளங்கும் வண்ணம் தமிழ்ச் சொல்லாக்கங்களை ஆசிரியர் அகரநிரற்படுத்தியளிக்கிறார். சான்றுக்கு ஒன்றை இங்கே எடுத்துக்காட்டு வது பொருந்தும். கல்லீரல் தொடர்பாக மட்டுமே 67 சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லாக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

hepatalgia	-	கல்லீரல் வலி
hepatatrophia	-	கல்லீரல் நைவு
hepatectomy	-	கல்லீரல் நீக்கறுவை
hepaticae	-	கல்லீரற் செடிகள்
hepatic artery	-	கல்லீரனாளம்
hepatic cecum	-	கல்லீரற் பைநீட்சி
hepatic cell	-	கல்லீரற் கலம்
hepatic oedema	-	கல்லீரல் வீக்கம்
hepatocele	-	கல்லீரல் பிதுக்கம்

என்பன போன்ற கல்லீரல் பற்றிய 67 சொல்லாக்கங்கள் நம்மை வியக்க வைக்கின்றன. இவ்வகையில் ஒவ்வொரு துறைசார் கலைச்சொற்களும் பொருட் பொதிவும் பொருத்தப்பாடும் செறிந்துள்ளதுடன் தமிழ்ச் சொல்லாற்றலையும் நிலைநிறுத்தித் தமிழுக்கு வளம் சேர்க்கின்றன. இத்தகைய பெருநூல் அறிஞர்களின் பயன்பாட்டிற்கு மீண்டும் அளிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை அறிந்து இதனைத் தற்போது மறுபதிப்பாக வெளியிடுவதில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறது. அறிவியல் - தொழில்நுட்பத் தமிழ்க் கலைச் சொற்களை உள்ளபடி அறிந்து பொருள்விளக்கம் பெறவும், இத்துறையில் புதுப்புது நூல்களைப் படைக்கவும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பற்பல ஆண்டுகள் கடுமையாய் உழைத்துத் தம் அறிவாற்றலையும் புலமையையும் கொண்டு இந்த மாபெரும் நூலினை உருவாக்கியளித்த ஆய்வறிஞர் திரு. ப. அருளி அவர்களையும் அவருக்குத் துணைநின்ற அறிவர்களையும் நான் மனமாரப் பாராட்டி வாயார வாழ்த்தி மகிழ்கிறேன். இம்மறுபதிப்பு நூல் வெளிவரப் பணியாற்றிய பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை. கண்ணபுரக்கண்ணன், பதிப்புத்துறை - அச்சகப் பணியாளர்கள் ஆகியோருக்கு நன்றி.

CONTENTS
உள்ளுறை

- o 0 o -

முன்முகவுரை

தமிழியல் வளர்ச்சி வரலாற்றுச் செலவுக்கிடையில் - ஒரு சிறப்புக் கூறாக - உங்கள் முன் கணத்துத் தோன்றும் இத் தொகுப்பாக்கப் பெருநூல் - ஒரு தனி முத்திரைத் தகைமையுடையதாகும்! இதன் ஆக்க வரலாறும் தனிச்சுவை தாங்கியதாகும்!

பதினைந்தாண்டுக்கால நெட்டநெடிய பேருழைப்பை உள்வாங்கிச் சுமந்துகொண்டு உருவும் திருவும் எய்திநிற்கும் ஓர் அரிய கலைச்சொற்கருவூலம், இது! பென்னம்பெரிய இருமொழிக் களஞ்சியம், இது!

[* " treasure " என்னப்பெறும் ஆங்கிலச்சொல், பழைய பிரஞ்சுமொழிச் சொல்லான " tresor " என்பதினின்று பிறந்தது. இப் பிரஞ்சுச்சொல்லோ " thêsaurus " என்னும் இலத்தீனச் சொல்லினின்று படிவெய்தியது. இவ் இலத்தீனச் சொல்லும் " thêsauros " என்னும் கிரேக்கச் சொல்லடியாகத் தோன்றியது! செல்வப்பொருளைச் சேமித்து வைத்தற்குரிய இடம் எதுவோ - அவ்விடத்தை " treasury " என்றவாறு ஆங்கிலம் குறிப்பிட்டு வருவதும் இப்பொருட்பாட்டு வழியில் தான்!

" thesaurus " என்னும் சொல்லுக்குக் "களஞ்சியம்" என்றவாறு இக்கால் குறிப்பிடப்பெற்றுவரும் பொருள் விரிவாக்கக் கலைச்சொல், மிகவும் பொருத்தமானதும் சீரியதும் ஆகும்.

இக் களஞ்சியத்துக்குரிய, இன்னுமொரு மக்கள்வழக்குச் சிறப்புச்சொல் "கருவூலம்" என்பதாகும்.

கரு = மூலவித்து ; பயிரீட்டுக்குரிய கருமூல வித்துமணி.
கலம் = பெரும்பானை; குதிராகிய பெருஞ்சால்.

கரு > கருவு. (கருவு + கலம்) > கருவுகலம் = மூல வித்துமணிகளைச் சேமித்துவைக்கப் பயன்பெறும் பெரிய பானை. (காண்க : "கருவுகலத்திலே ஒரு நெஞ்சைத் தந்தாய்" (ஈடு : முப்பத்தாறாயிரப்படி : 2).

கருவுகலம் > கருகூலம் = பயிரிடுவதற்கெனத் தெரிந்து தேர்ந்தெடுத்துச் சேர்த்த வித்துமணிகளைக் கொட்டிச் சேமித்துவைத்தற்குரியதாகப் பயன்பெறும் குதிர்அல்லது அறை. (காண்க: "கருகூலத்து...தேடிவைத்த கடவுண் மணியே" (மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ். முத்தப்பருவம் : 1)

(ககர வகரத் திரிபு : மகள் > (மக) > மவ (பேச்சுவழக்கு)
புகை > (பொகெ) > பொவெ (பேச்சுவழக்கு)

இவ் வகைத் திரிபே, மேற்குறித்த "கருகூலம்" என்னும் சொல்லுக்கும் நிகழ்ந்து "கருவூலம்" என்ற வடிவெய்தியுள்ளது.

கருகூலம் > கருவூலம் = வித்துமணிகளைச் சேமித்து வைக்கப் பயன்பெறும் கலம். (பொருளைச் சேமித்து வைக்கும் இடத்திற்கு "வைப்புழி" என்னும் ஓர் அரிய, பரந்துபட்ட மக்கள்வழக்குச் சொல், பண்டையில் புழக்கத்தில் இருந்தது. (காண்க : குறள் : 226 : 2. நாலடி : 131 : 1)

இந்நூல் ஒரு கருவூலம் என, நான் இங்குச் சுட்டும் நிலை - இஃதொரு சொற்கருவூலம் ஆகும் என்னும் கருத்துப்பற்றியதே; அவரவரும் அவரவர்க்குரிய துறைவயல்களில், இதனின்று எடுத்துவைத்து வளர்த்துப் பயன்கொள்ளலாம் - செழிப்பெய்தலாம் என்னும் எண்ணம் பற்றியதே !]

பதிப்பாசிரியனும் ஆக்கத்தனுமாகிய நான், இப்படியாகப்பட்ட தன்மைதாங்கிய - பரப்புவிரிந்த வளநூல் ஒன்றன் இன்றியமையாப் பெருந்தேவையையும் அருமையையும் இருபத்தைந்தாண்டுகளுக்கும் முன்னரேயே நன்கு உணர்ந்தவனாயிருந்தேன்! இவ் ஆக்கம் ஒன்று பற்றிய பாரிய வேட்கையனாகவும் இருந்தேன்!

காலச் சுழற்சிக்கிடையில் - இவ்வகைப்பட்ட முழுப் பொறுப்பாக்கத்திற்கும் தனிப்பொறுப்பேற்று இயங்குதற்குரிய நல்வாய்ப்பு ஒன்று-எனக்கெனவே வந்து வாய்த்தபோது - தனி உறுவிருப்போடும், நனிமிகு வேட்கையோடும், செறிவார்ந்த வினையீடுபாட்டோடும் இதனுள் தோய்ந்து ஆழவூன்றிநின்று செயற்படலானேன்!

ஈராண்டுகளுக்குள் முடிவெய்தலாகும் என எண்ணித் தொடங்கிய எனக்குப் பணியிடையிறங்கி ஈடுபட்டுவர ஈடுபட்டுவர, - இதற்கேயென்று இயல்பாய் அமைந்து கிடந்த மிகப் பாரிய பரப்புக் களவிரிவும் புரியத் தொடங்கியது.

இம் மண்ணகமைந்தர்க்கு மிகமிக இன்றியமையாது வேண்டப்பெறுவதாகிய இவ்வினையை முடித்தே தீரவேண்டும் என்னும் என் வலித்தமான உள்ளூக்கவுந்தலே - இதன் தொடர்ச்சிக்கான நடைமுடுக்கங்களையும் உந்தியது!

பணிக்கட்ட நிலைகள் :

1. முதலாம் பணிக்கட்ட நிலை :

உரிய மூலவாய்நூல்களில் (source books) பயன்படுத்தப்பெற்றிருந்த ஆங்கிலக் கலைச்சொற்களுக்குப் பகர-நேர்ச்சொற்களாகப் பதிவுற்றிருந்த தமிழ்க் கலைச்சொல்லாக்கங்களைத் தொகுத்தெழுதும் அடிப்படைப் பணியை, முதற்கண் தொடங்கினேன். மிகப் பல சுவடிகளில் தொடர்ந்து இவை அடுக்கம் எய்தின!

தொடக்கத்தில் - இவ்வடிப்படைச் சொற்றொகுப்பு விரைவுப் பணிக்கென - முன்னீடாகவே இத் துறையில் ஈடுபாடும் பயில்வும் தெளிவுங் கொண்டிருந்த அறிஞர்கள் - ஆசிரியர்கள் - ஆய்வாளர்கள் - கலைச்சொற்றொகுப்பு

ஆர்வலர்கள் எனும் வகைக்குட்பட்ட திறவோர் பதின்மர், எம் பல்கலைக்கழகத்தால் அழைக்கப்பெற்றிருந்தனர். (இவர்களிற் பெரும்பாலானவர்கள், புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியர் பெருமக்கள்.) அவர்கள் அனைவரும்-எம் தூயதமிழ் - சொல்லாக்க அகரமுதலிகள் துறைக்கண்ணேயே பத்துநாள்கள் அளவுக்கு வந்து தங்கியிருந்து, இருநூறு மூலவாய் நூல்களுள் பதிவுற்றிருந்த சொற்களை நிறைவாரத் தொகுத்து வழங்கினர். (தூய தொண்டுணர்வோடும் அறிவார்வத்தோடும் இதில் ஒன்றியிருந்து ஈடுபட்டு நன்கு வினையாற்றி உதவிச்சென்ற அப் பதின்மர் எவரும், - வந்து செல்வதற்குரிய போக்குவரத்துத் தொகையைக் கூட பெற்றுக் கொண்டாரிலர் என்பது, ஈண்டு நன்றியுணர்வோடு குறிக்கத் தக்கதாகும்.

தொகுப்புப் பணியில் இது, தொடக்கக் கணப்பணி! ...

எம் துறையில், இளநிலை ஆராய்ச்சிக் கல்வியராயிருந்த முனைவர். திருவாட்டி. மா. பார்வதியம்மாள், ஆய்வு உதவியாளராயிருந்த முனைவர். திருவாளர். ஆ. சண்முகம் என்னும் பெயரிய இருவரும் தொகுப்புப்பணி - அட்டைகளை அகரநிரற்படுத்தும் பணி முதலியவற்றில் துணைசெய்துவந்த தொடக்கவினையாளர்களாவர்.

புறத்துணைநிலையில் - இவ் வகையிலான சொற்றொகுப்புப் பணியரங்கு ஒன்று - விழுப்புரம் நகராட்சி மாளிகையிலும் நான்கு நாள்கள் நடைபெற்றது. விழுப்புரம் பகுதியிலுள்ள தமிழினநல ஓர்மையாளர்களும் - தமிழ்வளர்ச்சியாக்க நாட்ட வினைஞர்களுமாயுள்ள திருவாளர். விழுப்பரையனார், திருவாளர். அ. நக்கீரனார் என்னும் இருபெருமக்கள் பொறுப்பில்-ஓர் அறிவர்குழு ஆழ்ந்தியங்கி, ஐம்பது மூலவாய் அறிவியல்-கலையியல் நூல்களுக்கான சொற்றொகுப்புப் பணியைச் செய்தளித்து உதவியது.

பல்லடம் - அரசு உயர்நிலைப் பள்ளியுள் அறிவியலாசிரியராகப் பணியாற்றி வந்த ஆசான் திரு. ந. முத்துக்குமரனார், தம் பள்ளியுட் பயின்றுவந்த தேற்றமான மாணவர்கள் சிலரைத் துணையாகக் கொண்டு - தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு அக்கால் பாடங்களாயிருந்த அறிவியற் பாடநூல்கள் சிலவற்றுள் பயிலப்பெற்றிருந்த கலைச்சொற்களைத் தொகுக்கச் செய்து - இப் பணிக்கெனப் பயன்படுத்திக்கொள்ளவேண்டி - அவற்றை அனுப்பி யுதவினார். (அனுப்புதல் > அனுப்புதல்)

இது, தொடக்க முதற்கட்டப் பணிநிலை ! ....

2. இரண்டாம் பணிக்கட்ட நிலை :

தொடக்க முதற்பணிக்கட்ட நிலையுள் ஆக்கம் பெற்றிருந்த தொகுப்புச் சுவடிகளுள் பாரிய பதிவெய்தியிருந்த சொற்றொகுப்புகளிடையே அமைந்திருந்து நெருடிக் கொண்டிருந்த பிறமொழிச் சொற்கள் - நீளிய தொடரமைப்புச் சொற்கள் - பச்சைக் கொச்சைச்சொற்கள் - வெற்று எழுத்துப்பெயர்ப்புச் சொற்கள் முதலியனவற்றை இனங்கண்டு நீக்கியெறிந்துவிட்டு - மற்றிருந்த அத்துணைச் சொற்றொகுப்புகளையும் தனித்தனி அட்டைகளிலாகத் தட்டச்சீடுசெய்யும் பணி மேற்கொள்ளப்பெற்றது. இந்நிலையிலாகிய - பெரும்பங்குப் பணியில் ஈடுபாட்டொடு தோய்ந்து உழைத்தவர், எம் துறையில் தட்டச்சராகத் தொடக்கமுதல் இருந்தியங்கிய திரு. து. இரா. செனார்த்தனன் ஆவார்.

இது, இரண்டாம் பணிக்கட்ட நிலை ! ....

[முதற் பணிக்கட்டநிலைக்குள் அடங்கிய, தொகுப்புச் சுவடியாக ஆக்கம்செய்யும் நிலையும் - விடுபட்டிருந்த மிகப்பல கலைச்சொல் அகரமுதலிகளினின்று தேறித் தெரிந்தெடுத்துச் சொற்றொகுக்கும் தொடர்பணி நிலையும் - இடையிடையே இடைவிடாதேயே ஒருசேர நடந்து - இவ் விரண்டாம் பணிக்கட்ட நிலையுள் முறையுற இயக்க இணைவு கொண்டன.]

3. மூன்றாம் பணிக்கட்ட நிலை :

தனித்தனி அட்டைகளில் தட்டச்சீடு பெற்ற கலைச்சொற்களின் தொகுமொத்தக் குவிவு - மூவிலக்கம் (3,00,000) எண்ணிக்கைக்கும் மேற்படுமாறு நின்று நனிவியப்பையும் தனியுவப்பையும் ஏற்றியது!

[இத் தமிழகத்தும் - இலங்கையகத்தும் சற்றுஞ் சந்தடிபடாமல், ஓசையலம்பல் காட்டாமல் அறிவியல் - கலையியல் பயின்ற - பயிற்றுவித்து வந்த அறிவர்களாகிய ஆசிரியர்கள் ஆங்காங்கும் (கடந்து சென்ற 180 ஆண்டுக்கால அளவிடையே) முயன்று தெரிந்து இயற்றிய அறிவு முயற்சிகளுள் ஊடாடிப் பதிந்துநின்ற கலைச்சொல்லாக்கங்களின் தொகைக்கணமே - இம் மூவிலக்கத்துக்கும் மேற்பட்டுக் கணக்கும் அட்டைகளின் தொகுப்புக் குவிவாக இவ்வாறு மிளிர்கின்றது என்னும் தெள்ளுணர்வே எனக்கு ஏற்பட்டது. முறைப்படாததும் - நெறியஞ்சாராததும் ஆகிய முயற்சிகளிலேயே இத் தொகைவளப்பம் இன்னணமாகக் கணவுரு வாய்ந்திருக்கையில் - முறை சார்ந்தும் நெறிதேர்ந்தும் இவ்வினையானது இவ்வனைவோராலும் பின்பற்றப் பெற்றிருந்திருக்குமானால் எத்தகு பெருவளப்பகுதியை நந்தமிழ்மொழி இந்நிலையில் எய்தியிருக்கக்கூடும் (!) என்னும்படியான ஏக்கத் தாக்கமும் உள்ளுணர்விடையே ஒருபக்கம் ஊடாடி உறுத்தியது !]

அகரநிரற்படுமாறு அடுக்கும் பணி, அடுத்துத் தொடர்ந்தது. மூவிலக்கம் பதிவுகட்குரிய முறையடுக்கம் நிகழும் போதும் - அவற்றிற் பொருத்தமற்றனவாயிருந்த சில்லாயிரம் பதிவட்டைகள் புறந்தள்ளப் பெற்றன.

இவ்வாறு அகரநிரலில் அடுக்கும் வினைப்பாடு - இந்நிலையில் மூன்றாம் - பணிக்கட்ட நிலை !

4. நான்காம் பணிக்கட்டநிலை :

அகரநிரலில் அடுக்கம்பெற்றுவந்த அட்டைகள் படிப்படியே என் மிசையமிசை (= 'மேசை' மீது .

மெச (< போர்த்துக்கீசியம்) மெச = (தமிழ்ச்சொல்லாக்கம்) மிசையம் (< மிசை + அம்) ; மிசை) நிரலுற்று நின்றன.

கலைச்சொல் வகைமைகளின் பருமைநிலைகளும் - அமைவுமுறைகளும் தெளிவாகத் தெரிவுறத் தொடங்கிய முழுவாய்ப்பு நிலை - இவ் வினைப்பாட்டுத் தொடக்கத்தின் போதுதான் இயைய இயன்றது! ஓர் ஒற்றை ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு ஈடாகவெனச் செய்யப்பெற்றிருந்த பல்வேறுபட்ட வகைமைப் பதிவுகள் கலைச்சொற்போர்வையிலாகக் கிடந்த நிலைகள் திகைப்புறுத்தின! கலைச்சொல் ஒன்று, - அறிவியலுள்ளும் வாழ்வியலுள்ளும் பயன்பட்டுவர - பயன்பட்டுவர அதன் கருத்தமைவு நிலையிலும் படிப்படியே செறிவார்வு நிகழ்ந்துகொண்டே வந்துள்ள வளர்ச்சியாக்க வரலாறும் பிடிபடலாயிற்று.

இதுகாறும் வழிவழியே சிந்திக்கப்பெற்றவற்றிலிருந்து தேறியிருந்த நெறிமுறைகளுடனும - பிறவற்றிற்கு முறை தெளிந்து வகுத்துக்கொண்டிருந்த கலைச்சொல்லாக்க நெறிமுறைகளுடனும் தெரிவு - தேர்வு - தீர்வு ஆகியன நிகழத் தொடங்கின.

* இன்றைய அறிவியலில் அல்லது கலையியலில் நிறைவளர்ச்சிப் பொருளூட்டம் பெற்றுள்ள நேரிய சொற்களைத் தேர்ந்து தெரிவுசெய்தும் - அவ்வாறு நேரிதாகப் பொருளூட்டம் பெறாதிருந்தனவற்றைப் புறந்தள்ளிவிட்டு அவற்றுக்குரிய புத்தாக்கங்களைச் செய்தும் - அமைந்திருந்த தவற்றுப் பொருட்பதிவுகளை நீக்கியும் - வடமொழி முதலாகிய பிறமொழி வடிவங்களை அறவே தவிர்த்தும் - அவற்றுக்குரிய நேரிய செந்தமிழ் வடிவங்களைத் தெரிந்தெடுத்துப் புகுத்தியும் - முன்னமைந்து பயிலப் பெற்றுவரும் அரைகுறை முயற்சிகளைப் பற்றி ஆழ்ந்தாய்ந்து அவற்றுக்குரிய தெளிவமைந்த மாற்றுப் பதிவுகளைப் பதித்தும் - நூலாக்கத்தர்பலர் தத்தம் நூலாக்கங்களில் தன்விருப்பமாகச் செய்திருந்த சிக்கற்பதிவுகளை நீக்கியும் - கடுமையான பிழைப்பதிவுகளை முற்றவுங் களைந்தும் - கருத்தமைவு நோக்கி உரிய அடிப்படைச் செய்திகளை நன்கு தெளியவுணர்ந்து எளிய முறையிலாக அதற்குரிய நேரிய சொல்லை உருவாக்கிப் பதித்தும் - நெட்டநெடு நீளிய வடிவங்களாக நின்று மலைப்பும் மருள்பும் தந்து உறுத்திய தொடரணிச் சொல்லாக்கங்கள் பலவற்றிற்கு நேரிய சுருக்கவடிவங்கள் சமைத்தும் - கலைச் சொல்லாக்கங்களில் படிவெய்தியிருந்த பொருள்மயக்கங்களை நீக்கியும் - தெளிவான பொருட்பாட்டு நல்கைக்கேற்றவாறு கூட்டுச்சொற்களிடையே மிகப் பொருத்தமாக இடைக்கோடிட்டும் - ஏதோவொரு வகையில் தொடர்புற்ற குறிப்பீட்டிலாகப் பதிவுற்றிருந்த கலக்கமான கலைச்சொல் ஒன்றன் மாற்றிணைவடிவம் தெளிவாயிருப்பின் அதனடிப்படையில் எளிய முறையிலமையுமாறு உரிய புத்துரு தந்தும் - அறிஞர் பலரின் ஆக்கங்களாகப் பயில்விலுறும் பண்பட்ட பல்வேறு பயன்படுத்தங்களை நன்றியுணர்வோடு ஏற்று அவ்வுரிய சொற்களை முறையுறப் பதிவுசெய்தும் - வழக்கில் ஊன்றி நிலைகொண்டிருக்கும் சொற்களை அவ்வவ்வாறே ஏற்றுப் பதித்தும் - பெரும்பாலரும் இன்றளவுந் தொடர்ந்து பயின்று பயன்படுத்திவருவதாகிய துறைக்குரியார் பெயர்க்கு மதிப்புறவுப் பின்னொட்டாகச் சேர்த்த "ஆர்" ஈற்றால் ஏற்படுகின்ற கருத்துமயக்கப் பொருட்பாட்டைக் களையும் வகையிலாக "அர்" ஈறாக மட்டுமே இருந்தமையுமாறு அதனை மாற்றிச் சீர்மையும் ஓர்மையும் பெற அனைத்திடங்களிலும் திருத்தி நிறுத்தியும் - கால வளர்ச்சியில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் சொல்லுக்குரிய பொருள்வளர்ச்சியாக்கங்களைக் கூர்ந்து படித்தறிந்து, அதற்கேற்ப இன்றைய நடப்பில் இயன்று நிலைநிற்கும் பொருட்பாட்டுக்குரிய அளவில் அச் சொற்பொருளுக்கே உரிய திடத்திலான சொல்லுரு அமைத்தும் - துலக்கமிலாப் பொருட்பதிவுகளுக்குத் தெள்ளிய வடிவந் தந்தும் - புணர்ப்பில் பொருள் மயக்கங்காட்டி மருட்டும் சொற்களுக்குச் செப்பநிலையமைத்தும் - பலவற்றிற்குக் கடுநிலையற்ற எளிய நேரிடையான சொற்களைப் புனைந்தும் - கலைச்சொல் ஒன்றனுக்கு இணைபெறுமாறு மரபுச்சொல்லொன்று பயன்படுத்தப்பெற்று வந்திருப்பினும், அதனினும் சிறந்த புத்தாக்கச் சொல் ஏற்பட்டிருப்பின், பொருட்பாட்டு வலிவும் தெளிவும் நோக்கிப் பின்னதையே தெரிவுசெய்து நிலைக்குமாறு பதிவுறுத்தியும் - பண்டைப் பழம்வழக்குகளைக் கூர்ந்து கண்டு தெரிந்து அவற்றுக்கிணையான சொற்களுக்கு ஈடான இடங்களில் அவற்றை நேர்பெற நிறுத்தியும் - பச்சையான நேரிடை மொழிபெயர்ப்புச்சொற்களாகவே அமைந்து பயன் பாட்டிலிருந்துவருகின்ற அனைத்துக் கலைச்சொற்களையும் தவிர்த்துவிட்டு அவற்றுக்குரிய ஈடுகள் படைத்தும் - கருத்துக்குரிய கலைச்சொல்லுக்குரிய நேரிய செப்பநிலையில் உரிய சொல்லாக்கம் செய்யப்பெறாது ஏதோ ஒருவகையிலான குழப்படி முறையில் ஆக்கம்பெற்றுப் பயன்பாட்டிலிருக்கும் அனைத்துச் சொல்வடிவங்களையும் முற்றத் தவிர்த்துவிட்டு அவற்றுக்குரிய கருத்துப் பொருட்பாட்டுச் சொற்களை உருவாக்கிப் பிணைத்தும் - அயலகங்களினின்று இங்கு வந்து பயன்பாட்டிலிருக்கும் பல்வேறு பொருள்கள், உயிரிகள் முதலாயினவற்றிற்கு முற்றும் பொருந்திய - மரபு வகை உணர்வுகளால் நாட்டுப்புற மக்களிடையே உருத்தெழுந்துள்ள அரிய இனிய எளிய சொற்பயன்படுத்த வழக்காறுகளில் முறையாய் அமைந்துள்ளவற்றைத் தெரிவுசெய்து ஏற்றுப் பதித்தும் - ஒரு சிறிதும் முயற்சி மேற்கொள்ளாமலேயே அப்படியே எழுத்துப் பெயர்ப்பிலாகப் பதிவுசெய்து பயன்படுத்திவரப்பெறுகின்ற பன்னூற்றுக்கணக்கான பதிவுகளைக் களைந்தெறிந்தும் - வேண்டியவற்றுக்கெல்லாம் கருத்தியல் அடிப்படையிலான புத்தம் புதுக் கலைச்சொல்லாக்கங்களை வேரியல் நெறிமுறைகளின் வழிப்பட்டு உருவாக்கிப் பதித்தும் - கலைச்சொல் ஒன்று, தோற்றங்கொண்டிருக்கும் வகைப்பாடு, அடிப்படை முதலியனபற்றி ஆழ விளங்கிக் கொள்ளாமலேயே பயில்வார்க்குப் பொருளானது நன்கு விளங்கவேண்டும் என்பதற்கான கருதுகோள் எழுச்சிமட்டுங்கொண்டு மிகையான சொல்லை உடன் பிணித்து ஆக்கம் செய்து விடுத்துள்ள கூட்டுச் சொல்லால் நேர்ந்து நிற்கும் குழப்பங்களை உற்றறிந்து, அவற்றிலுள்ள உறுத்தி நிற்கும் மிகை களைந்து அளவாக்கியமைத்தும் - இன்றைய கருத்து வளர்ச்சியில் துலக்கப் பொருட்பாடு பெற்றிருப்பினும் தவற்றுக்கருத்து அடிப்படையிலாகுமாறு முன்னரேயே அமைக்கப்பெற்றுவிட்ட கலைச்சொற்கள் சிலவற்றைக்,

சூழற்சியிடையே நன்கு ஆழ வேரூன்றிப் பயில்வில் நிலைநின்றுவிட்டமை காரணமாகவும், இன்றைய கருத்துவளர்ச்சிக்கேற்ற பொருட்பாட்டில் கருதப் பெறுகின்றமை காரணமாகவும் அவற்றுள் மாற்றங்கள் எவற்றையும் மேற்கொள்ளாமலேயே அன்னன்னவாறே அமைந்திருக்கும்படியாக ஏற்றும் - ஒரு பொருட் பன்மொழிச் சொல்லொன்று கலைச்சொல்லாக நிற்குமிடத்து மயக்கப் பொருட்பாடு வாராதுநிற்கும் வகையில் தனிப்பொருள் தகைமை வாய்ந்த உரிய சொல் தெரிந்தெடுத்து அப் பயில்விடத்திற்கேற்பப் பாகுபட நிற்குமாறு பதித்தும் - பழந் தொல்வடிவத்தைப் புறத்தில் வைத்துவிட்டு, உரிய திரிபெய்தி நன்கு வழக்கில் ஊன்றிப் பயில்வில் பயன்பெற்றுவரும் வடிவத்தையே தெரிவுசெய்து சேர்த்தும் - அடிப்படைப் பொருண்மை கொண்டுள்ள கலைச்சொல்லொன்றுக்கு விரிவான பொருளமைவுள்ள கூட்டுச்சொல்லாக நிற்கும் கலைச்சொல்லாக்கத்தை இணையாக ஏற்றிக் குறிப்பிட்டுவரும் பிழைபாட்டு நிலையைத் தவிர்த்தும் - கொச்சைச் சொற்களை அறவே நீக்கியும் சுவடிகளில் தொகைப்படுத்துங் கடும்பணியை சற்றேறக்குறைய மூவாண்டுக்கால அளவிடையில் மிமிகப் பொறுப்பார்ந்த கவனத்துடனும் விழிப்புடனும் செய்து முடித்தேன்.

அகரநிரலில் அட்டைகளிற் பதிவெய்தியிருந்த மூவிலக்கத்துக்கும் மேற்பட்ட கலைச்சொற்குறிப்பீடுகள் யாவும் என் ஆய்வு நோக்குக்கு உட்பட்டு நிறைவெய்தின. அகரமுதலியாக்கத்தில் - இது நான்காம் பணிக்கட்ட நிலை!

5. ஐந்தாம் பணிக்கட்ட நிலை :

இவ் வகையில் - என் கையெழுத்துக்களாலமைந்த பணிச்சுவடிகள் மட்டும், தொகுமொத்தமாக இருபத்திரண்டு (22) எண்ணிக்கையினவாயின! அடுத்து, இம் மேற்குறித்த பணிச் சுவடிகள் ஒவ்வொன்றும் முறையே தனித்தாள்களில் தட்டச்சீடு பெறலாயின. ஒவ்வொரு தனித்தாளும்° சேர்ந்து 300 எனும் எண்ணிக்கைத் தொகையளவு பெற்றதும் - கட்டடம் செய்யப்பெற்றது. இவ்வாறு கட்டடம் செய்யப்பெற்ற நிலையில் - பத்துத்தொகுதிகள் என்னும் எண்ணிக்கையளவை எட்டியது. (எண்ணிக்கையளவில் இப் பத்துத் தொகுதிகளின் தட்டச்சீட்டுத் தாள்கள் 3030 பக்கங்களாக இருந்தன.)

இவ் வகையிலான பத்துத் தொகுதிகளையும் தட்டச்சீடு செய்தலில் மிகப் பெரும்பங்குப் பொறுப்பை எம் துறைத் தட்டச்சராகவிருந்து நன்கு பணியாற்றிய திருவாட்டி. செ. பிரேமாவதி நிறைவேற்றித் தந்தமை இவ்விடத்திற் குறிக்கத் தக்கதாகும்.

இவ் வாக்கத்தில், இது ஐந்தாம் பணிக்கட்ட நிலை!

6. ஆறாம் பணிக்கட்ட நிலை :

தனித் தொகுதிகளாகத் தட்டச்சீடு பெற்று வருகையிலேயே - முன்னரே விடுபட்டுப்போயிருந்த பல்வேறு அறிவியல் - கலையியல் நூல்களை நன்கு ஊன்றித் தெரிந்தெடுத்து, அவற்றினின்றும் சொற்கள் தொகுக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளலானேன். இன்றைக்குப் பேரளவிலாக மேம்பட்டு விரிவெய்தி எழுந்து நின்று பயன்நிறைவாரும் மருத்துவம் - கணிப்பொறியியல் முதலிய சிறப்பு அறிவியற்பகுதிகள் பாங்கில், தமிழில் இதுவரை முயற்சிகள் மேற்கொள்ளப்பெறாதிருக்கும் கலைச்சொற்களுக்குரிய விளக்கக் குறிப்புகளைப் படித்தும், ஆய்ந்தெண்ணியும், துறைத்தொடர்புடையாரிடம் ஐயப் பகுதிகள்பற்றி உசாவியறிந்தும் உரிய நேரிய சொல்லாக்கங்களைப் படிப்படியே புனைந்து தனிச் சுவடியிட்டுக் குறித்துவரலானேன். விரைவாகவும், அதேபொழுதில் அமைவாகவும், இடைவிடாது தொடர்ந்தும் - இவ் அகரமுதலியைச் செறிவாக்கும்- இவ்வகையில் எச்சங்கொண்டிருந்த விடுபாட்டுப் பணிகள் யாவற்றிலும் ஆழ்ந்து ஈடுபட்டு வரலானேன்

வேர்ச்சொல் அடிப்படையிலான புத்தம் புதிய கலைச்சொல்லாக்கங்கள் பலவற்றை, மேலும் தொடர்ந்து செய்து வந்தேன். இடையிடையே அப் பத்துத் தொகுதிகளுள்ளும் பிழைபாடுகளை எய்திருந்த கலைச்சொற்கள் பலவற்றுக்கும் உரிய திருத்தங்களை நெறிச்சீர்மைப்படுத்த அடிப்படையில் மேற்கொண்டு வந்தேன்.

அறிவியலறிஞர். தெ. செவ்வியன், அறிஞர். சா. செழியன், அறிவியலறிஞர் கோ. பரிதியப்பன், ஆசிரியர் சீ. கருணாமூர்த்தி, பூதியல் ஆராய்ச்சியாளர் - தே. பாலமுருகன் என்னும் ஐந்து திறவோரிடம், பல்வேறு அறிவியல்-கலையியல் அகரமுதலிகளிற் பதிவுற்றிருந்தும் இவற்றுள் பதிவுறாதனவாயிருக்கும் கலைச்சொற்கள் எவையெவை யெனக் கண்டு அச்சொற்களையும் அவற்றுக்குரிய விளக்கப் பொருள்களையும் எதிர்ப்பக்கத்தில் அமைத்துக் குறித்துத் தந்துதவுமாறு வேண்டி அப் பத்துத் தொகுதிகளையும் ஒப்படைத்திருந்தேன். (அத் தகுவினைப்பாட்டுக்கு இன்றியமையாத், தேவையானவாயிருந்த, சற்றேறக்குறைய ஐம்பது புத்தம்புதிய கருவிநூல்களான அகரமுதலிகளை அறிஞர். சா. செழியன் அவர்கள் - தம் சொந்தச் செலவில் குழுவுக்கு வாங்கியளித்தமை இவ்விடத்தில் நன்றியுணர்வோடு எண்ணத்தக்க செய்தியாகும். சற்றேறக் குறைய ஒன்றரையாண்டுக் காலம் அப்பெருமக்கள் ஐவரும் நந்தமிழ்மண்ணகத்தரின் அறிவுநலவளச் செழிப்பு நோக்கித் தந்நலம் வேளாத தூய நல்லுணர்வுடனும் பெருவிருப்பத்துடனும் பெரிதும் முயன்றுழைத்து அப் பணியினைச் செவ்வனே முடித்து என்பால் ஒப்படைத்த பின்னர் - அவற்றை ஊன்றிப் படித்துப் பார்த்து உரிய ஆக்கங்களைத் தொகுத்தும் படைத்தும் உரிய இடங்களில் சேர்த்து வரலானேன். தமிழில் வெளிவந்துள்ள கலைச்சொல் - அகரமுதலிகள் சிலவற்றில் தொகுப்பெய்தியிருந்தும் இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் பதிவுறாதனவாயிருந்த செப்பச் சொற்கள் பலவற்றையும் உடன் தொகுத்துவரலானேன்.

வேதியற் கலைச்சொற்களில் கவனஞ்செலுத்தி முறையான கலைச்சொல்லாக்க முயற்சிகளை நூலாக்கத்தர் பெரும்பாலரும் மேற்கொள்ளாதிருந்தமையால் - அவ்

வேதியல் தமிழ்க் கலைச்சொற்களுள் மிகப் பெரும்பான்மையினவும் எழுத்துப் பெயர்ப்பிலேயே (ஒலிபெயர்ப்பிலேயே) அமைந்திருந்தன. சற்றேறக்குறைய ஓராண்டளவுக்காலம் வேதியல் அறிவர்களுடன் அவ்வப் பொழுது கலந்துரையாடி அவற்றுக்குரிய வரையறுப்பான தீர்வுகளை இந்நிலையில் பெறவேண்டியிருந்தது.

தனிப் பெயர்களும் - அடிப்படை வேதியற்பெயர்களும் ஆக்கம் பெறப் பெற - மற்றிருந்த பெரும்பான்மைச் சொற்களும் - இதனுள் நேரிய சொல்லாக்கங்களைப் படிப்படியே பெற்றுத் தமிழ்த் தகைமையெய்தின ; தனிப்பெறத் தொகுக்கப்பெற்றன. முன்னைய பத்துத் தொகுப்புமடலங்களுள் இத் தொகைச் சொற்கள் யாவும் முறையுறச் சேர்க்கப் பெற்றன. சீர்மைநோக்கிய பல்வேறு திருத்தங்களும் உடன் மேற்கொள்ளப்பெற்று வந்தன.

[சென்னைத் தொலைத்தொடர்புத்துறை ஒன்றச்சுப் பொறிஞர் - திரு. தெ. தமிழநம்பி, செங்கம் - நயன் துறை நடுவர் மாண்புமிகு - சி. சுப்பையன் - புதுச்சேரி வில்லியனூர் அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி ஆசிரியர் - அறிவியலறிஞர். திரு. கோ. அரவிந்தன் என்னும் வல்லுநர்கள் மூவரும் பத்துநாள்கள் அளவுக்குப் பல்கலைக் கழகப் புலவிருந்தக அரங்க அவையுள் தொடர்ந்து அமர்ந்து நுண்ணாய்வு செய்து இவ் ஆக்கத்தின் நிறைவினைச் சான்றிட்டுச் சென்றனர். அப் பெருமக்கள் மூவர்க்கும் இந்நூலின் ஆக்கத்தன் என்ற முறையில் ஈண்டு நன்றி தெரிவிப்பது என் கடமையாகும்.]

இதன் பிறகு, கணிப்பொறிவழி ஆக்கத்திற்கெனவும் மேம்படுபெடுப்புக்கெனவும் கலைச் சொற்றொகுப்புக் கட்டடச் சுவடிகள் அளிக்கப் பெற்றன.

அகரமுதலியாக்கத்தில், இது ஆறாம் பணிக்கட்டநிலை!

7. ஏழாம் பணிக்கட்டநிலை :

கணிப்பொறிவழி மேம்படியாக்கப் பணி ஆணையை ஏற்று,மிகப்பொறுமையோடும் விருப்பார்ந்த ஈடுபாட்டோடும் இப் பணியை மேற்கொண்டு சிறப்புறப் பாடாற்றிவந்த பெருமைக்குரியவர் திருவாளர். து. வெங்கடேசன் ஆவார். சென்னைக் கணித்தொழில் நிறுவகத்தின் பொறுப்பாளரும் உரிமையாளருமான இவர், இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியின் செப்பவுரு அமைவுக்கென அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஆற்றிய பணிகள் நன்கு நினைவுகூர்ந்து போற்றத்தக்கன ஆகும். [இவ் அகரமுதலியுள் படிவுகொள்ளும் எழுத்தமைவானது மிகவும் தெளிவு நோக்கியதாக இருத்தல் வேண்டும் என்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தி - எவ்வவ்வளவிலான புள்ளிகள் நிலையில் இக் கலைச்சொற்களின் பதிவுமுறை அமைந்திலங்கவேண்டும் என்பதற்கு வழிகாட்டி அறுதிசெய்தளித்தவர், திருவாளர். க. குணத்தொகையன் ஆவார்.]

தொகுப்பு மடலப் பக்கங்கள் ஒவ்வொன்றும், படிப்படியே கணிப்பொறிக்குள்ளிறங்கிப் படிகளாய்ப் புறம்வந்தன. தூதஞ்சல் வழியே தொடர்ந்து அனுப்பப் பெற்று அடுக்கமெய்தின.

திருத்தங்களெய்திய தொகுப்பு மடலங்களுள் அடங்கியிருந்த முன்னைய தட்டச்சுப் படிகளுடன் - வந்துற்ற கணிப்பொறிப் படிகளை ஒப்புநோக்கிச் செப்பஞ்செய்ய வேண்டிய பெருங்கடுஞ்சுமைப் பணி - எம் முன் கணங்கொண்டு நின்றது. இத் தகுதிருத்தப் பெருந்துயர் வன்பணிக்காக உடனின்று, நிலைகொண்டு, சுவலேற்று, கருத்தூன்றித் தொடர்ந்து (தொடக்கத்திருந்து அறுதிவரையிலுமாக) அருங்கடப்பாடாற்றியோரில் அறிவியலறிஞர்.தெ.செவ்வியன், அறிஞர். சா. செழியன், அறிவியலறிஞர். கோ. பரிதியப்பன் ஆகிய முப்பெருமக்களும் முதலாம் நிலையினர் ஆவர். கற்றுச்சூழல் விழிப்பியக்க வினைஞர் - பாவலர். சீனு. தமிழ்மணி, குமுகப் பாவலர். சீனு.தமிழ்நெஞ்சன், ஆசிரியர்.சீ. கருணாமூர்த்தி, ஆசிரியர். அரிமாப் பாண்டியன், திருவாளர். கு. இளங்கோ, திருவாளர். க. குணத்தொகையன் ஆகியோர் அவ்வக்கால் உடனிருந்து துணைநின்றமையும் இவ்விடத்தில் நன்றியுணர்வோடு பதிவுசெய்யத்தக்கதாகும். பள்ளித் தலைமையாசிரியர் எ.சிவானந்தம் அவர்கள் இவ்வினைக்கால ஊக்கத்துணையாக உடனிருந்தமையும் இவ்விடத்தில் ஒருசேர நினையத் தக்கதாகும்.

மேற்குறித்த இத் திருத்தப்பணி - இருமுறை நடந்தேறியது. அறுதித் திருத்தமான மூன்றாம்முறைத் திருத்தப்பணியை நிறைசெறிவாருங் கவனவிழிப்பொடும் முழு அறிவுத்துணைச் சூழ்வொடும் அமைத்துக்கொள்ளத் திட்டமிட்டேன். புதுச்சேரி மாநிலத்தடங்கிய முத்தரையர்பாளையம் என்னும் ஊருள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தொண்டுச்செம்மல் திருவாளர் க. குணத்தொகையன் அவர்களால், இவ் வகை ஆய்வுப் பணித்துணைகளுக்கெனவே தன்னலங்கருதாது தமிழ்நலம் மட்டுமே கருதிய பெருநல்லுணர்வொடு அமைத்துத் தரப்பெற்றுள்ள அகராதியகத்துள் இரு - கணிப்பொறிகள் பொருத்தப்பெற்றன. அறுதித் திருத்தப் பணிக்கான கணி வினைஞர்களாகத் திரு. இரா. சு. குமாரசாமியும், திரு. நா. கமலச்செல்வமும் வினைத்திறச் செல்வங்களாக இயல்பாகவே வந்தியைந்து பாடாற்றலாயினர். கணிப்பொறிகளைச் சூழ்ந்து - தூய ஈடிணையற்ற எம் அறிவர்குழாம் அறிவார்வத்தொடு ஆயமிட்டது! (அக்கூட்டுக் காட்சி, பெரும்பேரழகு வாய்ந்த ஒன்றாகும்!)

ஒவ்வொரு சொல்லுள்ளும் அமைந்திருந்த எழுத்தமைதி - கருத்தமைதி - துறைப்பெயர் வகுப்பமைதி முதலியன யாவும் மீண்டும் மீண்டும் பன்முனைக் கோணங்களில் எம் அறிவாயத்தால் இக்கால் உற்றும் உறுத்தும் நோக்கப் பெற்றன! பன்னூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையளவிலாக - இலைமறை காய்களன்ன நிலையமைவில் உட்பட்டிருந்த - எழுத்துப்பிழைகள் - நெறிமுறை நெகிழ்வூறுகள் ஆகியன நீக்கப்பெற்றன. மிகப் பல்லிடங்களில், புத்துயிர்ப்புகளும் ஊட்டப்பெற்றன.

என்னினும் நனிமிகத் துருவித் துருவி நோடுந்திற வன்மைசான்ற எம் தூய பெருந்தகை அறிஞர். சா.செழியன், சற்றுஞ் சளைப்புங் களைப்புமின்றிக் கண்ணுறக்கம் பசியெழுச்சி முதலியனவற்றைக்கூடப் பெரிதும் பொருட்படுத்தாது, கணிப்பொறித்திரையையே தன் கண்களால் ஆரப் பற்றிப் பிழைகளைக் களைந்து

பொறுப்பார்ந்த உழைப்புத்திற மேலாண்மைக்கு இத் தொகை நூலாற் பயன்பெறும் ஒவ்வோர் அறிவாண்மையரும் நன்றிசெலுத்தியாகல் வேண்டும் ! அவ்வளவுக்கு இச்சிறப்பாக்கத்திற்கெனத் தனிப் பொறுப்பீடுபாடும் மீக்கவனமும் நுண்திறக் கூர்மையுங் கொண்ட துணையுழைப்பெடுத்தவர், அவர் ! இத்திறச் செழியர்க்கு அருளியின் அன்பு நெஞ்ச வயலில் என்றும் வாடவே வாடாத தூய நன்றிமல்லிகையிணர் ஒன்று,- இனிய நறு நன்மணத்தை இறுதிவரைக்கும் பரப்பிக்கொண்டிருக்கும்!

அயிரக்கல் தொலைவில் (kilometre) நாற்பதுக்கும் மேற்பட்ட தொலைவிலிருந்து நூற்றைம்பது எண்ணிக்கையளவுக்கும் மேற்பட்ட தடவைகளாக,- மீண்டும் மீண்டும் தற்செலவு மேற்கொண்டு - இச் செப்பப்படுத்தப் பணிக்கென உழைப்பெடுப்பதற்காகப் புதுவை அகராதியகத்திற்கு வந்து-வந்து இயங்கிவிட்டுச் சென்ற அமைதிவாரியன்ன (Pacific Ocean) தமிழினநல இயல்பினராய அறிவியலறிஞர். தெ. செவ்வியன் அவர்களின் கூர்நோக்குத் திறப் பயிற்சிகளினின்றெழுந்த துரப்பணவினைக் கேள்விகளால் - அவரே மிகப்பன்முறையளித்த உரிய சீர்விளக்கங்களால் இந்நூலுள் அமைந்திருந்த சிக்கற்பாட்டிடங்களில் மிகப்பல, புரைநீக்கம் பெற்றுப் பொலிவேற்றம் வாய்ந்துள்ளன !

அறிவியலறிஞர் கோ. பரிதியப்பனின் முப்பத்தாண்டுக்காலமாக அறிவியல் நூல்களுள்ளும் - செய்திகளுள்ளும் கருத்தூன்றித் தோய்ந்துறையும் அறிவுமனம் - கருத்துத் துலக்கத்திற்கென வேண்டி- எம் அறிவாயத்தைச் சார்ந்த அனைவரோடும் அவ்வப்போது பொறுமை மீறி, வெகுளியேறி-மனவேறுபாடற்ற கருத்துவேறுபாட்டு அழுத்தத்துடன் உரத்துரைத்துப் போர் தொடுத்த அழகுகள் . . . . . எண்ண எண்ண இன்பந்தந்தினிக்கும் தகைமையின !

தலைசிறந்த அறிவுப்பெருந்தகையராகிய இப்பெருமக்கள் மூவரின் நெடுந்தொடர் ஈடுபாடுகளுடன் - திரு. சீனு. தமிழ்மணி , திரு. சீனு. தமிழ்நெஞ்சன், ஆசிரியர் - திரு. அரிமாப்பாண்டியன் , திரு. கு. இளங்கோ ஆகியோரின் பொறுப்பார்ந்த ஈடுபாடுகளும் ஒன்றுசேர்ந்தே இத் திறச் சிறப்புத் தொகைநூலின் அகப்பொலிவுகள் யாவும் ஊட்டமும் ஊற்றமும் உயிர்ப்பும் உறுதியும் உற்று நிறைந்துள்ளன என்னும் உண்மையை, ஈண்டு அனைவர்க்கும் அறிவித்தாக வேண்டியது, பொறுப்பாண்மையனாகிய என் தலையாய கடப்பாடாகும் !

இவ் அடிப்படைகளில் நிறைவெய்திய அறுதி நிலை,- ஏழாம் பணிக்கட்ட நிலையதாகும்.

8. எட்டாம் பணிக்கட்ட நிலை :

ஈண்டு , இவ்வாறாக மேற்குறித்துச் சுட்டப்பெற்ற எழுபெரும் பணிக்கட்டங்களைத் தாண்டியே, இத் திருநூல். - இங்ஙனமாக எட்டாங் கட்டப் பணிக்கடப்பாட்டுக்குரிய பதிப்பகம் நுழைந்து, ஆங்கு உழைக்கும் திறப்பணிஞர்களால் உருப்பெருமை உற்றுத் திகழ்கின்றது.

துறைப்பெயர்களுள் ஓரியற்கருத்தின்மை, செப்பமின்மை பற்றிய நோக்கு :

அறிவுநுட்பம் மிகவும் கூர்த்த வளர்ச்சியெய்திக் கொண்டிருக்கும் விரைவார்ந்த அறிவியற்சூழல் வாய்ப்புடைய சிறப்பாருஞ் செங்காலத்திடையே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நொடிக்கு நொடி அறிவானது விளர்ந்து விரிவடைந்துவரும் இக் காலத்தில் தாய்மொழிவழியாலேயே அறிவு பெறவேண்டிய இன்றியமையாத் தேவையை உணரத் தலைப்பட்டுள்ள அறிவெழுச்சியோடு கூடிய விழிப்பு - மிகக் காலங் கடந்த நிலையில் நமக்குத் தோன்றியுள்ளது !

தமிழக மக்களின் கல்வி வளர்ச்சி - அறிவு வளர்ச்சி முதலியன பற்றிக் கவலையும் அக்கறையும் கொண்டு பாடநூல்கள் யாவற்றையும் செம்மையாக வெளிப்படுத்தியாகல் வேண்டும் என்று துடிதுடிக்கின்ற நாம் - அவற்றுக்குரிய மிகப் பன்னூற்றுக்கணக்கான புலத் துறைகளாகிய கலைகளுக்குரிய தலைப்புகளுக்கான நேரிய - தெளிவார்ந்த - பொருத்தப்பாடமைந்த தமிழ்க் கலைச்சொல்லாக்கங்களைப் பற்றி இன்றும் முறையாக முயற்சி மேற்கொள்ளவும் பெறாதுள்ள ஓர் அவலநிலை ஈண்டு, ஆழ அடியூன்றிக் கிடக்கின்றமையைப்பற்றி மனத்தாலும் - அறிவாலும் எண்ணிப்பாராமலேயே கிடக்கின்றோம் !

[* 1. அசைவற்ற நிலையில் ஒருபொருள் அமைந்திருக்குமானால், அதனை வேறு புறவிசை எதுவும் தாக்காதவரையில் - அப் பொருளானது அசைவற்ற அமைதிநிலையிலேயே கிடக்கும். ஒரே சீரான வேகத்தில் (uniform speed) ஒரே நேர்கோட்டிலேயே சென்று கொண்டிருக்கும் ஒரு பொருள், அதை வேறு புறவிசை எதுவும் தாக்காதவரையில் - அப் பொருளானது தான் சென்றுகொண்டிருக்கும் அதே சீரான வேகத்தில் அதே நேர்கோட்டில் சென்றுகொண்டிருந்தவாறே சென்று கொண்டிருக்கும் . இது "நிலைமநெறி" (Law of inertia) என்னப்பெறும்.

2. "உந்தம் வேறுபடுந் தகவு" (Rate of change of momentum) புறவிசைக்கு நேர்விழுக்காட்டுத் தகைமையில் - அப் புறவிசையின் திசையிலேயே வேறுபட்டவாறு நிகழ்வெய்தும்.

3. வினையும் அல்லது விசையும் - எதிர்வினையும் அல்லது எதிர்விசையும் நேர் - எதிர்த்திசைகளின் பொழுது ஒரே தகைமைநிலையை - ஒரே தகைமை அளவைப் பெற்றிருக்கும்.

மேற்கட்டியுள்ள முந்நெறிகளும் -இயக்கெந்திரவியலின் நெறிகளை முந்தையிலேயே ஓரளவுக்குச் செப்பமுற வகுத்து முற்படுத்திய கணக்கியலறிஞரான "ஐசக்கு நியூட்டன்" என்னும் ஆங்கிலேயரால் (1642 - 1727) நிறுவப் பெற்றவை யாகும்.

ஒருபொருளின் மீது - விசை தாக்குறும்பொழுது, அதன்வழி - அவ் விசைத்தாக்கத்திற்குட்பட்ட பொருளானது ஒய்வுற்று நிலைப்புற நிற்கலாம்! இல்லையானால், அப்பொருளில் இயக்கநிலை தோற்றுவிக்கப்பெறலாம் ! அதுவும் இல்லையானால் முன்னையிலிருந்து இயங்கிவந்த இயக்கம் மாற்றம் பெறலாம்! இம் முந்நிலைகளில் ஏதோவொன்று அதனில் நிகழ்ந்தே தீரும்!

விசைகளின் தாக்கத்திற்குட்பட்ட ஒருபொருள் ஒய்வுற்றநிலையில் நிலைப்புற்றிருக்க விசைகள் அமைந்திருக்கையில் - அப்பொருளின் மீது தாக்கம் நிகழ்த்திய விசையின் வினையளவுகள் குறித்து விளக்குகின்ற அறிவியலே, - "நிலைப்பியல்" (statics) என்பதாகும். இதாவது, விசைகளால் தாக்கம் பெற்ற பொருள் இடப்பெயர்வற்று - நிலைபெயர்வற்று - அசைவென்பதேயற்று இருந்த நிலையிலேயே இருப்பின் அது " நிலைப்பியல் " ஆகும்.

(Kinematics :) இயக்கவியல்

பொருள்களின் இயக்கத்தைப்பற்றிய ஆய்வியல் - "இயக்கவியல்" ஆகும். இயக்கத்திற்குக் காரணமான விசை மற்றும் திறன் முதலியனவற்றைப்பற்றிக் கருதாமல் - பொருள்கள் இயங்கும்போது - அதனின் பலவகையான இயக்கப் பாதைகளின் வடிவமைப்பளவியலை ஆராயும் பகுதியாகும், இது!

(Kinetics :) இயக்கத்தாக்கியல்

பொருள்களின் இயக்கங்களுக்கும் - அவற்றின் மீது செயற்படுகின்ற விசை மற்றும் திறன், ஆற்றல் முதலியவற்றின் தாக்கங்களுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி ஆராயும் ஆய்வியல் - "இயக்கத்தாக்கியல்" ஆகும்.

(Dynamics :) துனைமவியல்

பொருள்களின் மீது விசைகளின் தாக்கத்திற்குக் காரணமாக இயக்கம் ஏற்படுவதைப்பற்றிக் கூறும், - ஆராயும் ஆய்வியல் - "துனைமவியல்" ஆகும்.

ஆக, - இயக்கவியலும், இயக்கத்தாக்கியலும் ஆகிய இருவேறு பெரும்பிரிவுகள் ஒன்றிணைந்தியையும் விசைத்தாக்கியக்க ஆய்வியலாக இப் பென்னம்பெரிய "துனைமவியல்" இயல்கின்றது.

துனைமவியலின் இருகூறுகளில் ஒன்று-"இயக்கவியல்"; மற்றொன்று, "இயக்கத்தாக்கியல்"!

[* விரைவையும் விரைந்த செயலியக்கத்தையும், விரைந்த வினையாண்மையையும் சுட்டுவதற்குரிய கருப்பொருளைத் தன்னகத்தே கொண்டிலங்கும் "துனை" என்னும் அடிச்சொல்லினின்று (துனை + ம் + அம் >) "துனைமம்" என்றவாறு ஒருசொற்செப்பப் புனைவை உருவாக்கிக் கொண்டு, அப் புனைவாக்கத்தினின்று " Dynamics" என்னும் ஆங்கிலக்கலைச்சொல்லுக்கு நேரிதாக நிற்குமாறு "துனைமவியல்" என்னும் இவ்வியற்பெயர் உருவாக்கப்பெற்று ஈங்குச் சுட்டப்பெறுகின்றது]

[* "துனைவு" காண்க :

(1) "கதழ்வும் துனைவும் விரைவின் பொருள"
(தொல்.சொல் : 8:7)

(2) "துனைவு நொறிலும் விசையு முடுகலும் வேகமும் விரைவே" (பிங்கலம் : 2194)

விசை, வேகம், ஆற்றல் முதலிய பொருள்களை உள்ளடக்கியவாறு வளர்ந்து நின்ற "துனைவு" என்னும் பழம்பழைய செந்தமிழ்ச் சொல்லின் திரிபாகிய "dunamis" என்னும் கிரேக்கச்சொல் வழியாகவே - dynamic, dynamics, dynamism, dynamo போன்றனவாகிய பல்வேறு ஆங்கிலக் கலைச்சொற்பயில்வுகள் விளர்ந்துள்ளமையும் இவ்விடத்தே கருதத் தக்கது.)

எந்திரச் சூழ்வார்ந்தியங்கும் இவ் அறிவியல் விரைவுலகில் - இத் துனைமவியலின் கோட்பாடுகள் யாவும் அடிப்படைத் தேவைகளாகுவன. பூதியல் (Physics) வானியல் (Astronomy) ஆகியன பற்றி அறியவும் - ஆயவும் முற்படுகின்ற எவர்க்கும் இதன் கோட்பாடுகளிற் பலவும் அடிப்படைத் தேவைகளாயுள்ளன.

துனைமவியலிற் பின்பற்றப்பெறும் ஏரணவியல் நெறிகளும் (logical principles) செயன்முறைகளும் கணக்கியலறிஞர்களுக்கும் பயன்தரத்தக்க பாங்குடையன.

இத் துனைமவியலும் இதனின் இரட்டைப் பெருங்கூறுகளான இயக்கவியலும் - இயக்கத்தாக்கியலும் மிகப் பல்வேறு அறிவியல் விளைச்சல்களுக்கும் ஆய்வு வினைகளுக்கும் அடிப்படை அறிவிலக்கணப் பகுதிகள் ஆகுவன!

இதுவரையிலுமாக - இம் மேற்குறித்துள்ள அறிவிலக்கண இயற்பிரிவுகளுக்கான தலைப்புகள் ஆராயப்பெற்றன.

நிலைப்பியல் (Statics) - துனைமவியல் (Dynamics) ஆகிய இரு பெருங்கூறுகளும் சேர்ந்த பேரியலே - இயக்கெந்திரவியல் (Mechanics) ஆகும்.

ஒரு பொருளானது ஒய்வுற்ற நிலையில் நிலைப்புற்றிருக்குமாறு அதனில் விசைத்தாக்கம் நிகழ்கையில் - அவ் விசையின் வினையளவுகளின் விளக்கங்களைப் பற்றிய இவ் ஆய்வியலை, "நிலையியல்" (காண்க : த.பா.நி. வெளியீடு:1972) என்பதனினும், - "நிலை அமைவியல்" (காண்க : செ.ப.க : ஆ. த. சொ : ப:996) என்பதனினும், "நிலைப்பியல்" என்பதுவே பொருட்செறிவும் கருத்துத்துலக்கமுங் கொண்ட சிறந்த குறிப்பீடாக அமையும்.

நிலைப்பியலும் (Statics) , - இயக்கவியல் (Kinematics) இயக்கத்தாக்கியல் (Kinetics) ஆகிய இருபெரும்பிரிவுகளை உள்ளடக்கியுள்ள துனைமவியலும் (Dynamics) ஒருசேர அடங்கியுள்ள இயக்கெந்திரவியலைச் (Mechanics) சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் பக்கம் - 626 - இல் (Mechanics =) "இயக்கியல்" என்றவாறு மிகமிகப் பிழைபாட்டொடு துறைப்பெயராகச் சுட்டிவிட்டு - அதன் மேலுமாகப் "பிழம்பின் மீது இயக்கத் தாக்குதல்பற்றி ஆயும் ஆய்வியல் துறை" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

"Dynamics" என்பதற்குரிய கலைச்சொல்லாக்கங்களாகச் செ. ப. க. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் (ப : 334) "விசை இயக்கவியல்" என்றும் - "கலைக்கதிர்" வெளியீடான தலைச்சொல் அகராதி (ப: 15) "இயக்கவியல்" என்றும் இருவேறு பதிவுகளைச் செய்துவைத்துள்ளன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 265 -ஆம் அறிவியல் வெளியீடாகிய "Dynamics" என்னும் பெயரிய கல்லூரிப்பட்டப்படிப்புக்குரிய மகமைநிலைப் பாடப் பொத்தகம் (Major - Text book) - 1971 - ஆம் ஆண்டு சூன் திங்களில், திரு. ஆர். மகாதேவன், திரு. க. சிவகப்பிரமணியம், திரு. ப. இரா. சுப்பிரமணியம் என்னும் பெயரிய ஆசிரியர் பெருமக்கள் மூவரைக்கொண்டு "இயக்கவியல்" என்னும் தலைப்பில் இயற்றப்பெற்று 391 பக்கங்களடங்கிய தொகைப் பொத்தகமாக வெளியிடப்பெற்றது.

அடுத்து - அதே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 302- . ஆம் அறிவியல் வெளியீடான "Dynamics" என்னும் அதே கல்லூரிப் பட்டப்படிப்புக்குரிய மகமைநிலைப் பாடப்பொத்தகம் - (அடுத்த ஆண்டாகிய -) 1972 - மார்ச்சு மாதத்தில் - திரு. கே. இராசகோபாலன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு இயற்றப்பெற்று, "இயக்கவிசையியல்" என்றவாறான மற்றுமொரு புதிய தலைப்பிலாக மாற்றுறுத்திய நிலையொடு வெளியிடப்பெற்றது.

ஆக - இந்நிலையில், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மேற்குறித்துள்ள இருநூல்களின் உள்ளும் - புறத்தும் " Dynamics " என்னும் ஒரே இயலானது, - முதற்கண் "இயக்கவியல்" என்றவாறு குறிப்பிடப்பெற்று - அடுத்துவந்த ஒன்பது மாதங்களுக்குள் "இயக்கவிசையியல்" என்றவாறு மாற்றம்பெற்றுள்ளது. ("இயக்கவிசையியல்" என்னும் இம் மாற்றுப் பெயரீடும் - சென்னைப் பல்கலைக்கழக ஆ. த. சொ. பக்கம் : 334 - இல் ஆக்கப்படுத்திப் பதிப்புறுத்தியுள்ள "விசையியக்கவியல்" என்னும் கலைச்சொல்லமைப்பை முன்னிறுத்தித் - தலைப் பகுதியாக இலங்கும் "விசை" என்னுஞ் சொல்லைப் பெயர்த்தெடுத்து இடையீடாகவிட்டுப் பிணைத்து மாற்றமாக்கியுள்ள பெயரே அன்றிப் - புத்தம்புதிய வேறொன்றும் அன்று; கருத்துத் துலக்கத்திற்காக ஆய்ந்தெடுத்து நிறுத்திவிட்ட சொல்லாக்கமும் அன்று!)

" கலைக்கதிர் " வெளியீடான கலைச்சொல் அகராதியின் முதற்பகுதியுள் - 15 ஆம் பக்கத்தில் " Dynamics " என்பதற்கு "இயக்கவியல்" என்னும் கலைச்சொல்லும் - அதே பகுதியுள் 26 - ஆம் பக்கத்தில் " Kinematics " என்பதற்கு "இயக்கவியல்" என்னும் அதே கலைச்சொல்லும் -" Kinetics " என்பதற்கு - முற்சுட்டியுள்ள Dynamics, Kinematics ஆகிய இருவேறு தனிச்சொற்களுக்கும் உரியதாகக் குறிப்பிடப் பெற்றிருக்கும் அதே "இயக்கவியல்" என்னும் கலைச்சொல்லும் மீண்டும் மீண்டும் அழுத்தமாகப் பதிவுசெய்யப்பெற்று நிலை (!) நிறுத்தப்பெற்றுள்ளன!

இந் நிலை (!) நிறுத்தப்பாட்டின்படிப் பார்த்தால், - Kinetics, Kinematics, Dynamics என்றுள்ள தனித்தனியான இயல்பிரிவுகளை "இயக்கவியல்" என்ற ஒற்றைக் கலைச்சொல்லாலேயே குறிப்பிடவேண்டும் என்றாகின்றது ! இவை யாவும், ஒரே துறையின் வேறுவேறு ஆங்கிலப்பெயர்கள் என்பது போன்ற ஒரு பெருங் கருத்துக் குழப்பமே இதன்வழி விளைக்கப்பெற்றுள்ளது. (ஒருபொருட் பன்மொழிகளென இம் முப்பிரிவுத் துறைக் கலைச்சொற்களும் இதன்வழி ஒரு கூட்டுக்குள்ளேயே அடைக்கப்பெற்றுள்ளன !..?) இதன் விளைவுகளை , இதன் பின் தொடர்ந்த பல்வேறு அறிவியற்பொத்தகங்களிலும் பரவலாகவும் - விரவலாகவும் காணவியல்கின்றது!

இந்நிலைகளின் செப்பம் நோக்கிய திருத்தப்பாடுகள் :

பொருள் மற்றும் ஆற்றல் இவற்றுக்கிடையிலான ஊடெழுவினைகள் பற்றியதும் - பொருள்களோடு தொடர்புடையதுமான ஆய்வியலாகிய Physics என்னப்பெறும் ஓர் அறிவியற்பிரிவு - ஒருநூற்றாண்டுக்கும் முற்பாடேயே "பௌதிக சாஸ்திரம்", "பௌதீக விஞ்ஞானம்" பௌதீகம், பௌதிகம் என்றவாறான சமற்கிருதச் சொல்வடிவங்களால் சுட்டப்பெற்றுத் தொடர்ந்த அவலநிலையே தமிழகத்துள் இருந்தது. [கிரீக நாட்டினின்று வந்து தமிழைக்கற்ற அறிஞர் "பெரிய சஞ்சீவிநாத சுவாமி" அவர்களால், பூதியல் (Physics) துறைக்கென எழுதப்பெற்ற, நூலொன்று 1847-இல் மா.சா. யாகப்பப்பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப்பெற்றது. அன்றைய நிலையில் இத்துறைக்கு "அண்டபிண்ட வியாக்கியானம்" என்றே அந் நூலெழுதிய ஆசிரியரால் பெயரிடப்பெற்றிருந்தது என்னும் கடுஞ்சூழலையும் இவ்விடத்திற் கருதிப்பார்க்கலாம்!

பூதநூல் - பொருள்நூல் (சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் : 1936), பௌதிகம் (சென்னை அரசுக் கலைச்சொல்தொகுப்பு : 1947) , பௌதிகவியல் (1960) , பௌதிக விஞ்ஞானம் (அரசகரும மொழித்திணைக்களம் - இலங்கை : 1960), இயல்பியல் , இயற்பியல் (தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் : 1971) , பூதவியல் (தமிழியக்கப் பாசறை - காரைக்குடி (1972) - என்றவாறு எழுவகைப்பட்ட வடிவங்களிலும் இவ் அறிவியற்பிரிவு பெயர் வேய்ந்து கொண்டு அலைந்து ஒருவாறாக இன்றைய நிலையில் "இயற்பியல்" என்னும் சொற்சுட்டில் அழுத்தம் பெற்றுப் பயில்விலுள்ளது.

இவ்வாறு, இறுதிப் பதிவும் பயில்வுங்கொண்டு

இயலுகின்ற இவ் "இயற்பியல்" என்னும் துறைப்பெயரின் பொருண்மைத் தகுதிநிலையை நோக்குதற்கு முன்னீடாக - இத் துறையைக் குறித்துத் தமிழகத்துள் நன்கு பயில்வூன்றிய சமற்கிருத வடிவமாகிய "பௌதிகம்" என்னும் சொல்லுக்குரிய வளர்ச்சி வரலாற்றிடையே கவனஞ்செலுத்த வேண்டியது , ஈண்டுத் தேவையான ஒன்றாகும்.

[பூ = மலர்ந்து விரி ; பூப்பு எய்து.
பூ > (பூ + து >) பூது = விரிவடை. (பூதுதல் = விரிவடைதல் , பெரிதாதல், பூதித்தல் > பூரித்தல் = விரிவெய்துதல் ; பெரிதாதல் (தகர - ரகரத் திரிபு) (இறும்பூது : பெருவியப்பு ; பெருவியப்பாலேற்படும் மகிழ்வு) .(காண்க : மதுரைக் காஞ்சி : 486)

பூது + அன் > பூதன் = பெரியோன் ; பெருமைக்குரியவன்.
பூதன் + தந்தை > பூதன்தந்தை (> பூதந்தந்தை > பூந்தந்தை) > பூந்தை. (காண்க : தொல். எழுத்து - உயிர்மயங்கியல் : 348)

பூது = விரிவடை ; பெருகு ; வளர்வுறு
பூது > (சமற்கிருதம்) Bhúta = become
பூது + அம் > பூதம் : விரிவடைவது ; விரிவடைந்து கொண்டேயிருக்கும் தோற்றமுடையது; விரிவுறுந்தோற்றத்துப் பெரும்பேய்
பூதம் > (சமற்கிருதம்) Bhúta = spirit, demon.
பூதம் > (Greek) puthon = (sooth - saying demon or dragon killed by Apollo) > (English) pythomers = witch]

விரிவுறும் இயற்கைக் கூறுகளாகிய நிலம் - நீர் - தீ - வளி - வெளி என்னும் ஐந்தும், "பூதம்" என்னும் பெயரால் மிகபண்டைப்பொழுதிலேயே நம் தமிழமாந்தரால் கட்டவும் பயிலவும் பெற்றன. (காண்க : தொல்காப்பியம் : கிளவியாக்கம் : 58). (மே. கா: "மண்டிணிந்த நிலனும் - நிலனேந்திய விசும்பும் - விசும்பு தைவரு வளியும் - வளித் தலைஇய தீயும் - தீ முரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கைபோல . . ." (புறம் : 2 : 1 - 6) ; "வளியெனவரூஉம் பூதக்கிளவியும்" (தொல். எழுத்து. உயிர் : 242)

பூதம் > (சமற்கிருதம்) bhúta > bhautika
Bhautika sâstra = physics. (திரிபை ஒப்புநோக்குக : புத்ர > pautra. புத்தம் > bauddha. புராணிக > paurânika. குமார > kaumâra)

"பூ" என்னும் நம் தமிழ் வேரொலி - கிரேக்க மொழியில் "phu" என்றவாறே அடிப்படை குலையாது படிந்து, பரத்தல் - விரிவடைதல் போலும் கருத்து அடிப்படைகளையுடைய பன்வகைப்பட்ட சொற்கள் ஆங்குக் கிளைக்கும் நிலைகளுக்கான வாய்காலிட்டுள்ளது.

பூ > (Greek) phu = blow ; inflate
[> phu > phusa > (Latin) pusula > pussula > pustula > (old French) pustle > (English) pustule = pimple (கொப்புளம் ; பரு). (காண்க : OX. DIC. of English Etymology.C.T. ONION. page : 726)

"பூ" என்னும் தமிழ்வேர்வழியிற் கிரேக்க மொழியுள் படிவெய்திய "phu" என்னும் அடிச்சொல்லின் கிளைப்பாகவே phusis (= nature (= இயல்பாகத் தோன்றி விரிவெய்துவதாகிய இயற்கை) என்றவாறு ஓர் ஆக்கச் சொல்லும் ஆங்கு எழுந்தது. "phusis" என்னும் சொல்வழியில் "phusikos" என்னும் பிறிதொரு புடைவடிவம் ஆக்கம்பெற்று, - அதுவே "phusike" என்னுமாறு திரிபுற்று - அதன் பின்னர் இலத்தீனத்தில் physica, physicae எனும் வடிவங்களிலும், பிரஞ்சில் physique என்னும் வடிவத்திலுமாகப் படிந்து பரந்து பயில்வுறலாயின.

["physique" என்னும் பிரஞ்சு வழக்கு, மேலும் திரிந்து "fisique" என்னுமாறு வடிவெய்தியது. இயற்கைப் பொருளினின்று கிடைக்கும் மருந்து (natural medicine) என்னும் பொருளில் பயில்வுங்கொண்டது. (அடிப்படை : (Greek) phusikos (phusis > phusi - kos = a suffix) = nature , essence of a thing)

இத் தகு நிலைகளிலான தொடர்புறவுகளின் தாக்குரவாலேயே, இன்று "physic" என ஆங்கிலத்துள் நிலைகொண்டுள்ள சொல் - (1) இயற்கை அறிவியல் (natural science), (2)மருந்து(medicine),(3) மருந்து உருவாக்கம்(medicinal preparation) (4) உடலை நலப்படுத்துங்கலை (உடனலப் படுத்துங்கலை) (healing art) என்றவாறாக நாற்பொருட்பாடுகளில் பயன்படுத்தப்பெறுகின்றது என்பதையும் இவ்விடத்திற் கருதிப்பார்த்தல் வேண்டும்.

அறிவியற் கருத்துக்களின் விரிவும் விளக்கமும் - தெரிவும் துலக்கமும் பெருகப் பெருகத் - தொகுபெயரில் அமைந்திருந்த தொடக்கப் பெயர், - வரையறையுடையதாகி ஓரேயொரு செப்பப் பொருட்பாட்டில் மட்டுமே வழங்கவும் - அதனின் நுண் பகுதிகளுக்குரிய கூறுகள் பல்வேறு துறைப்பிரிவுகளாகத் தனித்தனியே வளர்ந்து பரவவுமான முறைநிலையொழுங்கு இக்காலத்தில் மிகத் தெளிவாகக் கடைப்பிடிக்கப் பெற்றுவருகின்றது. இவ்வகையில் "இயற்கை அறிவியல்" என்னும் பொதுப்பெயரில் வழங்கி நின்ற Physics (= natural science) என்பது - "பொருள் மற்றும் ஆற்றல் இவற்றுக்கிடையிலான ஊடெழு வினைகள் பற்றியதும் - பொருள்களோடு தொடர்புடையதுமான ஆய்வியல் துறை" என்னும் தெளிவார்ந்த வரையறுப்புடைய பொருளில், இன்று நின்று நிலைகொண்டுள்ளமையைக் காணுகின்றோம்.

"nature" என்னும் சொல்லுக்கு - இயற்கை, இயல்பு (= இயற்கைப் பண்பாகிய நடத்தை) என்றவாறாக இருவகை அடிப்படைப்பொருள்கள் பரந்த பயில்வுநிலையில் உள்ளன. இதனுள், "இயற்கை" என்னும் பொருளடிப்படை மட்டுமே "physics" என்பதன் கருவகத்துள் உள்ளது என அறியாது - மயங்கிய இயல்பினராய் - அச் சொல்லுக்கு அடுத்தபடியாக அமைந்திருக்கும் "இயல்பு" என்னும் பிறிதொரு வளர்ச்சியாக்கப்பொருளை உட்கொண்ட சிலர் (இயல்பு என்னும் சொல்லுக்குச் சற்றேறக்குறைய பதினாறு வகைப்பட்ட பொருட்பாடுகள் தமிழில் உள்ளனவாதலின் - அவற்றின் வழியே பின்னர் நேரலாகும் மயக்கங்களை

எண்ணிப் பாராதோராய்) - (இயல்பு + இயல்) > இயல்பியல் (= physics) என்றவாறு துறைப்பெயர் நிலையிலாகச் சுட்டவும் பயிலவுந் தொடங்கினர்!

'இது இயல்பு பற்றிய இயலன்று' என்றவாறு இடைநின்று சிந்தித்த சிலர், "இயற்பு" என்னும் மற்றுள்ள ஒரு சொல்வடிவைப் பிழைபாடாக ஏற்று, ["இயற்பு" என்னும் சொல்லுக்கு, "இயக்கம்" என்னும் பொருட்பாடு மட்டுமே முன்னர் வழக்கிலிருந்தது!) காண்க: "இயற்பின்றி எல்லாம் இருள்மூடமாமே" (திருமந்திரம் : 2010)] இயல் என்னும் சொல்லை உடனிணைத்து (இயற்பு + இயல் >) "இயற்பியல்" என்றவாறு வழங்கிவரத் தலைப்பட்டனர்!

(இம் முற்குறித்த வகையிலான முயற்சியும் பயிற்சியும் பன்மொழிப்புலவர். கா. அப்பாத்துரையாரை அடியொற்றினவாகும்.(காண்க : செ.ப.க - ஆ.த.சொ: ப :733) (மேலுங்காண்க : ஆட்சிச்சொல் அகராதி : ப : 216)

"இயல்பியல்" என்பதுவும் - "இயற்பியல்" என்பதுவும் கிரேக்கச் சொல்லுக்குரிய பொருட்பாடுகளைக் கருதி அடியொற்றி அமைக்கப்பெற்ற குழப்பவடிவங்கள் ! . . . பௌதீகமும், பௌதிகமும் (பௌதீக சாஸ்திரமும்) (பௌதிக விஞ்ஞானமும்) - இயற்கை-வியல்புப் பொருள் குறித்துச் செந்தமிழில் ஆக்கம் பெற்றிருந்ததும், நீணெடுங்காலமாக மிகப்பரவலுற்று இம் மண்ணகத்தே வழங்கப் பெற்றதுமான (பூது + அம் >) "பூதம்" எனும் சொல் கண்டு - அதனையே அடிப்படையாகப் பற்றிக்கொண்டு கோணுறுத்திய நிலையிலாகப் புரட்டியெடுத்துப் பயில்வுக்கெனப் பதித்துக் கொண்ட சமற்கிருதவுருக் கட்டுக்களாகுவன!

"பூதநூல் - பொருள்நூல்" என்றவாறு சென்னை மாநிலத் தமிழ்க் கழகத்தார் (சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் : 1936) குறித்ததுவும், - அதனை உற்று உள்நோக்கிப் பற்றி அடியொற்றித் தெளிந்த நிலையிலாகப் பூதவியல் (< பூதம் + இயல்) என்றவாறு காரைக்குடித் தமிழியக்கப்பாசறையினர் (1972) மீண்டும் புதுக்கி வழங்கிப் பதித்ததுவும் - தமிழர்தம் அறிவியல் அறிவுமரபையும் தெளிவார்ந்த சிந்தனை முறையையும் மதித்துணர்ந்து அவற்றின் வழிப்பட்டு இயங்கியுள்ள மானத் தகைமையுடையன!

அறிவுநிலை துலக்கம்பெறாதிருந்த பண்டைக்காலத்தே நம் மாந்தர் தாம் கொண்டிருந்த தற்கருத்தேற்றங்களொடு, - படிப்படியே விரிவடைந்து பருப்பமுறுவதாகக் கருதிக் கொண்டு சுட்டிய பெயர்சூட்டலின் வழியே, பெருக நின்றுப் பேராட்டம் போட்ட "பூதம்" என்னும் பேய் வகையுட் பேருருவாகிய ஓர் அல்லுருவை இவ்விடத்தில் மீண்டும் தேவையில்லாமலேயே க்ருதியவாறு அச்சமும் மயக்கமுங் கொள்ளுதற்கு இடந்தரா நிலையிலாகப் (பூதம் + இயல் >) பூதவியல் என்னும் அச்சுறுத்தமும் (!) தரும் சொல்லமைவையுந் தவிர்த்துவிட்டு - விரிவடைதற் கருத்து அடிப்படையையுடைய அடிச்சொல்லான "பூது" என்னும் வடிவைமட்டுங் கொண்டு "இயல்" என்பதனொடு இயல்பாகப் புணர்த்தி (- வேது + இயல் > வேதியல் என்றவாறான வடிவுக்கு நேரிய வகையில் ! .) "பூதியல்" (= . physics) என்றவாறு இவ் அருங்கலைச்சொல் அவ்வாறு முதலிலுள் தெளிவார்ந்த நிலையிலமைத்துப் பதிவாக்கப் பெற்றுள்ளது.

" Botany " என்னும் அறிவியல் துறைப்பிரிவுக்குரிய கலைச்சொல்லாக்கலாக்க் - சென்னை மாநிலத் தமிழ்க்கழகக் கலைச்சொற்றொகுப்பில் (: 1936) "பயிர் நூல்" என்றவாறும், இலங்கை அரசகரும மொழியலுவலகக் கலைச் சொற்றொகுப்பிலும் (: 1957), இலங்கை அரசகரும மொழித் திணைக்களக் கலைச்சொற்றொகுப்பிலும் (: 1963) "தாவரவியல்" என்றவாறும் , காரைக்குடித் தமிழியக்கப் பாசறை வெளியீட்டில் (: 1972) "பயிரியல்" என்றவாறும் பயன்படுத்தங்கள் மேற்கொள்ளப்பெற்றிருந்தன.

(Botany என்பதற்கு நேர்படுமாறு, Natural science என்பதையே அறிவியல் துறைப் பிரிவாகக் கொண்டு சென்னை அரசினர் கலைச்சொற்றொகுப்பில் (1932) "இயற்கை விஞ்ஞானம்" . என்னும் கலைச்சொல்லாக்கக் கூட்டு வடிவமொன்றும் பயன்படுத்தப்பெற்று வந்தது. சற்றேறக்குறைய முப்பத்தாண்டுக்கால அளவுக்குப் பரந்துபட்ட பயில்விலும் இது ஊடாடியது)

சிறு செடியைக் குறிக்கும் பொதுப் பெயராகவும் (காண்க : குறள் : 274 காளிங்கர் உரை) , கொடி - புல் - பூண்டு முதலியனவற்றைச் சுட்டும் பெயராகவும் , தோன்றிய முகைக்குரிய பெயராகவும், தோன்றிச் செறிவார்ந்து நிற்கும் செடி கொடி புல் பூண்டுகளின் தொகுதிக்குரிய தொகைப்பெயராகவும் (காண்க : அகம் : 307 : 10 - 11, 217 : 6, 235 : 9 - 10) அறுபது இடங்களுக்கும் மேற்பட்ட எண்ணிக்கை யளவில் கழக இலக்கியங்களுள் நன்கு நிலைத்த பதிவுற்றுப் பயிலப் பெற்றுள்ள "புதல்" என்னும் பைஞ்சொல் ஒன்று - மேலை ஆரிய மொழிகள் பலவற்றுள்ளும் பற்றிப் படர்ந்து பதிவெய்திப் பல்வேறு வடிவங்களிலாக வழக்காறுங் கொண்டியலும் மொழியியலுண்மை இவ்விடத்திற் கருதுதற்குரியதாகும்.

"புதல்" என்பதுவே - லகர ரகரத் திரிபேற்று - இன்றைய வழக்குக் குறிப்புள் "புதர்" என்றாகிச் செடி - கொடி - புல் - பூண்டுத் தொகுதியைச் சுட்டும் பரவலான பயில்வுற்றுள்ளமையும் ஈண்டுக் கருதத் தக்கது. சமற்கிருதத்தில் , இப் "புதல்" என்னும் செந்தமிழ்ச் சொல் "búta" (= bush, plant) என்றவாறு பசுந்திரிபெய்திப் படிந்துள்ளதோடு, bútta, botta, bhúta என்றவாறான வடிவ வேறுபாடுகளையும் உடன் கொண்டுள்ளது. இந்திய வடபால் மொழிகள் பலவற்றுள்ளும் இப் புதலின் ஆட்சி பரவலாகப் படர்ந்தார்ந்துள்ளது.

ஆங்கிலத்துள் " bud " [(n) = rudiment of shoot, foliage or flower, leaf or flower not fully open. (v) = putforth buds, begin to grow or develop forms (as) bud] என்னும் சொல் வழக்கும்

மேலையாரிய மொழிகளின் வழி ஏற்பட்டுள்ள திரிபுப்பதிவே ஆகும்.

"புதல்" என்னும் இத் தூய செந்தமிழ்ச்சொல், கிரேக்க மொழியுள் " bota-ne " என்ற உருவில் திரிபெய்தியது.

(GK) Botane = grass, herb, weeds, pasture (> fodder)
Botanephoros = herb bearing
Botanikos = of herbs
(French) botanique = of herbal or belonging to herbs
> (English) Botany = The science that treats of plants.
[*புதல் > (GK) phuton = plant
(GK) phuto(n) > (English) phyte.
(Example:) (English) epiphyte = plant growing on (usu. not fed by) another]

நிலையாக ஓரிடத்தில் தோன்றி வளர்ந்து நிலைநிற்கும் மரம் - செடி - கொடி - புல் - பூண்டுகளைக் குறித்தற்குப் பண்டையில் " நிலைத்திணை " என்றவாறான வழக்கு இருந்தது. [: The category of the immovables as the vegetable kingdom] இக் குறிப்பீட்டுக்கு எதிரிடைச் சொல்லாக ஓரிடத்தினின்று பிறிதோரிடத்துக்குச் சென்றியங்கவல்ல திணை, "இயங்குதிணை" என்னப்பெற்றது என்பதுவும், ஈண்டுக் கருதத்தக்கது. (காண்க : தொல். எழுத்து : 46 : உரை)

"நிலைத்திணை" என்னும் கருத்துக்கு ஒப்பச் சமற்கிருதத்தில் அமைந்துள்ள சொல், "sthāvara" என்பதாகும். (ஒ.நோ : (GK) sthā = stand). நிலைத்திணை இயல், சமற்கிருதத்தில் 'sthāvara-sāstra' என்றவாறு பதிவு செய்யப்பெற்றது. இதனினின்றே, தாவரவியல் [< தாவரம் + இயல் (தமிழ்)] என்றவாறான இருபிறப்பி (Hybrid) ஆக்கச் சொல், - தொடக்கத்தில் (இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கால அளவிடையில்) பயன்படுத்தப் பெற்றது.

"தாவரவியல்" என்னும் இருபிறப்பியைத் தவிர்க்க வேண்டும் என்னும் மானவுணர்வுசான்ற நிலையாலேயே - "பயிர் நூல்" என்றவாறும் " பயிரியல்" என்றவாறுமான இரு அண்மைக்காலச் சொற்கள் பயில்வுக்கென முன்வைக்கப் பெற்றன. "Agriculture" என்னும் சொல்லுக்குரிய பொருட்பாட்டுடன் கருத்துமோதலையும் குறுமயக்கத்தையும் இந்நிலைகள் உண்டுபண்ணுதற்கு வல்லனவாதலின் - இவற்றையுந் தவிர்த்து, - நம் அடிப்படையினின்று மேலையுலகம் பற்றிக்கொண்டு பயன்படுத்தி வரும் (botani-kos) botany என்னும் வடிவத்திற்கொத்து நேரிய பொருட்பாட்டிற் செப்பமுற இயைந்து தெளிவு தரும் " புதல் " என்னும் பண்டை வழக்குச் சொல்லையே முன்னிறுத்திய நிலையில் (புதல் + இயல் >) " புதலியல் " என்ற கருத்துச்சிக்கலற்ற முறைப்பட்ட கூட்டுச்சொல்லமைப்பு ஒன்று - இத் துறைப்பிரிவைக் குறித்தற்கென இந்நூலுள் பதிவுற்றுள்ளது.

இதுவேபோல் , - "Chemistry" என்னும் அறிவியல் துறைப்பிரிவு, - மருத்துவர். கிரீன் அவர்களின் தலைமையிலான முயற்சி வினையாக நாகர்கோயிலில் வெளியிடப்பெறுகையில் " கெமிஸ்தம் " என்றவாறும், சென்னை மாநிலத் தமிழ்க் கழகக் (சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் : 1936) கலைச்சொல் தொகுப்பில் "இயைபுநூல் " என்றவாறும், சென்னை அரசுத்தொகுப்பில் (: 1947) " இரசாயனம் " என்றவாறும், இலங்கைத் தன்மொழியலுவலகச் சொற்றொகுப்பில் (: 1955) "இரசாயனவியல் ", " சேதனவுறுப்பு " ஆகியவாறும், பூ. சா.கோ. அறநிலைய வெளியீட்டில் (:1968) "வேதியியல்" என்றவாறும், காரைக்குடித் தமிழியக்கப் பாசறை வெளியீட்டுத் தொகுப்பில் (:1972) " வேதியல் " என்றவாறும் படிப்படியே பல வடிவங்களில் வழங்கப் பெற்று வந்துள்ளது.

இம் மேற்குறித்த பயில்வுகளில் (வேது + இயல் >) வேதியல் என்ற அருக்கம் வாய்ந்த இறுதிச் செப்பவழக்கே , பெருத்த நிறைவுடைமை கொண்டிருப்பதைக் கருதித் தெரிந்தெடுக்கப் பெற்று, இவ் அகரமுதலியுள் பதிவெய்தியுள்ளது.

இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் நூற்றுமுப்பத்தைந்து (135) துறைகளுக்குரிய ஓரிலக்கத்து இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் அகரநிரல் பெற்றுள்ளன. இச் சொற்களுக்குரிய துறைக் குறிப்பீடுகளுள் பலவும், முன்னரேயே வழக்கிலிருந்தவை. முழுநிறை கருத்தோட்டம் வாயாதுள்ள சொற்களாகவே யிருப்பினும், அச் சிலவற்றை அவற்றின் பயன்பாட்டு அழுத்தப்பழமை கருதியும் - பரவலான பயில்வுப்பேறு கருதியும் அன்னன்ன வழக்காற்று நிலையிலேயே அவை ஈண்டு ஏற்கப்பெற்றுள்ளன.

மொழிவிழிப்பு என்பதே சற்றும் அமையாதிருந்த அன்றைய கல்விச்சூழ்நிலையில் அறிவியல் பாடப்பிரிவுகளுக்குரிய தலைப்பீடுகளிற் பெரும்பாலனவும் வடமொழிச் சொற்பயன்படுத்தங்களையே கொண்டிருந்தன.

"Anatomy - Physiology and Hygiene" என்னும் தலைப்பிலமைந்த பாடநூலொன்று 1852 - இல் "அங்காதிபாத சுகரணவாத உற்பாவன நூல்" (மர். கிரீன் அவர்களின் மொழிபெயர்ப்பு) என்றவாறும், மர். கிரே - மர். ஆர்னர் - மர். கமித் ஆகியோர் சேர்ந்து உருவாக்கிய " Human Anatomy " என்னும் நூல் 1872 - இல் (மொழிபெயர்ப்பாளர் டி. டபிள்வி. சாப்புமென் (உறுதுணையாளர் : மர். கிரீன்) "மனுஷ அங்காதிபாதம்" என்றவாறும், " Human Physiology " என்னும் நூல் 1872 - இல் " மனுஷ சுக்ரணம்" (மர். கிரீன் தலைமையிலான மொழிபெயர்ப்பு முயற்சி) என்றவாறும், "Genetics" என்னும் நூல் (1908 - இல் இரங்கூனில் வெளியிடப் பெற்றது ; மொழிபெயர்ப்பு : மர். கிரீன்) "மானிட மர்ம சாஸ்திரம் அல்லது சிசு உற்பத்திச் சிந்தாமணி" என்றவாறும் தலைப்புகளைக் கொண்டிருந்தன !

"The principles and practice of medicine" என்னும் நூல், "வைத்தியாகரம்" என்னும் தலைப்பிடப்பெற்று, ஈழநாட்டு மானிப்பாய்ப் பகுதியில் 1872 - இல் வெளியிடப் பெற்றது. "The science and art of surgery" என்னும் நூல் "இரணவைத்தியம்" என்னும் தலைப்பில் 1884 - இல் வெளியிடப்பெற்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதிக் காலங்களிலும் - இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலங்களிலும் இவ் வகைமையிலேயே தலைப்பீடுகளை அறிவியல் நூல்கள் வேய்ந்திருந்தன என்னும் அவலநிலைகள்-ஈண்டு, நினையத் தக்கனவாகும்.

தமிழில் அறிவியல் கல்விப் பிரிவைக் குறிப்பதற்குக்கூட, "விஞ்ஞானம்" என்னும் சமற்கிருதச் சொல்லையே நம் தொடக்கப் பயில்விலேயே கையாளுமாறு வழிதிசைக்கப்பெற்றோம். 1940 - ஆம் ஆண்டு வரையிலும் இந்நிலையின் நீடிப்பையே காணவியல்கின்றது. 1913 - ஆம் ஆண்டு சனவரிமாதம் தொடங்கி, 1936 - ஆம் ஆண்டு வரையிலாகச் செயற்பட்டு 4351 - பக்கங்களில் ஓரிலக்கத்து இருபத்து நான்காயிரத்து நானூற்றைந்து (1,24,405) சொற்களுக்கு விளக்கங்கள் ஏந்திப் பதிப்பேறி வந்த சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியிலேயே "அறிவியல்" என்னும் சொல் பதிவெய்தவில்லை என்பது ஆழ்ந்து கவனிக்க வேண்டிய செய்தியாகும்.

[பண்டையில் - அறிவியல் நூலினை - "நூல்" என்ற சிறப்புச் சொல்லால் நிறக்கக் குறிப்பதுவே நம் மரபாக இருந்தது. (காண்க : "உரைசான்ற நூல்" (குறள் : 581) (:Systematic treatise, science) நூல் வழக்கு என்பதுஉம் "அறிவியல் தரும் நூன்முடிபு" என்பதேயாகும். (காண்க : சீவக : 214 : உரை)

நூல் என்பது, கருத்துச்சுவடி - உரைச்சுவடி - செய்திச்சுவடி என்பன போலும் பொதுப் பொருட்பாடுகளில் பயன்படுத்தங்கொள்ளத் தொடங்கி - அதற்கேயுரிய செஞ்சிறப்புப் பொருளிடையே வலுநெகிழ்வுபட்டது. அறிவியற்பொருட்பாட்டில் அதனைத் தொடர்ந்து பயன்படுத்திநிற்கும் மரபும் - தெண்பார்வையும் அற்றுப் போனதால் - மயக்கம் வாய்ந்த நிலையில் மங்குதல் படிந்துவிட்ட அப் பொருட்குரியவிடத்தில் "விஞ்ஞானம்" எனும் சமற்கிருதம் வடிவமேறியது.

"அறிவியல் தமிழ்" என்னும் ஆக்கத்துறை ஒரு சிறிதும் எழுச்சியுறவியலாதவாறான கல்விச் சூழலே, - இம் மண்ணகம் யாவினும் கவ்விக்கிடந்தது!

தமிழ்நாட்டில் தாய்மொழிக் கல்வித்திட்டம் வகுக்கப் பெற்ற 1930 - ஆம் ஆண்டுக்குப் பிறகே - அறிவியல் நூலாக்கங்கள் - கலையியற் கட்டுரையாக்கங்கள் - குறிப்பீட்டுத் தேவைக்கான கலைச்சொல்லாக்கங்கள் - என்றவாறு படிப்படியான நன்முயற்சிகள் அரும்பத் தொடங்கின. 1940 - 1950 ஆகிய பத்தாண்டுகளுக்கிடையில் இவ் வகை வெளிப்பாடுகளில் தெளிவார்ந்த நோக்கும் - விரைவார்ந்த வளர்ச்சிப் போக்கும் ஏற்படத் தொடங்கின!

நம் மாநில மொழியான (பழம் பெருமைமிக்க வளத்) தமிழைப் பயிற்று மொழியாக ஆக்கவேண்டித் தமிழகஅரசு 14 - 4 - 1959 -இல் பிறப்பித்த சட்டவரைவுக்குப் பின்னரேயே இந்நிலைகளுக்குரிய செயற்பாடுகள் யாவும் வலிவூற்றங் கொள்ளத் தொடங்கின. தமிழகஅரசு வெளியீட்டுக் கழகம் (தோற்றம் : 1. 4. 1962) தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் என்னுமிரு சிறந்த வினைநோக்கு அமைப்பகங்கள் வினைபெற எழுந்த பின்னர், - அறிவியல் தமிழ்க்கல்வியில் கணத்த நல்விளைவாக்கம் தொடரத் தொடங்கியது!

இவ் விளைவாக்க நிகழ்வுகளிடையே, பன்னிலைக் கலைச்சொற்கள் மீது தெளிவுநோக்கு பாய்ச்சப்பெற்றுத் திருத்தங்களும் மேற்கொள்ளப்பெற்றன.

அத் திருத்தப்பாட்டு வினைகளிடையே மேலும் தெளிவும் துலக்கமும் செப்பமும் வாய்க்க வேண்டி - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் அடங்கியுள்ள 135 அறிவியல் - கலையியல் களப்பிரிவுகளில் 35 எண்ணிக்கையினவாகிய துறைப்பெயர்கள் நேரிய மாற்றங்களொடு ஆக்கப் படுத்தப் பெற்றுள்ளன. வடிவொழுங்கும் தமிழ்மையும் பெறவேண்டி மிகப் பல துறைகளின் மீது மீமெல்லிய நுண்திறத் திருத்த வார்ப்புகளும் வடிக்கப் பெற்றுள.

நேரிய மாற்றுருவாக்கத்தில் - இங்கு அமைந்திலங்கும் களப்பிரிவுகளாவன :

Acoustics : கேட்பொலியியல் - Anthropology : மாந்தரியல் - Astrophysics : வான்பூதியல் - Atomic physics : அணுப்பூதியல் - Biology : உயிரியியல் - Biophysics : உயிரிப் பூதியல் - Climatology : வெதணநிலையியல்- Cryogenics : தாழ்வெதண வினைமுறை ஆய்வியல் - Cytology : குடமவியல் - Dynamics : துனைமவியல் - Engineering acoustics : பொறியியல்சார் கேட்பொலியியல் - Evolution : திரிபாக்கவியல் - Fluid mechanics : பாய்ம இயக்கெந்திரவியல் - Geodesy : நிலப் பரப்பளவைக் கணிப்பியல் - Geography : நிலவரைவியல் - Geology : நிலத்தியல் - Geophysics : நிலப்பூதியல் - Nuclear physics : அணுக்கருப் பூதியல் - Organic chemistry : கரியச் சேர்ம வேதியல் - Paleobotany : புதைபடிவப் புதலியல் - Paleontology : புதைபடிவ ஆய்வியல் - Particle physics : துகள் பூதியல் - Physics : பூதியல் - Physical chemistry : பூதிய வேதியல் - Plasma physics : மிகு - மின்மவளிப் பூதியல் - Psychology : உளத்தியல் - Quantum mechanics : குவைய இயக்கெந்திரவியல் - Social anthropology : குமுக மாந்தரியல் - Sociology : குமுகவியல் - Solid state physics : திண்மநிலைப் பூதியல் - Statistical mechanics : புள்ளியியல்சார் இயக்கெந்திரவியல் - Systems engineering : முறைமைப் பொறியியல் - Systematics : விலங்கு - புதல் வகைப்பாட்டியல் - Thermodynamics : தெறுமத் துனைமவியல் - Virology : நோய் நுண்ணியியல்.

அறிவுத்துறையானது, தனித்தனிக் களங்களையும் புலங்களையும் கொண்டதாகும். சென்று தேய்ந்திற்ற இருபதாம்நூற்றாண்டு முழுமையிலும் படிப்படியே இந்நிலைகள் ஆழ்ந்து சிந்திக்கப்பெற்று, மிகப் பன்னூறு களங்களாய்ப் பிரிக்கப்பெற்று - இவ் இருபத்தொன்றாம் நூற்றாண்டுத் தொடக்கத்தினின்று மேன்மேலும் நுணுக்கப்பிரிவுகள் பெற்று விரிவெய்தக் காத்திருக்கின்றன.

துலக்கத் தெள்ளறிவு விளைச்சல் நோக்கி நிகழ்வனவே, இப் பாகுபடுத்த வினைகள் !

மிகப் பன்னூற்றுக் கணக்கான களங்களுக்குரிய தலைப்புகளுக்கான தமிழ்க் கலைச்சொல்லாக்கங்களிற் பல - இன்றும் முறையுறச் சிந்திக்கவும் முயலவும் பெறாதிருக்கும் அவலநிலை நிலைநிற்பை நன்றாகக் கருத்திற்கொண்டே ஈண்டு, இத்தகு அடிப்படைகளுக்கு முதலிடங்கள் தரப்பெற்றுச் செப்பஞ் செய்யப் பெற்றுள.

எழுத்துப் பெயர்ப்பு (: Transliteration)

எழுத்துப் பெயர்ப்பு - (ஒலிபெயர்ப்புச்) சொற்களாக அறிவியல், கலையியல் தமிழ்நூல்களில் இதுகாறும் வரைதுறையின்றிக் கையாளப்பெற்று (மையாளப்பெற்று) வந்த பல்லாயிரம் பதிவுகள் , இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் முற்றிலும் தவிர்க்கப் பெற்றுள்ளன. தெளிவாகப் பெயர்த்து நிறுத்துதற்கு இயலக்கூடிய மிகப் பன்னூறு எளிய சொற்களுக்குங்கூட நூலெழுதியோரால் எவ்வகை முயற்சியும் மேற்கொள்ளப்பெறாதிருந்த நிலைகளை - இத் தொகைக் களஞ்சியமானது முழுக்கமுற்றவும் - ஒருசேரவும் தவிர்த்துள்ளது.

சான்றுகள் : aerial antenna : ஏரியல் ஆண்ட்டென்னா (க. க. அ : ப : 2) - anabaena : அனாபினா (வே. ம. க : ப : 4) - antimony : ஆண்ட்டிமணி (க. க. அ : ப : 58) - appletion :அப்பிள்டன் (மி. மி. க. அ : ப : 248) - armature : ஆர்மெச்சூர் (க. க. அ : ப : 4) - autogyro : ஆட்டோ கைரோ (க. க. அ : ப : 4) - azimuth : அஜிமத்து (க. புவி) - benthoscope : பெந்தோஸ்கோப் (க. க. அ : ப : 5) - binocular : பைனாகுலர் (க. க. அ: ப: 5) - Boron : போரான் (க. க. அ: ப: 6) - cathetometer : கேத்தீட்டோ மீட்டர் (க. க. அ : ப: 7) - cedar oil : சிடார் ஆயில் (க. க. அ: ப: 7) choke : சோக்கு (க. க. அ : ப : 7) (மி. மி. க. அ : ப : 279) - coma : கோமா (மி. மி. க. அ : ப: 281) - comparator : காம்பரேட்டர் (க. க. அ : ப : 9) - corona : கொரோனா (க. க . அ : ப: 11) - cosine : கொசைன் (இ.பொ. க. அ: ப: 177) - cyanide : சயனைடு - decibel : டெசிபல் (மி. மி. க. அ: ப: 281) (க. க. அ : (3) : ப : 77) - diallyle trisulphide : டை அல்லைல் டிரைசல்ஃபைடு (க. க. அ : ப : 61) - dichlorobenzyle nicotinum : டைக்குளோரோ பென்சைல் நிக்கோட்டினம் (க. க. அ : ப : 61) - diethyl carbomazine : டை ஈத்தைல் கார்பமைசன் (க. க . அ : ப : 61) - diode : டையோடு (க. க. அ : ப : 13) (மி. மி. க. அ : ப : 281) - diopter : டையாப்ட்டர் (க. க. அ : ப : 13) - dynamo : டைனமோ, dynamo meter : டைனமோ மீட்டர், dynatron : டைனாட்டிரான், dyne : டைன், dynode : டைனோடு, dyotron : டையோட்ரான் (க . க. அ : ப : 13) - enamel : எனாமெல் (க . க. அ : ப : 62) - eztrogene : எஸ்ட்ரோஜன் (க . க. அ : ப : 63) - Giga hertz : கிகா ஹெர்ட்ஸ் (மி . மி. க. அ : ப : 271) graphite : கிராஃபைட் (க . க. அ : 3 : 82) - heptode : எப்ட்டோடு - hetrodyne : ஹெட்டெரோடைன் - hexode: ஹெக்சோடு - hodoscope : ஓடோஸ்கோப் - hologram : ஹோலோகிராம் - hydrogene : ஹைட்ரெஜன் - hyperon : ஹைப்பரான் (க . க. அ : 3 : ப : 50) - influenza : இன்ஃபுளுவென்சா - iridiocyte : இரிடையோசைட்டு - iridium : இருடியம் (மி . மி. க. அ : ப : 294) - isotope : ஐசோடாப்பு (இ . வே. க. க : ப : 177) - kaleidoscope : கலைடோஸ்கோப்பு - karyokinesis : கேரியோகைனெசிஸ் - kilocycle : கிலோசைக்கில் - kinescope : கினிஸ்கோப்பு, கினோஸ்கோப்பு (இ . வே. க. க : ப : 33) - kinetosome : கைனெட்டோசோம் - labyrinthodontia : லாபிரிந்தோ டான்ஷியா - Lamelli-branchiata : லெமல்லி பிராங்கியேட்டா - logic : லாஜிக் (க . க. அ : 3: ப : 85) - pentode : பெண்ட்டோடு (க . க. அ : ப : 35) - pipette : பிப்பெட் (க . க. அ : 1 : 75) - piston : பிஸ்டன் (க . க. அ : ப : 36) - polyvinyle : பாலிவினைல் (க . க. அ : ப : 75) - pump : பம்ப்பு (க . க. அ : ப : 38) - Quantum : குவாண்ட்டம் (க . க. அ : ப : 39) - rubber tyre : ரப்பர் டயர் (க . க. அ : ப : 42) - secant : சீகண்டு (நி. அ. ப. து : ப : 20) - silicon diode : சிலிகான் டையோடு (மி. மி. க. அ : ப : 276) - tetrode : டெட்ரோடு (பொ. த. க : ப : 281) - triode : டிரையோடு (க . க. அ : ப : 47)

(ஈண்டுக் குறித்துள்ள அட்டியற் சொற்களினுங் கேடாகக்-) கலைச்சொற்களைப் பொதுமக்கள் பயன்படுத்துகையில் திரிபுகளுற்றுக் கெட்டிதட்டிப் போன ஒலிபெயர்ப்பாலாகிய கொச்சைச் சொற்களைக்கூட - சில கலைச்சொல் தொகுப்பகராதிகள் பதிவுகளாக்கி வைத்துள்ளன.

"cement" என்பதற்குரிய பலுக்கம் (pronunciation) "சிமெண்ட்" என்பதாகும். தமிழகக் கல்லாமக்கட்குரிய வாயொலிப்பில், இது "சிமிட்டி" என்றவாறும் அழைக்கப்பெறுகின்றது. பலுக்கல் நிலையிலான கடுங்கொச்சையொலிப்பீடு, இது!

cement = சிமிட்டி. (பொ. த. க : ப : 244; (நெ. ஊ. து: ப: 9) கூட்டு வடிவங்கள் : hydraulic cement = களிமிகு சிமிட்டி (வே. ம. க: ப: 136). hydrophobic cement = நீர்ம எதிர் சிமிட்டி (வே. ம. க : ப : 137)

முப்பத்தாண்டுகளுக்கும் முற்பாடேயே "cement" என்பதற்குப் "பைஞ்சுதை" என்றவாறான இனிய பொருத்தச் சொல்லொன்று உருவாக்கப்பெற்றுவிட்டது. இது, பன்னூற்றுக்கணக்கான பதிவீடுகளாக மிகப் பல நூல்களிலும் பயில்வுற்றுள்ளது. இவற்றைக் கவனியாது - தேடாது - பயன்படுத்தமுனையாது, "சிமிட்டி" என்பதனைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

"concrete" எனும் கட்டடக் கலையியற் சொல்லுக்கு மிக நேரிதானதும் - பாடு சிறந்ததுமான மிகப் பண்டைய நாட்டுவழக்குத் தமிழ்க்கலைச்சொல், "கற்காரை" என்பதாகும். இதனை முறையுறப் பயன்படுத்திக் கொள்ளாமல், "bleeding of concrete" எனும் கூட்டுக் கலைச்சொல்லுக்கு ஈட்டுக் கலைச்சொல்லாக்கம் போன்று "சிமிட்டிப் பால் ஒழுக்கு" என்றவாறான பதிவை ஓரகராதி கட்டியுள்ளது. (காண்க : வே. ம. க : ப : 42)

"grout" என்னும் ஆங்கிலக் கலைச்சொல்லுக்குக் கருப்பொருளுணர்ந்த தெளிவோடு செ. ப. க. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் 1965 -இலேயே "அரைசாந்து" என்றவாறு செப்பக் கலைச்சொல் வழக்கொன்றைப் பதிவு செய்து வைத்திருந்துங்கூட - அதனைச் சற்றுங் கவனியாது - "சிமிட்டிப்பால்" என்றவாறு அமைத்துள்ள பதிவுப்

போக்கையும் கலைச் சொல்லகராதிகள் சிலவற்றிற் காணுகின்றோம். (சான்று: வே.ம.க: ப:44)

நெறி (வு) முறை பின்பற்றல் :

இலங்கையிலிருந்து (அரசகரும மொழித் திணைக்களம்- அரசகரும மொழியலுவலகம் - தன்மொழியலுவலகம் முதலியவற்றினின்று -) வெளியிடப் பெற்றுள்ள மிகப் பல கலைச்சொல்லகராதிகள் இவ்வொலிபெயர்ப்புச் சொற்களுக்கான பதிவுகளிடையே சில நெறி(வு) முறைகளைப் பின்பற்றியுள்ளன. தமிழகத்துள் வெளியிடப் பெற்றிருப்பவற்றுள் இந்நிலைகள் இல!

முன்னர்க் குறித்துள்ள "concrete" என்னும் கட்டடக் கட்டுமானத்துறைச் சொல்லுக்குரிய "கற்காரை" என்னும் செப்பச்சொல்லை அறியாது அல்லது பின்பற்றாது - ஒலி பெயர்ப்பு என்றவகையில் சில நெறிமுறைகளை வகுத்துக்கொண்டிருந்த இலங்கைக் கலைச்சொற்குழுவினர் - அச் சொல்லுக்கு "கொங்கிறீற்று" என்பதனைப் பதிவாக அமைத்துள்ளனர். இதேபோன்று, "cement" என்பதற்குரிய நேரிய வடிவாக "சீமந்து" என்னும் உருப்போலியைப் பதிவுசெய்துள்ளனர். (காண்க: இ.சொ: இலங்கை (1955).

இந் நிலைகளிலமைந்துள்ள மேலும் சில பதிவுக் காட்சிகள் :
tangent : தான்சன் (பௌ. வி) ("டான்ஜெண்ட்"(இ.வே.க.க : ப : 68) - delta : தெலுத்தா (பௌ. வி) - rheostat : இறையோதற்று (பௌ. வி) - sulphide : சல்பைட்டு, - sulphite : சல்பைற்று (: sulphide என்பதற்கு "சல்பைடு" என்றவாறும், sulphite என்பதற்கு"சல்பைட்டு" என்றவாறும், தமிழகத்தில் வெளிவந்துள்ள நூல்களுள் ஒலிபெயர்ப்புச் சொற்கள் பதிவுற்றுள்ளன !) - oxyacetylene : ஒட்சிய தெற்றலின் (இ. சொ) - alcohol : அற்ககால் (பௌ. வி) - photon : போட்டான் - proton : புரோத்தன் - meter : மீற்றர் (இ. சொ.) - sigma : சிக்குமா (கணிதம் : இலங்கை)

குறிக்கத்தக்க ஒவ்வோர் அறிவியல்துறையிலும் ஆழங்காற்பட்டு - அவற்றுள்ளேயே தோய்ந்து மூழ்கி பல புத்துண்மைகளை உலகுக்கு முற்படுத்தியறிவித்துள்ள அறிவியலறிஞர்களின் பெயர்களோடேயே கூடியவாறு - கலைச்சொற்களுள் சில ஆங்கிலத்துள் பதிவெய்திப் பயில்விலுள்ளன. அவற்றையெல்லாம் இலங்கைக் கலைச்சொல்லாக்கக் குழுவினர், தமிழில் அறிவியலைப் படிக்க முற்படுவோர் யாவரும் - கண்டு, மயங்குமாறு ஒலி பெயர்த்துப் பதித்துள்ளனர்.

சான்றுகளிற் சில : Colpit's circuit : கொற்பித்தின் சுற்று (பௌ. வி) - Halley's comet : அல்லியின் வால்வெள்ளி (கணிதம் - இலங்கை : ப:100) (: ஆலியின் வால் விண்மீன் (இ.வே.க: ப: 195) Hart's linkage : ஆட்டின் இணைப்பு (கணிதம் - இலங்கை: ப: 101) - Sheppard's correction : செப்பேட்டின் திருத்தம் (கணிதம் - இலங்கை : ப : 192)

[sheppard : செப்பேடு (?!) Halley : அல்லி (?!) Hart : ஆடு (?!..)]

நலிபுப் பிழை :

பொறிஞர். பா. வே. மாணிக்கனார்அவர்கள் தவறாகவும் பிழையாகவும் கருதிய வழியில் முறையுறக்காணாது காட்டிய வழிமுறையொன்றில் - தமிழ் ஒலிப்பு அமைவுக்குட்படாதவற்றுளொன்றான " F " என்றவாறான எழுத்தொலியில் தொடக்கமாகும் அல்லது உட்படலாகும் நூற்றுக்கணக்கான கலைச்சொற்களுக்கென இலங்கைக் கலைச்சொல்லாக்கத்தாரும், நந் தமிழகக் கலைச்சொல்லாக்கத்தாரும் நடை கொண்டுள்ளனர்!.

" F " என்னும் ஆங்கில எழுத்தொலிப்புக்கு ஈடாக "ஃப்" என்றவாறு பயன்படுத்தலாம் என்பதே, இம் முற்குறித்தோர் பற்றிநடையிட்டுள்ள தவற்று நெறியாகும். "ஃ" என்னும் குறி, ஓர் எழுத்து அன்று; அன்றேயன்று! (= இல்லவேயில்லை !) இது, ஓர் அருமையான பயன்பாட்டுக்குரிய நுட்பக் குறி !

தொல்காப்பியத்துள், முதல் நூற்பாவாகப் பதிவுற்றுள்ள கருத்திலேயே மிகத் தெளிவாரத் துலங்கி நிற்கும் இவ் அடிப்படையுண்மையைப் புலமக்களல்லராகிய பொதுமக்களாலுங் கூட நன்கு கருதியுணர்தற்கியலும் ! "எழுத்தெனப் படுப - அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப" (தொல். எழுத்து : முதல் நூற்பா). இங்கு,"ஃ" என்னுங்குறி எழுத்துப்பட்டதாக எங்குக் கொள்ளப் பெற்றுள்ளது ?? (அறவே இல்லையே ! . . .). தமிழ் மொழிக்குரிய எழுத்துக்கள் முப்பது மட்டுமே என்பதைச் செப்ப வரையறுப்பாகவே முதற்கண் நிறுத்தியுள்ள தொல்காப்பியரின் பார்வைத்தெளிவு - பின் வந்த இலக்கணத்தரின் புலக்கணத்தின்பாற் படாது திசைவுற்றுப் போயிற்று! இவ் ஆய்தக் குறியீட்டுக்குப் புள்ளி, தனிநிலை என்னுமிரு பெயர்கள் - ஒருபொருட் பன்மொழிகளாகும். "ஆய்தம்" என்பது, நுண்ணிய கருத்துக்கரு வாய்ந்த முந்தைய சிறப்புப் பெயராகும்.

"உய்" என்னும் (நுண்மைக் கருத்து) கூர்மைக் கருத்து வேரில் விளர்ந்த (உய் > ஒய் >) "அய்" என்னும் பக்க வேரினை அடிப்படையாகக் கொண்டு மிகப் பல வளச் சொற்கள் தமிழில் தோற்றப் பெற்றுள்ளன. "அய்" என்பதன் "ஆதிநீடல்" வழிப்பட்டே, "ஆய்" என்னும் வினைச் சொல்லொன்று ஆய்வு, ஆய்தல், ஆய்கை முதலிய சொல் வகைகளையும் (ஆர் + ஆய் + ச் + சி) > ஆராய்ச்சி முதலிய கூட்டுச் சொற்களையும் விளைவித்துள்ளமையையும் இவ்விடத்திற் கருதிப் பார்த்தல் வேண்டும். ["ஆய்தல் ... உள்ளதன் நுணுக்கம்" என்னும் தொல்காப்பியச் சொல்லதிகார உரியியல் நூற்பா குறிக்கும் கருத்தும், இவ்விடத்திற் சேர்த்தெண்ணிப் பார்க்கத் தக்கதாகும். (காண்க: தொல். சொல். உரி : 34 : 1 - 2)]

(ஆய் > ஆய் + து > ஆய்து + அம்) "ஆய்தம்" என்னும் சார்பு ஒலிக்குறியீடு, - ஈரொலிகள் ஒன்றும் நடுவிடத்து (நள்ளகத்து) நலிபைச் (மெலிவிப்பைச்) செய்யும் ஒரு புள்ளிக் குறியீடாகும். (அ + து >) அது என்றவாறு வருகையில் " athu" என்றவாறு ஒலிப்புறக் கூடாது "adhu" என்றவாறான ஒலிப்பீட்டிலேயே அமைந்தாக வேண்டும் என்பதற்காக, "அஃது" என்றவாறு ஆய்தப்புள்ளி இடைப்படுமாறு இட்டு அமைத்துள்ள நம் தமிழமுன்னோர், அறிவினராவர்!

எழுத்தொலியைச் சற்றே மென்மைப் படுத்தியுரைக்க வேண்டும் என்பதற்காகவே, இக் குறியீடு தோற்றப் பெற்றுள்ளது. ஆய்தத்திற்குரிய வினை, நலிபு செய்வதுவே என்பதைப் "பேராசிரியர்" பதிவு செய்திருக்கின்றமையையும் இவ்விடத்திற் கருதிப் பார்க்கலாகும். (காண்க : " நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்" (தொல்காப்பியம் : பொருளதிகாரம் : செய்யுளியல் : 524 : பேரா. உரை.)

இவை யாவற்றையும் ஆழ்ந்துணராத இடைக்காலத்-தவரும் - இற்றையரும் அஃது, இஃது, எஃது என்பன போன்றவற்றையெல்லாம் ahdhu, ihdhu, ehdhu என்றவாறே தவறுதலாகப் பலுக்கினர் ; பலுக்கி வருகின்றனர். இதாவது, "ஃ" என்னும் புள்ளிக் குறியீடானது " h " என்ற ஒலிப்புக்கியையுமாறு மிகமிகத் தவறுதலாகப் பலுக்கப் பெறுகின்றது.

"ஏனம்" என்னும் ஈற்றுச்சாரியை பெற்றுள்ள "அஃகேனம்" என்னும் சொல்லுள் அமைந்துள்ள ககரத்தை மென்மைப்படுத்தியொலித்துவரும் நிலைகருதி - அப் பிழைபாட்டுத் தெரிவாகிய ககர வழியிலேயே சிந்திக்கப் பெற்று 'ஹ'கரமாகப் பிழை வேயப் பெற்றுள்ளது! அஃகேனத்தில் வரும் ககரவின ஒலியிடத்தைப் பிரித்தெடுத்துப் பார்த்ததனாலேயே இப்பிழை வாய்த்தது. அஃகு + ஏனம் என்னும் இரண்டின் கூட்டாக்கமே, அஃகேனம் என்னும் தனிச்சொல்! அஃகுதல் = நுண்மையுறுதல், மீமென்மையுறுதல். (ஒ.நோ: அஃகுதல் = கூர்மையுறுதல் (காண்க : "அஃகியகன்ற அறிவு" குறள் : 175.) (கருங்குதல்; அருகுதல் என்பனவும் வேர் வழியிலான விரிவாக்கக் கருத்துக்கள்). (இவ் வகையிலான வேரியற்சிந்தனைத் தெளிவே உண்மையறிவுத் துலக்கத்திற்கும் வழிகூட்ட வல்லதாகும்.)

ஆக, " F " என்னும் எழுத்துக்குரிய நேரொலிப்பைக் கொண்டு வருவதற்கென, "ப்" என்னும் எழுத்தொலிக்கு முன்னீடாக " ஃ" என்னும் அஃகேனத்தை வைத்து விட்டால் தானே " F " என்னும் ஒலிவந்துவிடும் என்றவாறு எண்ணியமையும் பரிந்துரைத்தமையும் பயன்படுத்தினமையும் தவற்றுப்போக்குடையனவாகும். அவ்வாறு ஆகவே ஆகாது!!..

இத் தகாத் தவற்றுப் போக்கின் வழி - மிகப் பல பதிவுகள், இவ்வகை ஒலிபெயர்ப்புகளுக்கெனப் பரவலாகப் பதிவெய்தியுள்ளன.

சான்றுகள் : acoustic phonon : ஒலி ஃபோனான் (இ.வே. க : ப : 2) - photon : ஃபோட்டான் (இ.சொ : இலங்கை) - fiddle : ஃபிடில் (க. க . அ : 1 : ப : 19) - film : ஃபிலிம் (க. க . அ : 1 : ப : 19) - flint : ஃபிளிண்ட் (க. க . அ : 1 : ப : 19) - foraminifera : ஃபோராமினிஃபெரா (க. க . அ: 2 : ப : 137) - fly frame : ஃபிளைஃபிரேம் (க. க. அ : 3 : ப : 50) - fossil : ஃபாசில் (க. க . அ : 2 : ப : 216) - fluorspar : ஃபுளோர்ஸ்பார் (க. க . அ : 3 : ப : 11) - sulphite : சல்ஃபைட்டு (வே. பொ. அ.) - phosphate : ஃபாஸ்ஃபேட்டு (புவி.)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் எழுபதுகளில் இந்நிலையானது இதனினும் வேறான முறையொன்றில் பதிவெய்தியிருந்தது. மருத்துவர். கிரே - மருத்துவர். ஆர்வர் - மருத்துவர். சுமித் ஆகியோரால் இயற்றப்பெற்ற "Human Anatomy" என்னும் நூலை, "மனுஷ அங்காதிபாதம்" எனும் தலைப்பீட்டிலாக மொழிபெயர்த்த "சாப்புமென்" அவர்கள் கீழ்க் குறித்தவாறான ஒலிபெயர்ப்பு முறையை அதனுள் பின்பற்றினார்.

சான்றுகள் : Fiber : வீபர் - fibrin : வீபரின்
Ferrine : வைறைன்.

இலக்கண வழியொழுங்கு :

ஆங்கிலக் கலைச்சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்கையில் மரபிலக்கணத்தைப் பின்பற்றி, மொழி முதலாக வந்துநேரும் உயிரெழுத்துக்களைப் பயன்படுத்தும் போக்கினை - இலங்கைக் கலைச் சொல்லாக்கத்தினர் சற்று விடாப்பிடியாகவே பின்பற்றியுள்ளமையையும் இவ் வரலாற்றிடையே காணுகின்றோம்.

சான்றுகள் :
Radar : இரேடார் (பௌ. வி) - lumen : இலுமன் (பௌ.வி) -
Young's modulus : இயங்கின் குணகம் (பௌ. வி)

இவற்றால் பயனின்மையைப் புரட்சிப்போக்கும் தெள்ளிமையும் வாய்ந்திருந்த பாவேந்தர் அவர்கள், தம் "தமிழியக்கம்" என்னும் நூலுள் ஓரிடத்தே " வடமொழி ஏன் ? வடமொழிக்கு ஒழுங்குதான் ஏன்? " என்றவாறு சூடுபடச் சுட்டி நின்றமையும் இவ்விடத்தில் எண்ணத்தக்கது! (காண்க : 9 : பா : 43)

பிழையூறு : உறுத்தங்கள் தரும் படிப்பினைகள்

கலைச் சொற்றொகுப்பு வினையைத் தொடங்கிய காலத்திலேயே - அழுத்தமான விழிப்பு - உணர்வை இவை எனக்குத் தந்தன. தொகுத்தோர் பலரும் திட்டமுறைப் பின்பற்றலில் ஈடுபாட்டோடும் விழிப்போடும் இயங்கியிருப்பின் இந்நிலைகளினாலான பிழைநேர்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம்.

அறிவியல் - கலையியல் நூல்களிடையே ஓரோரிடங்களில் எழுத்துப் பிழைபாடுகள் நேர்ந்திருப்பினும் - அவற்றை ஓரளவுக்குப் பொறுத்துநின்று விளங்கி மேற்செல்லலாம்! பேரிடர்ப்பாட்டுக்கு ஆங்கு வழியேற்படப் பெரிதும் வாய்ப்பில்லை! அதே போதில் - அகரமுதலிகளிலேயே இத் தகாப் பிழைகள் தங்க நேரின் - அதன் வழியே பெருஞ் சிக்கல்களுக்கும் கருத்துக் குழப்பத் தொடர்பதிவுகளுக்குமான வாய்ப்புக்களன்களை விரிவாக்கி நீட்டுவிக்கும் வாய்காலையே வரப்புயர்த்தும்! இதில், நனி மிகுந்த விழிப்பு - மிகமிகத் தேவையானதாகும்.

[கீழே குறித்துள்ளவாறு எழுத்துப் பிழைபாட்டுப் பதிவு ஒன்று நிகழ்ந்துவிடுமானால் - எத்தகு கருத்துச் சிக்கல்

நேர்ந்துவிடலாகும் என்பதைச் சற்றே கருதிப்பார்ப்பினும் - முற்குறித்துள்ள கருத்தின் உண்மைநிலையை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளவியலும்! சான்று : per annum : ஆண்டுக்கு - per anum : குதவழியாக ; எருவாய்க்குழி வழியாக]

"adrenal" என்பதற்குரிய செப்பத் தமிழ்க் கலைச் சொல்லாக்கம் "அண்ணீரகம்" என்பதாகும். நிரம்பிய பயில்விலுள்ள இக்கூட்டுச் சொல்லுள் முற்பகுதியிலுள்ள "அண்" என்னும் அடையானது சேர்க்கை, மேலிருப்பு ஆகிய இருவகைக் கருத்துக்களையும் ஒருசேரத் தாங்கியுள்ள அழகு, மிகப் பெரிதும் பொருத்தமானதாகும். (அண் : மேல். ஒ.நோ : அண்ணன், அண்ணல், அண்ணாந்து, அண்ணம் . .) adrenal : adrenal gland (= அண்ணீரகச் சுரப்பி) : ductless glands on top of kidneys, secreting adrenalin. (C.O.D : p : 13)

இவ்வழகிய செழுங்கலைச்சொல்லாக்கத்தின் செப்பப் பொருளைச் சிறிதும் அறியாமல் - சற்றும் ஓர்ந்து பாராமல் க. க. அ. தொகுதி - 3 - இல் adrenal எனவரும் - தொடங்கும் ஆறேழிடங்களிலுமாக adrenal = "அண்ஹிரக" என்றவாறான பதிவைச் செய்துள்ளது!

(மே. கா : adrenalectomy : அண்ஹிரக எடுப்பு - adrenal function test : அண்ஹிரகவியக்கச் சோதனை - adrenergic : அண்ஹிரக வினையிய - adrenocorticotrophic : அண்ஹிரக ஒட்டுவளர் - adrenocorticotrophic hormone : அண்ஹிரக ஒட்டுவளர் ஆர்மோன் - adrenogenital syndrome : அண்ஹிரக - செனிப்பிய இணைப்போக்கு (க. க. அ : 3 : ப:104)

இவ் வகைமையார்ந்த பதிவீடுகளின்வழி நேரலாகும் எண்ணத்திணறல்கள் - இடர்கள் பற்றிய தெளிவார்ந்த முழு - விழிப்பு - உணர்வு நிலையைத் தன் நெஞ்சிலும் - நினைவிலும் - அறிவிலும் நிறக்கச் சுமந்தவாறுதான் - கலைச்சொற்றொகுப் பாளன் ஒவ்வொருவனும், இவ்வகை வினைகளில் இறங்க வேண்டும்!

முற்கூறியுள்ளவாறும் பிறவாறும் நேர்ந்து படிவெய்தியுள்ள பிழைப் பதிவுகளுக்கான சான்றுகள் :

(1) (எழுத்துத் தவற்றுக் கடுவடிவங்கள்) : (ஆங்கிலத்துள்)

(அ) (பிழை :) lacrorotatory (அ. க. தொகுதி : 6 : ப : 991)
[(செந்நிலை:) * levorotatory]

(ஆ) (பிழை :) superscrition (ம. க. : ப : 416)
(செந்நிலை :) superscription

(இ) (பிழை :) techometer (மின்துறை (சி.சொ. து : ப : 44)
(பொருட்பிழை :) விசைமானி
(செந்நிலை:) tachometer (பொருள்: சுழற்சி வேகமானி
(மறுவ.) திசைவேகமானி)

(ஈ) (பிழை :) haetememesis (க. க. அ : 3 : ப : 134)
(பொருள் தெளிவின்மை :) இரத்த வாந்தி
(செந்நிலை:) haematemesis (பொருள் : குருதியுமட்டல்
(மறுவ.) அரத்தவுமட்டல்)

(உ) (பிழை :) gage rearing (ம. க. : ப : 205)
(செந்நிலை :) cage rearing
(எழுத்துத் தவற்றுக் கடுவடிவங்கள்) : (தமிழுள்)

(அ) imperfect competition :
(பிழை :) நிறைவு, நிறைவுருப் போட்டி
(புள்ளியியல் துறை. சி.சொ.து : ப : 29)
(செந்நிலை :) நிறைவுறாப் போட்டி

(ஆ) reed : (பிழை :) பண்ணை
reed cap : (பிழை :) பண்ணைதாங்கி
reeds : (பிழை :) பண்ணைகள்
(கைத்தறி நூல் துறை : சி.சொ. து : ப : 8)
(*செந்நிலைகள் :) பன்னை - பன்னைமூடி - பன்னைகள்
[*பல் > பன் > பன்னை = பல் உடையது. கருத்து அடிப்படையில் இவ் இருசுழி னகரமே சரியானது.]

(இ) capillarity : (பிழை :) நுண்ணிடையூறல் (?)
(நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை : சி.சொ.து : ப : 8)
(* செந்நிலை:) (capillarity : நுண்புழையீர்ப்பெறிவாற்றல்)

(ஈ) deviation : (பிழை:) விளக்கம். (நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை சி.சொ. து : ப :13)
(* செந்நிலை :) (deviation : விலக்கம்)

(உ) decrease : (பிழை:) குரைத்தல் (நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை சி. சொ. து : ப :13)
(* செந்நிலை:) (decrease : குறைவு; குறைப்பு)

(ஊ) forced circulation : (பிழை :) வலிந்த காற்றோட்டம்
(க. க. அ : 3: ப: 62)
(* செந்நிலை :) (வலிந்த சுற்றோட்டம்)

(எ) palatine teeth : (பிழை:) அன்னப்பற்கள்
(மீன் துறை - சி. சொ. து : ப : 35)
(* செந்நிலை :) (அண்ணப்பற்கள்)

எழுத்துப் பிழையூறு, கருத்துப்பிழை விளைவுக்கு அடிகோல வல்லது. அதிலுங் குறிப்பாக, அகரமுதலிகளில் நேரவே கூடாதது, அது!

தெள்ளிய பல்வேறு பொருட்பதிவுகளிலுமுள்ள ஒரு பொருட்கூற்றினை மட்டும், நன்கு உற்று நோக்கிவிட்டு - அருக்க வடிவத்தில் (abridged form) அதனைக் குறிக்கக் கருதி, அதையும் பிழைபடப் பதித்துவிட்டதன்வழி - மிகக் குழப்பத்தையும் மயக்கத்தையும் தந்து உறுத்தும் கலைச்சொல்லுக்குச் சான்றாகக் கீழே குறித்துள்ள செய்தியொன்றைக் காணலாம்!

briquette (அல்லது - briquet) என்பது, brique என்னும் சொல்லொடு "ette" என்னும் சிறுமைப்பின்னொட்டுப் பெற்ற பிரஞ்சுமொழிச் சொல்லினின்று, ஆங்கிலம் கடன்கொண்ட சொல்லாகும்.

நிலக்கரித் தூககளை ஒருமைப்பட அமுக்கி உருவாக்கப்பெறுகின்ற - அல்லது அத் தூககளே ஒருமைப்பட்டு அமுங்கி உருவாகிப்போன கல்லுருக் கட்டிக்கு இன்று வழங்கும் நிலத்தியற் கலைச்சொல், இது! இச் சொல்லுக்குச் "செங்கல் உருக்கட்டி, தூகக்கட்டி, உருக்கங்கட்டி (உருக்கன்)" என்றவாறாகப் பல அகராதிகளில் -பல வடிவங்களில் கலைச்சொல்லாக்கங்கள் பதிவு பெற்றுள்ளன. இவற்றிற் பெரும்பான்மையாகப் பதிவு பெற்றுள்ள "கட்டி" என்ற சொல்லையே நிலைநிறுத்த அச்சீட்டுக்கு அனுப்பப்பெற்றுத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனப் பொறியியல் - தொழில்நுட்பவியல் கலைச்சொல் அகராதியுள் (ப : 3) (1973) பதிவெய்துகையில் " சட்டி" என்றவாறு பிழைமையேற்றுள்ளமை இவ்விடத்திற் கருதத் தக்கதாகும்.

(2) எழுத்துக்குறையானது பொருட்பிழையை உருவாக்கிக் குழப்பிவிடும் நிலை உணராது மிகப்பல்லிடங்களிலாகத் தொகுப்பாளர் பலரும் இத்தவறுகளைச் செய்துள்ளனர்.

சான்று : psychometry : நீர்மடர்த்தியியல்
(காண்க : scope of faculties -
(Sathasivam Sathanantham) - p :160)
(* செந்நிலை :) psychrometry : ஈரப்பதனிலையியல்;
(ஈரப்பதனிலையளப்பு)

(3) நம் செந்தமிழுள் நன்கு பரவலான பயில்வில் வழக்காறு கொண்டிருக்கும் - எளிமையும் தெள்ளிமையும் அமைந்த சொற்கள் பலவற்றையும் புறக்கணித்துவிட்டுத் - தமிழியல்புக்கு ஏற்றவாறான தெளிவான முனைப்புகளைப் போன்று செய்துள்ள சொல்லாக்க முயற்சிகள் பலவற்றையும் இக் கலைச்சொல் வரலாற்றில் ஆங்காங்கும் காணவியல்கின்றது.

"இல்" என்னும் ஒளிக்கருத்து (> வெண்மைக்கருத்து) வேரினின்று திரிபெய்திய (இல் > எல்) "எல்" என்னும் சொல்லடியினின்று - வெண்மை நிறத்ததாகிய யாக்கைக் கட்டுமான உறுப்பானது, என்பு (< எல் + பு) என்றவாறும், எலும்பு (< எல் + உம்பு (ஓர் ஈறு) என்றவாறும் ஈரிய செப்பச்சொற்கள் வழியே மிகப் பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே - தமிழில் குறிக்கப்பெற்றுவருகின்றன. "என்பு", இலக்கிய வழக்கிலுள்ளது; "எலும்பு", இயல்பு வழக்கிலுள்ளது.

கிரேக்க மொழியுள் எலும்புக்கு (os >) "osteo" என்பது பெயர். இக் கிரேக்கச் சொல்லினின்று பதிவெய்தியதே "அஸ்தி" என்னும் சமற்கிருதச் சொல்லுமாகும். இதனை நம் தமிழிலும் கையாண்டு, பன்னூற்றுக்கணக்கான இடங்களில் வலியவலியப் பதிவுசெய்துள்ளமை, ஒரு வகையில் அடாத செயலேயாகும். (காண்க : osteosarcoma : அஸ்தியாமிகம் அ. ஆ. க (கட்டுரைச் சுருக்கக் கோவை (ப :7)

"அஸ்தி" என்பது வடசொல்லாதலின் - அச்சொல்லைத் தமிழியல்புக்கேற்ப "அத்தி" என்னும் வடிவிலாக மாற்றஞ்செய்து பல்வேறு கூட்டுச்சொற்களிலும் பயன்படுத்தும் தெளிவற்ற கடைப்பிடிப்பைப் பல தொகுப்புகளிடையே காணலாம். ["வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ . . ." (தொல். சொல். எச்சவியல்: 5:11) என்னும் நூற்பா தந்துள்ள கருத்துப் போக்கைக் காரணங்காட்டி மேற்கொள்ளப்பெற்றுள்ள அறியாமையும் மெய்ப்புறக்கணிப்புங் கொண்ட அடிமைப்பாட்டு அடாநிலை வினைப்பாங்கு , இது !]. "அத்தி" (ficus) என்பது மரப்பெயர் ஒன்றனுக்குச் சிறப்புற வழக்குண்மையையும் - அதனை எலும்புக்கு ஈடாகக் கையாளுதலில் ஏற்படும் பாரிய கருத்து மயக்கத்தையும் உணராது, இக் கொடுவினை மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

இம் மயக்கப்பாடுகளை ஏற்படுத்தியுள்ள க. க. அ . - தொகுப்பினின்று சிலவற்றை மட்டும் எடுத்து வைத்துள்ள பட்டியலிது!

சான்றுகள் : ossicle : நுண்ணத்தி (< நுண் + அத்தி) - ossification : அத்தியாக்கம் - osteitis : அத்தியழல் - osteoarthrosis : அத்திமூட்டு நோய் - osteoarthritis : அத்திமூட்டழல் - osteoblast : அத்திமூலச்செல் - osteochondritis : அத்திக்குறுத்தழல் - osteochondroma : அத்திக் குறுத்துப் புத்து [முற்குறித்துள்ள இரு சொற்களிலும் "குருத்து" என்பது, "குறுத்து" என்றவாறு எழுத்துத் தவறாகப் பதிவெய்தியுள்ளமை கண்டு நோகத் தக்கது. புற்று என்பது புத்து என்றாகிப் பதிவாகியுள்ளது.] osteoclast : அத்தி கரைப்பி - osteoclastoma : அத்தி கரைப்பிப் புத்து(!)- osteocyte : அத்திச்செல் - osteodystrophy : அத்திவளக்கேடு - osteogenic : அத்திசெனிம - osteoid tissue : அத்தியன்னதிசு - osteoma : அத்திப் புத்து (!) - osteomalacia : அத்திமெலிவு - osteopetrosis : கல்லத்தியம் (< கல் + அத்தி (!) + அம்) - osteophage : அத்திவிழுங்கி - osteophyte : அத்திமுளை - osteophony : அத்தியொலி - osteoplasty : அத்தியமைப்பு - osteotome : அத்திவெட்டி (காண்க : க.க.அ : 3 : ப :154)

இலத்தீன மொழியில் " fragilitas ossium " என்பது எலும்பு நொறுங்கியல்பைக் குறிக்கும் - ஒரு நோயியற் சொல்லாகும். இதற்குரிய கலைச்சொல்லாக "நொறுங்கத்தியம்" (- நொறுங்கு + அத்தி + அம்) என்றவாறு குழப்பிச் சேர்த்து ஒரு வடிவத்தைச் சமைத்துள்ளது, முற்குறித்த இவ் அகராதித் தொகுப்பு. (காண்க : க. க. அ : 3 : ப : 131)

இம் முற்குறித்த வகையான பிழைபாடுகள் - மயக்கங்கள் - குழப்பங்கள் யாவும், இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் முற்றுங் களையப்பெற்றுள்ளன !

(4) எழுத்துப் பெயர்ப்புகளும் - தமிழமைப்பு உருவில் மயக்கும் எழுத்துப் பெயர்ப்புகளும் :

(அ) [வய் : பிரிவு - பிளவுக் கருத்து வேர்] வய் > வய்ல் > (வல்) > வால் > வாள் = அறுப்பது ; வெட்டுவது ; வெட்டுங்கருவி. இன்றும் அறாது நிலைத்து - நம்மிடையே பரவலான பயில்விலிருந்து வரும் பழம்பண்டைய செந்தமிழ்ச் சொல்லான இவ் "வாள்", இலத்தீன மொழியில் (வாள் > (L) fal(x) எனத் திரிபெய்தியுள்ளது. "அரிவாள்" என்பதுவே, அம் மொழி கொண்டுள்ள பொருளும் ஆகும். (L) falx = sickle)

முதுகந்தண்டுக்கும் மூளைப்படலத்துக்குமான புறப்பகுதியில் துருத்திய நிலையிலாக "அரிவாள்" உருவில் அமைந்திருக்கும் "கடினவுறை" (dura mater), இது !

இதனைச் - சற்றும் விளங்கிக்கொள்ளாமலேயே, க. க. அகராதி தம் தொகுப்பொன்றுள், தமிழியல்புக்கேற்பத் திருத்தியமைப்பாக்கிய ஏதோவொரு புத்தம்புதிய ஆக்கம்போல, "வலசு" என்றவாறொரு எழுத்துப்பெயர்ப்பைக் குறித்துள்ளதோடு, அது தொடரும் சில கூட்டுச் சொல்லமைப்புகளையும் பதித்துள்ளது.

சான்று : falx : வலசு - falx cerebelli : செரிபெல்ல வலசு - falx cerebri : செரிபர வலசு (க. க. அ : 3 : ப : 129)

(* செந்நிலை : falx : அரிவாளுரு - falx cerebelli : சிறுமூளை-அரிவாளுரு- falx cerebri : மூளைய - அரிவாளுரு)

(கலைச்சொல் வரலாற்றில் - திருத்தமான சொல்லமைவு நோக்கிய செலவில் - இதற்கெனத் தம் "மருத்துவக்கலைச்சொற்கள்" என்னும் தொகுதியுள் மருத்துவர். சாமி. சண்முகம் அவர்கள் சற்று முயன்றுபார்த்துள்ளார் என்பதுவும் ஈண்டு எண்ணத்தக்கதாகும். அவரின் பதிவு, falx என்பதற்கு "அறிவாள்-உரு" என்பதாகப் பதிவுற்றுள்ளது. (காண்க : மேற்படி நூல் : ப : 190). "அறிவாள்" என்பது மயக்கமும் மரபுப் பிழைமையும் கொண்டதாகும் ; (அறிவாள் =) அறிந்து கொள்ளுவாள் (தெரிந்து கொள்ளுவாள்) என்றவாறான மயக்கம் நோக்கியும் ஊஞ்சலாட வல்லது ! வழக்கில், அரிவாளும் உண்டு,- அறுவாளும் உண்டு. அறிவாள் என்பதாக அரிகின்ற வாளுக்கு வழக்கு இல்லை ! "அரிவாள்" என்பது இடையிலே அறுபட்ட பள்ளவடிவுகள் அமைந்து - அதாவது வெட்டுதற்குரிய விளிம்பு நீட்சியில் பல்லுருக் கூர்ம்முனைகள் அமைந்து அரிதற்குப் பயன்பெறும் வாள்வகை . அறுவாள் என்பதோ, அறுக்கும் வாளாகும்.

(செ. ப. க. தமிழ்ப் பேரகராதியுள் பதிவுற்றுள்ள "அரிவாள் மணைப்பூண்டு " என்னும் வழுவடிவத்தைக் களைந்தாகவேண்டும் எனச்சுட்டிய மொழிஞாயிறு. ஞா. தேவநேயப் பாவாணர் - அதற்குரிய திருந்திய வடிவம் "அரிவாள் முனைப் பூண்டு " என்பதே எனக் குறித்துவிட்டு - அதற்கு அடியிலாக "அரிவாள் முனைப் பூண்டென்பது மணையரிவாளின் முனையிலுள்ள தேங்காய் திருகி போல், ஓரத்திற் பல்வடிவமான முனையுள்ள வட்ட இலையுடைய பூண்டு.அரிவாள் மணையென்பது அரிவாளைப் பதித்திருக்கும் கட்டை. அதைப்போன்ற பூண்டென்பது பொருளற்றது" என்றவாறு குறித்திருக்கும் செப்பக்கருத்தையும் ஈண்டு ஒப்புநோக்கிக் கருதுதல் தகுவதாகும். (காண்க: செ. ப. க.சீ: ப:9)

(ஆ) yaws : யாசு (க. க. அ : 3 : ப : 131)

(* செந்நிலை : yaws (PATH.) : காட்டுப் புண் (நோயி.)

(இ) hammer : ஆமார்

மேலுங்காண்க : board drop hammer : தகட்டு வீழாமார்

(< தகட்டு வீழ் - ஆமார்)

(காண்க : இரசாயன எந்திரவியற் சொற்றொகுதி : (இலங்கையரகப்பதிப்பு) (1967) (ப : 20)

(ஈ) funnel : புனல்

மேலுங்காண்க : funnel cartilage : புனல் குருத்தெலும்பு

funnel movement : புனல்வடிவ அசைவு

(க. க. அ : 1 : ப: 138)

(உ) petrol : பெட்ரோல் (வணிகவரிச்சட்டங்கள் துறை சி. சொ. து. (1976) (ப: 18)

(* செந்நிலை : petrol : கன்னெய்)

(ஊ) humerus : ஹூமரம் (க. க. அ : 3 : ப : 136)

(*செந்நிலை:) humerus (ANAT.) : மேற்கையெலும்பு (உடற்கூறு)

(4:1) திரும்பிய ஒலிபெயர்ப்பும் - உடனிணைந்த தமிழ்ச்சொல்லமைவும் ஆகிய இருபிறப்பிவகைப் பதிவுக் கோளாறுகள் :

இருபிறப்பிச் சொற்பதிவுகளுக்கான சான்றுகள் :

(அ) alkylation : அற்கைலேற்றம் (அற்கைல் + ஏற்றம்) (இ. சொ. (1956) ப : 1)

(ஆ) amination : அமினேற்றம் (அமின் + ஏற்றம்) (இ. சொ.) (1956) (ப : 1)

(இ) carbonation : காபனேற்றம் (காபன் + ஏற்றம்) (இ. சொ : 1)

(ஈ) chlorinated : குளோரினேற்றிய (குளோரின் + ஏற்றிய) (க. க. அ : 3 : ப : 48)

chlorination : குளோரினேற்றம் (குளோரின் + ஏற்றம்) (க. க. அ : 3 : ப : 58)

(உ) esterification : எஸ்ட்டராக்குதல் (எஸ்ட்டர் + ஆக்குதல்) (க. க. அ : 3 : ப : 49)

(ஊ) hydrogenation : ஹைடிரஜனேற்றம் (ஹைடிரஜன் + ஏற்றம்) (க. க. அ : 3 : ப : 64)

hydrogenation: ஐதரசனேற்றம் (ஐதரசன் + ஏற்றம்) (இ. சொ : (1956) ப : 1)

(மேலுங்காண்க : vulconization : வல்கனைற்றுச் செய்தல் (பௌ. வி) - leadacetate : ஈயவசற்றேற்று. (acetate : அசற்றேற்று ?) (இசொ.) - complex ion : சிக்கலயன் (சிக்கல் + அயன்) (இசொ.) - Heterodyne beat method : ஏற்றோதைனடிப்புமுறை (Heterodyne : ஏற்றோதைன்) (இ.சொ.) - Hypoxic hypoxia தாழாக்சியத் தாழாக்சியம் (தாழ் + ஆக்சியம்) + (த்) + (தாழ் + ஆக்சியம்) (க. க. அ : 3 : ப : 138)

தமிழ்மொழியின் திறத்தகமைத்தெளிவும் - அதன் வளர்நிலையாக்க வரலாற்றையும், அறிவியலையும் விளங்கிக் கொள்ளும் மனப்பாங்கும் வாய்ந்த எவர்க்கும், இம் மேற்குறித்துள்ள பதிவுகள் மனநிறைவைத் தாரா.

(5) வந்துள்ள கலைச்சொற்றொகுப்புகள் பலவற்றுள் - இலக்கண நுட்பமின்றிப் பதிவு செய்யப் பெற்றுள்ள தாறுமாற்றுச் சொற்கள் :

சில சான்றுகள் :

(அ) hydraulics : நீர்மயியல் (க. க. அ : 3 : ப : 63)

(* செந்நிலை : நீர்மவியல்)

(ஆ) hard palate : வன்னண்ணம் (க. க. அ : 3 : ப : 135)
(* செந்நிலை : வல்லண்ணம்)

(இ) hard tick : வன்னுண்ணி (க. க. அ : 3 : ப :135)
(* செந்நிலை : கடினவுண்ணி)

(6) கலைச்சொற்றொகுப்புகளைத் தொகுத்தார் பலரும், தத்தம் விருப்பத்திற்கு ஏற்றாற் போல தெளிவற்ற கருத்துக்கள் பலவற்றையும் அவ்வாக்கங்களிடையே பதிவு செய்த வைத்துள்ளனர்.

(அ) "Jeep" என்றவாறு இன்று ஆங்கிலத்துள் வழங்கும் சொல் "General purpose (vehicle)" என்பதிலுள்ள முன்னிரு சொற்களின் தலைப்பெழுத்துகளினின்று G.P என்றவாறு வடிவமைத்துக் கொண்டு பேச்சுவழக்கிலாகிப் பரவி நிலைநிற்கும் சொல்லாகும். இவ் இயங்கியின் பயன்பாட்டுத் தகைமை கருதி "மலையியங்கி" என வழங்கினார், பாவாணர் அவர்கள். தமிழக அரசின் ஆட்சிச்சொல் அகராதியுள், "jeep" என்பதற்குரிய தமிழ் இணைச்சொல்லாக "ஈப்பு" என்ற ஒரு வடிவம் குறிக்கப்பெற்றுள்ளது. அதுவே, சி.சொ.து. பிற்பட்டோர் நலத்துறைத் தொகுப்பில் மீள்பதிவும் செய்யப்பட்டுள்ளது. (காண்க : ப : 3)

(ஆ) hysteria : நாடகமாட்டம் (க. க. அ : 3 : ப :138)
(* செந்நிலை : hysteria (PSYCH.) : கட்டுறா - இயல்பிகந்த உளக்கோளாறு(உளத்.)

(இ) axiology : தற்புவியியல் (அ. க : (1997) ப : 7)
(* செந்நிலை : axiology : மதிப்பீட்டியல்)
(axiology : (PHIL.): the science of the ultimate nature, reality and significance of values.
(Greek) axia = value)

(ஈ) foundation of mechanics : பொறியியலின் அடிப்படை (?!)
(கணிதம் : அரச கரும மொழித் திணைக்களம் : இலங்கை : (ப: 89)

(7) அறிவியல் - கலையியல் கல்வியறிவுக்கான வாய்கால் ஆங்கிலேயராட்சியின் பிற்பகுதியில் தொடங்கிய காலத்திலேயே, - சமற்கிருதச் சொற்களையும் - தமிழியச்சாயல் சார்த்திய சமற்கிருதச் சொற்களையும் தாமெழுதிய, தாம் துணையிருந்து உருவாக்க வாய்த்த பாடநூல்களுள்ளும் - பொதுநூல்களுள்ளும் கல்விமார்களிற் பலரும் வரைதுறையின்றிப் படிப்படியே பதிவுகள் செய்வாராயினர்.

1830 -ஆம் ஆண்டளவில், முதல் வகுப்பு முதல் - எட்டாம் வகுப்பு வரையிலான படிப்புகளில் - தமிழ் பயிற்சி மொழியாகத் தொடக்கங் கொண்டது. பிறகு தொடர்ந்த ஒரு நூற்றாண்டுக் காலத்துக்குக் கல்வியுலகப் பாடநூல்கள் பெரும்பான்மையான வற்றுள்ளும் சமற்கிருதச் சொற்களே நிறைந்திருந்தன.

மருத்துவர். கிரே, மருத்துவர். ஆர்னர், மருத்துவர். சுமித் என்னும் பெயரிய அறிவியலறிவுப் பெருமக்கள் எழுதிய "Human Anatomy" என்னும் ஆங்கில நூல், இலங்கையில் - பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1872 - இல்) டி. டபிள்வி. சாப்புமென் என்பவரால் மொழிபெயர்க்கப் பெற்றுப் பாடநூலாக வெளியிடப் பெற்ற - "மனுஷ அங்காதிபாதம்" என்னும் நூல், இதற்குத் தக்க சான்றாகும்.

அந்நூலுள் பரவலாகப் பயன்படுத்தப் பெற்றிருந்த கலைச்சொல்லாக்கங்களிற் சில :

abductor: யோகி, பேதனி - acetabulum : கம்சம் - amastomosis : அனுமுகம் - anconeus : கூபரி - ankle : குற்பம் - anus : பாயு - atlas : சிரதாரி - bladder : கிலோமம் - brain : கோர்த்தம் - bronchus : அசுகம் - capillary : தந்துகி - chyme : யூசம் - circular sinus : விருத்த தாரணி - compressor naris : நாசிப்பிரசாரி - conjunctive : யோகினி - costa : பர்சுவகம் - derma : சருமம் - diaphragm : விதானம் - dissection : விசேதனம் - duodenum : பசதம் - elbow : கூபரம் -etumoid : பாபீரம் - eye : அக்ஷி - foetus : சிசு - infundibulum : பிரணாளி - lacrimal : ககரு - lingualis : சிருவி - muscle : பேசி - nares, nostril : நாசி - tongue : சிகுவம் - vulva : லம்பிகை.

இலங்கையில் - அறிவியலைத் தமிழுள் கொணர முயன்ற - தொடக்க மொழிபெயர்ப்பு வினைகள் பலவற்றுள்ளும், இத் தாக்கம் இருந்தது. 1867-இல் யாழ்ப்பாணத்தில் - " The science and art of surgery " என்னும் ஆங்கில நூல் "டன்வதர்" என்பவரால் "இரணவைத்தியம்" என்னும் தலைப்படியில் மொழிபெயர்ப்புற்றது. அதனுள் பெய்யப்பெற்றிருந்த சொற்களுள் சில, இவை! சான்றுகள் : acromion : சீசகம், சீசகவியம் - duodenum : கசோற்பவம், குவிதீனம் - femur : ஊருவஸ்தி (ஊரு + அஸ்தி) - genitals : சனனேந்திரியம் - glottis : கிராதம் - hand : அஸ்தம், கரம்.

கையைக் குறிக்க - 'அஸ்தம்' , 'கரம்'! நாவைக் குறிக்க - 'சிகுவம்'! தசையைக் குறிக்க - 'பேசி'! மூக்கைக் குறிக்க - 'நாசி'! உள்நாக்கைக் குறிக்க - 'லம்பிகை'! கழுத்தைக் குறிக்க - 'கிரீவம்'! எலும்பைக் குறிக்க - 'அஸ்தி'! தொடையைக் குறிக்க - 'ஊரு'! இடுப்பெலும்புக் கூட்டைக் குறிக்க - 'கூபகம்'! முழங்கையைக் குறிக்க - 'கூபரம்'! நகிலைக் குறிக்க - 'ஸ்தனம்'! வாயைக் குறிக்க - 'லபனம்'! தோலைக் குறிக்க 'சருமம்'! கண்ணைக் குறிக்க - அக்ஷி!.... இன்னவாறான பதிவு முயற்சிகளே, அன்றைய கல்விச் சூழலில் இருந்தன - தமிழில் அறிவியலைச் சொல்லித் தரவே இயலாது - அல்லது கூடவே கூடாது என்பதற்காகவே கருதிய் மனப்பாங்குகளை உள்ளகமாகத் தாங்கியிருக்கும் வெளிக்காட்சிப் பதிவுகள், இவை ! "தமிழால் முடியுமா?" என்றவாறான கேள்விகளுக்கு ஊற்றுவாய்த் தோண்டிப்பார்த்த தொடக்கமுயற்சிகள் இவை!

[சமற்கிருதச்சொல் கிடையாதவிடத்து அல்லது அறியாதவிடத்து - ஆங்கிலத்தையே சற்றே திரித்துப் பதிவுசெய்யும் முயற்சிகளும் நடந்தேறியுள்ளன.

சான்றுகள் : acinus : அசினு - allantois : அலந்தம் - cartilage : காட்டிலாகு - chyle : கைல் - decussation : திக்கசாசன் - follicle : வலிகுல் - ilium : இலியம் - lymph : லிம்பு - mammal : மமல் -

mesentery : மெசந்திரி - nucleolus : நுக்கிலோசு - nucleus : நுக்கிலசு - pudendum : புடென்று - serum : சேரம் - spleen : ஸ்பிளின்- tissue : திசு - vertebra : வேடிபிறம் [இவ்வனைத்துப் பதிவுகளும்- இவையன்ன பதிவுகளும் "டி. டபிள்வி. சாப்புமென்" அவர்களின் மொழிபெயர்ப்பாகிய "மனுஷ அங்காதிபாதம்" என்னும் நூலுள் மல்கிக் கிடக்கின்றன.]

அண்மையில் - பதினைந்தாண்டுக் காலத்திற்கு முன்வெளியிடப்பெற்ற க. க. அ. தொகுப்பிலும் இவ்வாறான அடிப்படை தொடர்ந்துள்ளமையையும் சான்றாகக் காணலாம்.

சான்றுகள் : genealogy : வமிசாவளி (வம்சம் + ஆவளி) க. க. அ : 3 : ப: 132) - decimal : தசம (க. க. அ : 3 : ப : 77) - penis : சிசினம் (க. க. அ : 3 : ப : 131) - production : உற்பத்தி (க. க. அ : 3 : ப : 52) - proportion : விகிதம் (க. க. அ : 3 : ப : 90) - region : பிரதேசம் (க. க. அ : 3 : ப : 91) - test : சோதனை (க. க. அ : 3 : ப : 43) - metal : உலோகம் (க. க. அ : 3 : ப : 17) - pattern : பிரதிமை (க. க. அ : 3 : ப : 18) - rotating shutter : சலனக் கபாடம் (க. க. அ : 3 : ப : 20) - glue : வஜ்ஜிரம் (க. க. அ : 3 : ப : 67) - signal : சமிக்கை (க. க. அ : 3 : ப : 32)

1932 - இல் சென்னை அரசு, - கலைச்சொவ் தொகுப்புக் குழு ஒன்றை அமைத்தது. இக் குழு 7400 கலைச்சொற்கள் அடங்கிய தொகுதியொன்றை வெளியிட்டது. பெரும்பான்மையளவில் சமற்கிருதமும் - (சிறுபான்மையளவில் ஆங்கிலமும்) இத் தொகுதியுள் கலைச்சொல் வடிவங்கள் பெற்றன. அரசு வெளியிட்டிருந்த அப் பட்டியலின் தகாத் தகைமைக்குச் சான்றாகக் கீழ்க்காணும் சில பதிவுகளைக் காணலாகும்.

சான்றுகள் : adhesion : ஸ்நிக்தவம் - approximation : அநிஷ்கர்ஷம் - buoyancy : உன்மஜ்ஜனம் - compensated pendulum : நிவர்த்திதோஷ அவம்பலம் - fractional crystalization : பின்ன ஸ்படிகீகரணம் - interpolation : அவாந்தரகரணம் - inverse ratio : விலோமதராதரம் - positive and negative numbers : தனராசி - ரிணராசி எண்கள் - ratio : ரீதிமானம் - rider : ஆரோஹகம்.

(8) நகைக்கத் தக்க கடுங்குறும்புப் பதிவுகள் :

இய் : பிரிவுக் கருத்து வேர்ச்சொல் (வெட்டுதல் கருத்து). இய் > இய்கு > இகு = பிரி (இகல் = பகை). இகு > எகு > செகு : வெட்டு , பிரி, கொலைசெய்.

(காண்க : "ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று"
(குறள் : 259)

இச் "செகு" என்னும் வினையடியின் அடிப்படையில் உருவாக்கம் பெற்ற "secare" (= to cut) என்னும் இலத்தீன வினைவடிவினின்றே secant, secateurs, section, sector, segment போலும் பலசொற்கள் ஆங்கிலத்துள் வழித்தோற்றம் பெற்றுள்ளன.

பிரிதல் (வெட்டுறுதல்) பொருளிலான "பகு" என்னும் வினையடியினின்று தோற்றப்பெற்ற (பகு + அல் >) "பகல்" என்னும் தொழிற்பெயர், (பகல் >) "பால்" என்றவாறாகத் திரிபெய்திப் பிரிவுக்கருத்தில் வழங்கிவருவது இங்குக் கருதத்தக்கதாகும். (ஒ. நோ : மகள் > மாள் - மகன் > மான் - துகள் > தூள் - அகல் > ஆல்)

"பால்" என்னும் பிரிவுக்கருத்து அல்லது வகைப்பாட்டுக் கருத்து அடிப்படையிலேயே ஆண்பால் - பெண்பால் முதலியன வழங்கப்பெறுகின்றன. இந் நிலையையொத்தே பிரிதற்கருத்தில் (வெட்டுதற்கருத்தில் -) அமைந்த (secare >) "sec" என்பதனின்று "sex" என்னும் பால் வகைப்பாட்டைக் குறித்தற்கான ஆங்கிலச் சிறப்புச்சொல்லும் தோற்றப்பெற்றுள்ளது.

இதையேயொத்து, "அறு" என்னும் பிரிதற்கருத்தில் தோற்றப்பெற்ற "ஆறு" என்னும் எண்ணுப்பெயர் போன்றே, இலத்தீனத்திலும் (secare >) "sec" என்னும் செகுத்தற்கருத்து அல்லது அறுபடற்கருத்தின் அடிப்படையில் (sec>) " sex " என்றவாறு "ஆறு" என்னும் எண்ணுக்குரிய பெயராய்க் கொள்ளப்பெற்றுப் பதிவெய்திப் பயில்விலும் உள்ளது. "sex" என்பதுவே ஆங்கிலத்தில் " six " என்றவாறு திரிந்து பயில்வுகொண்டுள்ளது.

"sextus" என்னும் இலத்தீனச்சொல்லினின்று பெயர்த்தெடுத்து வளர்த்த "sextant" என்னும் ஆங்கிலக் கணிதக் கலைச்சொல்லுக்கு நேரிதாக, "ஆறு" என்னும் எண்ணுப்பெயர்க்குரிய "அறு" என்பதனின்று "அறுமம்" அல்லது அறுபதின்மம் என்றவாறான ஒரு சொவ்லை ஆக்கமுறுத்திக்கொள்ளும் தெளிவின்றி அல்லது முயற்சியின்றி - "சஷ்டி" (sashti) என்னும் சமற்கிருதச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு [இச் 'சஷ்டி' என்னும் சமற்கிருதச்சொல்லும், இலத்தீனத்தின் "sextus" என்னும் அடிப்படையினின்று பற்றியெடுத்து வந்ததேயாகும்!] "சஷ்டிமம்" என்றவாறொரு சொற்புனைவை உருவாக்கிக் கொண்டு, அதனையே மேலும் தமிழியச் சொல்லுரு- அமைப்புப்போன்மைத் தோற்றத்திலாகச் "சட்டிமம்" என்றவாறு திரித்து நிறுத்திய இலங்கைக் கலைச்சொல்லாக்கக் குழுவினர், - அதனைத் தம் தொகுப்புகளிடையே பதிவும் செய்துள்ளனர்.

சான்று : sexa gesimal : சட்டிம
sextant : சட்டிமம்
(கணிதவியற் சொற்றொகுதி : அரசகரும மொழித் திணைக்களம் - இலங்கை - (1965) - ப : 196)

இதனைப் பின்பற்றியே - க. க. அ. தொகுப்பாளரும் "angle sextant" என்னும் கலைச்சொல்லுக்கு இணையாகக் "கோணச் சட்டிமம்" என்றவாறொரு கூட்டுச்சொல்லைப் பெய்துவைத்துள்ளனர். (காண்க : க. க. அ :1: ப : 206)

(9) தவற்றுப் பொருட்பதிவுகள் :

கலைச்சொல் ஒன்றனுக்கு உரிய, செப்பப் பொருட்பாட்டை உள்ளடக்கிய ஆக்கத்தைச் சிந்தித்து உணர்ந்து உருவாக்காமல் - ஓரளவுக்கு அச் செப்பப் பொருட்பாட்டை நெருங்கிய வகையிலாக முன்னரேயே

அமைக்கப் பெற்றுள்ள சொல் - பொருள் விளக்கப் பகுதிகளை உற்று ஓர்ந்துபாராமல் - மேம்போக்காகவும், தவறாகவும் தாம் எண்ணிக் கொண்டுவிட்ட பொருட்பாட்டையே கலைச்சொல்லாகப் பதிவுசெய்யும் போக்குகளும் பல தொகுதிகளிடையே - பல பாடநூல்களிடையே அடங்கியுள்ளன.

சான்றுகள் :

(அ) balcony : பலகணி (த. பா.நூ. நி. கலைச் சொற்கள் : பொறியியல் தொழில் நுட்பவியல். (1973) (ப : 2)

"பலகணி" என்னும் சொல் - பல கண் போன்ற அமைப்பிலாக வடிவமைக்கப் பெற்ற சுவர்ச்சாளரத்தைச் சுட்டும் சிறந்த வழக்குச்சொல். balcony என்பது அவ்வகையிலான சாளரம் அன்று. அது, வீட்டுமாடியின் அல்லது கட்டடமொன்றன் மச்சின் முற்பகுதியில் வெளித் துருத்திய பாங்கிலாக அமைக்கப்பெற்றுள்ள மாடப் பகுதியாகும். (அது, கதவுள்ள அல்லது பலகணியமைந்த சுவர்ப்பகுதியினின்றோ கூட , அமைந்திலங்கலாகும் !) ஆங்கிலக் கலைச்சொல்லும் - தமிழில் அமைந்துள்ள பொருள் வேறுபட்ட கலைச்சொல்லும் ஓரளவுக்கு ஒலியொத்த வடிவமைப்பில் மட்டும் ஒருமைப்பட்டு நிற்பதைக் கண்டு தவறாகக் கருதிக் கோக்கப்பெற்றுவிட்ட பிழையான சுட்டல் இதுவாகும். [இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் - இக் கலைச்சொல்லுக்கு "முகப்பு மாடம்" என்னும் செப்பப் பொருட்பாட்டுக் கூட்டுச்சொல்லே பதிவுற்றுள்ளமை, ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.]

(ஆ) உடலுறுப்புகளின் பெயர்கள் காலங்காலமாய்த் தொடர்ந்து நிலைத்துப் பயிலப்பெற்று வருவனவாகும். அப் பெயர்களிற் சில இடைக்காலத்துக் கருத்துமயக்கத்திற்குள் அகப்பட்டுக் குழம்பியுள்ளன.

"தோள்" என்றவாறு இன்று குறிக்கப்பெறும் உறுப்புப் பெயர், கையின் மேற்பகுதிக்குரிய சிறப்புப் பெயராக மட்டுமே பன்னெடுங்காலமாய்ப் பயின்று வந்துள்ளது. (upper arm = தோள்) (ஒ.நோ : வேய்த் தோளவட்கு" (குறள் : 1113 : 2), எறுழ்த்தோள் (பெரும்பாணாற்றுப் படை : 145), தோள்வளை = தோளில் அணியப்பெறும் வளை வகை (= ring worn on the upper arm), தோளணி = தோள் அணிகலன் (பரிபாடல் : 10 : 115), தோள்கொட்டுதல் - தோள்தட்டுதல். இத் "தோள்" என்னும் உறுப்புப் பெயர், தவறுதலான மாற்றம் பெற்றுச் சுவல் (shoulder) பகுதியைச் சுட்டியவாறு இன்று வழங்கப்பெற்று வருகின்றது. "புஜம்" என்னும் சமற்கிருதப் பெயர் "சுவல்" குறித்து ஆளப்பெற்று நிலை நிற்கத் தொடங்கவே, சுவல் இருந்த இடத்தில் தோள் ஏறித் தொற்றிக் கொண்டுள்ளது! (சுவல் : சுமக்கும் முண்டு உறுப்பு. " நெறிப்படச் சுவல் அசைஇ") கலி : 9 : 3) " கூழை சுவல்மிசை " கலி : 56 : 4)

இப் பொருள்திரிபுப் பிழைபாடு,- செ. ப. க. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்துள் பக்கம் : 929 - இல் அழுந்திய பதிவு கொண்டுள்ளது. (சான்றுகள் : shoulder : தோள் - shoulderjoint : தோள் மூட்டு)

இதனைத் தொடர்ந்து, இச் சுவற் பகுதியைக் குறித்தற்கு வேண்டிய கலைச்சொற்களிற் பல, கீழே குறித்துள்ளவாறு தவறுதலாகப் பெயர்க்கப் பெற்றுள.

சான்றுகள் : omalgia : தோள்வலி - omarthritis : தோள் - மூட்டழற்சி (காண்க : (ம. க : ப : 316)

(* நம் செந்நிலைப் பதிவுகளிற் சில : shoulder (ANAT.) சுவல் (உடற்கூறு.) - shoulder-joint (ANAT.) : சுவல் மூட்டு (உடற்கூறு.) - shoulder girdle (ANAT.) - சுவல் வளையம் (உடற்கூறு.)

: omalgia : சுவல்வலி - omarthritis : சுவல்மூட்டழற்சி - omagra : சுவல்மூட்டுவீக்கம்)

(இ) lagoon : (a shallow sound, pond or lake generally near but separated from or communicating with the open sea (Mc. Graw Hill - Dictionary of Scientific and Technical Terms - Third Edition : p. 884)

இச் சொல்லுக்குரிய பொருள்களாகக் காயல், கடற்கழி முதலியன செ. ப. க. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்திலும் (ப : 569), உப்பங்கழி, காயல் என்பன தமிழ்நாடு துறைமுகத்துறை - சிறப்புச் சொல் துணையகராதியிலும் (ப : 45) - இன்னவாறே பிறவற்றிலும் - பதிவெய்தியுள்ளன.

(* செந்நிலை : lagoon (GEOGR.) : கடல் தாங்கு; நீர்த்தாங்கு (நிலவரை.) - lagoon nebula (ASTRON.) : நீர்த்தாங்கு - ஒண்முகிற் படலம் (வானி.) - lagoon water (HYD.) : நீர்த்தாங்கு நீர் (நீரி) (அ. க. அ : ப : 527) (தாங்கு : தடுப்பு -அகப்பாட்டு நீர்நிலை)

(ஈ) அடிப்படைப் பொருளையே உணராது பெயர்த்த முயற்சிகள் பல : (அவற்றுள் சான்றுக்கு ஒன்று :)

"Fanum" என்பது கோயிலைக் குறிக்கும் இலத்தீனச் சொல் ஆகும். அதனின்று தோற்றிய "fanaticus"(= belonging to a temple inspired by a god) என்பதனின்றே "fanatic" என்னும் ஆங்கிலச்சொல் பொருள்விரிவாக்கம் பெற்றுப் பயில்விலுள்ளது. "மிகையார்வ அழுத்த மனப்பாங்குடையவர்" என்பதற்குரிய பொருளிலான இச் சொல் - முன்னெடைச் சுருக்க வடிவிலாக (deprecated abbreviation) " fan " என ஆயிற்று. இதனின், பலர்பால் வடிவமே " fans " என்பதாகும். (இதாவது, fanatics என்னும் சொல்லுக்கமைக்கப் பெற்ற குறுக்கவாக்கம் !) " fan " என்னும் இச் சொல், எவ்வடிப்படையில் தோன்றியுள்ளதென்பதைக் கருத்தளவிலாகச் சற்றும் கருதாது - "விசிறி" என்னும் பொருளையே தவறுதலாக உட்கொண்டுவிட்டு fan = விசிறி, fans = விசிறிகள் என்றவாறெல்லாம் வழங்கிப் பயின்றுவரும் பல பிழைபாடுகளைச் சொல்லாக்க வரலாற்றிடையே காணுகின்றோம். (காண்க : Film fans association : திரைப்பட விசிறிகள் கழகம் - ("வளரும் தமிழ்" - 'சோமலெ' - ப : 348 - 349) (1988).

(10) அன்றைய பொருளையே இன்றும் பற்றுதல் :

கால அறிவுவளர்ச்சியில் - சொற்களிடையே படிப்படியே ஏற்பட்டுள்ள பொருட்பாட்டு மாற்றங்களின் தகைமையைக் கூர்ந்துகண்டு இன்றைக்கு உரிய சொற்பொருள்களையே பதிவுசெய்தல், மிக மிக இன்றியமையாததாகும்.

(அ) 1965 - இல் வெளியிடப் பெற்ற செ.ப.க. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்துள் "infant" என்னும் சொல்லுக்கு - ஏழு வயதுக்குட்பட்ட குழந்தை, ஏழு வயதுக்குட்பட்ட சிறுமி, (சட்டம் :) இருபத்தொரு வயதுக்குட்பட்டவர் என்றவாறாக முப்பொருட்பாட்டுக் குறிப்புகளும் உள்ளன (ப : 528). இன்றைய தெளிவார்ந்த வரையறுப்புப் பொருளில், - அது ஈரகவைக்குட்பட்ட சிறுகுழந்தையை மட்டுமே குறிக்கும் சொல்லாக நின்று, நிலைப்புறப் பயில்விலுள்ளமை நன்கு கருதத் தக்கதாகும்.

(ஆ) "Neurosis" என்னும் கலைச்சொல், "நரம்புச் சிக்கலால் ஏற்படும் உடல்நிலைக் கோளாறு" (செ. ப. க. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் - : ப : 665) என்னும் பொருட்படுமாறு உருவாக்கப் பெற்றதெனினும் - இச் சொற் குறித்துநிற்கும் இன்றைய பொருள்வளர்ச்சியாக்கமும் - மருத்துவ அறிவியல் முடிவுக் கருத்தும் - மிக மேம்பட்டு வளர்ந்து தெளிவடைந்திருப்பதை நன்கு உளங்கொள்ள வேண்டும். இது உளக்கோளாற்றை மட்டுமே குறிப்பதாகும். உடல்நிலைக் கோளாறுமன்று; நரம்புச் சிக்கலால் ஏற்படுவதுமன்று.

சான்று : neurosis : நரம்புக் கோளாறு (வா. க. : தொகுதி : 2 : ப : 1002) - neurosis : நரம்புப் பிறழ்வு (வா. க : தொகுதி : 3 : ப : 1006) (* "உளக்கோளாறு" இது என்னும் உண்மையை அதே- வா. கா. தொகுதி - 1 - இல் தெளிவுறப் பதித்துள்ளதும் இவ்விடத்தில் கருதி மகிழத் தக்கதாகும்.)

(இ) "Malaria" என்னும் ஆங்கிலச் சொல், malus + aeris என்னும் இலத்தீனச்சொற்கள் இரண்டன்வழி - இத்தாலி மொழியுள் வழங்கப்பெற்ற "mala aria" என்பதனின்று பற்றியெடுத்ததாகும். அடிப்படையில், தீயகாற்றை மூச்சிழுப்பதால் நேர்கின்ற காய்ச்சல் நோயிது என்று தவறாகக் கருதப்பெற்றுப் பெயராக்கம் பெற்றுள்ளது. [(L) malus : bad. (L) aeris : air]. கொசுக்காய்ச்சல் - ஒட்டுண்ணியை (plasmodium) உட்கொண்டு வந்து - மாந்தவுடற்குள் உட்புகட்டிவிடும் "தீங்குதவி" (: anophelos) (< (GK.) anopheles = hurtful - < an : privative and ophelos : help) என்னும் கொசுவால் ஏற்படும் நச்சுக் காய்ச்சல் இது, என்பது, மருத்துவ அறிவியல் முடிபு. (* இதற்கென இவ் அ. க. அ : "முறைக் காய்ச்சல்" என்னும் மரபுவழிப்பட்டுப் பயில்விலுள்ள பெயரீடு ஒன்றையும் - "நச்சுக் காய்ச்சல்" என்னும் மறுவழக்கீடு ஒன்றையும் பதிவுசெய்துள்ளது.)

(ஈ) (L) symposium < (GK.) sumposion. (GK.) sympotes = fellow drinker)"symposium" என்பதற்குரிய அடிப்படைப் பொருள் "கூடிக்குடிக்கும் குழு - அரங்கு" என்பதுவே. (:drinking party). உரிய கருத்துக்களை முன்வைத்துக் கலந்துரையாடி ஆயப் பெறுதற்கென அமைந்த "கருத்தரங்கு" என்றவாறு, வளர்ச்சியாக்கம் பெற்று, இன்று பரவலான பயில்விலுள்ளமை ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

(11) கொச்சைச் சொற்கள் பலவற்றை - அவற்றின் சிதைவு நிலைகள் பற்றி அறியாமலேயே பயன்படுத்தியுள்ள போக்குகளையும் இக் கலைச்சொல்லாக்கத் தொகுப்புப் பதிவுகளிடையே காணலாகும்.

(அ) ganglioneuroma : நரம்பு முடிச்சுப் புத்து

(க. க. அ : 3 : ப : 132)

(*செந்நிலை : நரம்பு முடிச்சுப் புற்று)

(ஆ) hand vice : கைப்பிடிச்சுராவி (க. க. அ : 3 : ப : 14)

(*செந்நிலை:) [கைப்பிடித்துராவி (< கைப்பிடித்து உராவி)

அல்லது- கைப்பிடித்தராவி (< கைப்பிடித்து அராவி)]

(இ) grain : குருணை (க. க. அ : 3 : ப : 63)

(* செந்நிலை : குறுநொய்)

(ஈ) quadriceps : நாத்தலைத்தசை (நா + தலை + தசை ?)

(அ. அ : ப : 573)

(* செந்நிலை : நாற்றலைத் தசை (< நால் + தலை + தசை)

(12) சொல் ஒன்று, முற்றா எச்சமா என்பது பற்றிய அடிப்படையைக் கூட விளங்கிக்கொள்ளாமலேயே தவறுதலாகப் பயன்படுத்தியிருக்கும் இடங்கள் கலைச்சொல் தொகுப்பாக்கங்களிடையே மிகுதியாய்ப் பதிவுற்றுள்ளமையை யுங் காணலாம்.

calcination : புடம் வை (நெடுஞ்சாலை ஊரகப்

பணித்துறை - சி. சொ. து : ப : 8)

மேலுங்காண்க : homoblastic : ஓரகப் படலக் கண்ணறை - homocentric : ஓரகமையக் கதிர்கள் - homochiamydeous : ஓரக வட்டம் - homochromous : ஓரகநிறம் (அ. அ. ப : 308)

(13) சொல் தோன்றிய வகைமையையும் - அடிப்படைப் பொருளையும் உணராது நன்கு பொருள்விளங்கித்தோன்ற வேண்டும் என்னும் விருப்பத்தோடு மிகைச்சொல் சேர்க்கப்பெற்ற பல கலைச்சொற்பதிவுகள், சிக்கலையும் கருத்துக்குழப்பத்தையும் உருவாக்கியுள்ளமையையும் சிலவற்றிடையே காணலாகும்.

(அ) (பாய் > பாய் + அனம் (ஓரீறு) > பாயனம் > பாசனம் - (யகர- சகரத் திரிபு). பாசனம் : பயிரீட்டுக்கான நீர்பாய்வு நிலை. irrigation : பாசனம்)

"பாசனம்" என்னும் சொல்லே நிறைவுடையதாகவும் சற்றும் மயக்கமும் - குழப்பமும் அற்றதாகவும் உள்ளமையை உணராமல் - "நீர்" என்னும் சொல்லொன்றைத் தேவையில்லாமலேயே உடன்புணர்த்தியவாறு "நீர்ப்பாசனம்" (= irrigation) என வடிவமைத்துப் பயில்வுக்குள்ளாக்கினமையால் சிக்கல் நேர்ந்துள்ளது.

சான்று :

small irrigation project : சிறுநீர்ப் பாசனம்

[சிறுநீர் (?!.) = மூத்திரம்]

அருங்கலைச்சொல் அகரமுதலியுள் அமைந்திலங்கும் உரிய நெறிமுறைகளினடிப்படையிலான பதிவீடுகள் பற்றிய விளக்கம்:

(1) இடைக்கோடீடு :

கருத்துக்களைப் பதிவு செய்கையில், மிகப்பல கூட்டுச்சொற்கள் புணர்ச்சியமைப்பின் வழியில், - வேறு பொருட்பாடு அல்லது பொருட்பாடுகள் அடைதற்கான வாய்ப்பு உள்ளது. மிக நீண்ட நெடிய மொழிவரலாற்று மரபுநிலையுடைய தமிழில் - பிறமொழி எவற்றிற்கும் அமையாத அளவுக்குப் பேரளவிலான பொருட்பாட்டு மாற்றத்திற்கு அல்லது மயக்கத்தோற்றத்திற்கு வழியமைந்திருத்தலை மிக நுணுக்கமாகக் கவனித்துப்பார்த்து - அப் பொருட்பாட்டு மாற்றத்தோற்றமும் - மயக்கமும் எழாத வகையிலாக அவ்வகைச் சொற்களிற் பெரும்பான்மையனவற்றிற்கு “இடைக்கோடு” என்னும் குறியீடு இடையிட்டு, அவை - இவ்வகரமுதலியுள் செப்பநிலைக்குட்படுத்தப் பெற்றுள.

சான்றுகள்:

(அ) antero-posterior axis: *முன்பின் நீட்சி*
(முன்பு = வலிமை?!.)
*(*செந்நிலை : முன் - பின் நீட்சி)*

(ஆ) core-box : *கருப்பேழை*
(கருப்பேழை < கருப்பு + ஏழை?!)
*(*செந்நிலை : கருப் - பேழை)*

(இ) cupola (MECH.ENG.): *(இ-1) உருக்குலை (இ-2) உருக்குமுலை (இ-3) உருகல் உலை (இ-4) உருகுலை (இ-5) உருக்கல் உலை (இ-6) உருக்கல்லுளை (?!..)*
*(*செந்நிலை : உருக்கு - உலை)*

(ஈ) disguised unemployment : *மறைமுக வேலையின்மை (< மறைமுகவேலை + இன்மை ?!)*
*(*செந்நிலை : மறைமுக - வேலையின்மை)*

(உ) edition de luxe (*FRENCH) : *உயர்விலைப் பதிப்பு*
(உயர்வு + இலை + பதிப்பு ?!..)
*(*செந்நிலை : உயர் - விலைப் பதிப்பு)*

(ஊ) eerie, eery : *முன்பின் எதிர்பாராத (முன்பு : வலிமை?!)*
*(*செந்நிலை : முன் - பின் எதிர்பாராத)*

(எ) electric drill : *மின்துளைப்புளி (மின்துளை + புளி?!)*
*(*செந்நிலை : மின்துளைப்பு - உளி)*

(ஏ) elegist : *இரங்கற்பாவலர் (இரங்கல் + பாவலர் ?!..) (= இரங்கல் உடைய பாவலர் ?!..= இரங்குதற்குரிய பாவலர்)*
*(*செந்நிலை : இரங்கற்பா - வல்லர்)*

(ஐ) elongated particle : *நீண்டதுகள் (அதுகள் இதுகள் என்றவாறான பிழைவழக்குகள் போல், நீண்டதுகள்?!)*
*(*செந்நிலை : நீண்ட - துகள்)*

(ஒ) end faces : *முனைமுகங்கள்*
(முனைமுகம் : போர்க்களம் ?!)
*(*செந்நிலை : முனை - முகங்கள்)*

(ஓ) epispastic : *கொப்புளமூக்கி (கொப்புளம் + மூக்கி?!)*
*(*செந்நிலை : கொப்புளம் - ஊக்கி)*

(ஔ) iron test : *1. இரும்பாய்வு 2. இருப்பாய்வு*
(இரும் + பாய்வு?!) (இருப்பு (stock) *+ ஆய்வு?!)*
*(*செந்நிலை : இரும்பு - ஆய்வு)*

(க) microphyll : *நுண்ணிலை (நுண் + நிலை?! ..)*
*(*செந்நிலை : நுண் - இலை)*

(கா) nectare : *பூத்தேன் (: பூவ்ாகினேன்?!..)*
*(*செந்நிலை : பூத் - தேன்)*

(கி) novellete : *குறும்புதினம் (குறும்பு + தினம்?!..)*
*(*செந்நிலை : குறும் - புதினம்)*

(கீ) nuclear particle : *அணுக்கருத்துகள்*
(அணு + கருத்துகள்?!)
*(*செந்நிலை : அணுக்கருத் - துகள்)*

(கு) printer's ink : *அச்சுமை (அ + சுமை = அந்தச் சுமை?!)*
*(*செந்நிலை : அச்சு - மை)*

(கூ) sinusoidal wave : *குடாவுருவலை*
(குடா உரு + வலை?!)
*(*செந்நிலை : குடாவுரு - அலை)*

(கெ) skenitis : (inflammation of the paraurethral duct)
: சிறுநீர் வடிகுழற்கருகழற்சி
(சிறுநீர் வடிகுழல் + கருகு + அழற்சி?!..)
(சிறுநீர் வடிகுழல் + கரு + கழற்சி (= கழலுகை) ?!..)
*(*செந்நிலை : சிறுநீர் வடிகுழலருகு - அழற்சி)*

(கே) slow - death : *மந்தமாய்வு (மந்தம் + ஆய்வு?!..)*
*(*செந்நிலை : மந்த - மாய்வு)*

(கை) small displacement : *சிற்றிடப் பெயர்ச்சி*
(சிற்றிடம் + பெயர்ச்சி?!)
*(*செந்நிலை : சிறு - இடப்பெயர்ச்சி)*

(கொ) social concept : *குமுகக்கருத்தாக்கம்*
(குமுகம் + கரு + தாக்கம் ?!..)
*(*செந்நிலை : குமுகக் - கருத்தாக்கம், குமுகக் கருத்து - ஆக்கம்)*

(கோ) terminal : *எல்லைக்கோடி (எல்லைக்கு + ஓடி ?!..)*
*(*செந்நிலை : எல்லைக் - கோடி)*

(கௌ) termination notice : *முடிப்பறிக்கை*
(முடி + பறிக்கை?!..)
*(*செந்நிலை : முடிப்பு - அறிக்கை)*

பொருண்மயக்கம் படாத துலக்கநிலைத் தோற்றத்திற்கு அடிப்படையான குறியீடாக இவ் இடைக்கோடு திகழ்கின்றமையைக் கருத்திற் கொண்டு - மிகமிகத் தேவையான இடங்களிலெல்லாம் இவ் அ.க.அ. இந் நெறிமுறையை நன்கு பயன்படுத்தியுள்ளது.

(1) கலைச்சொற்கள் சிலவற்றுக்குத் தெளிவான இடைவெளிமட்டும் அமையும் நிலையிலாகவும் சில்விடங்களில் இவ் அ.க.அ. பதிவு செய்துள்ளது.

சான்றுகள் :

(அ) indirect taxation : *மறைமுகவரியீடு*
(மறை + முகவரியீடு ?!)
*(*செந்நிலை : மறைமுக வரியீடு)*

(ஆ) minimal community : சிறுமக்குமுகம்
(சிறு + மக்குமுகம்?!)
(*செந்நிலை : சிறுமக் குமுகம்)

(2) கூட்டுச் சொல் - பிரிப்பு:

சொற்புணர்ச்சியில் வேறுபாட்டுப் பொருள்தரவுக்கு ஏதுவாகும் இடங்கள் யாவும், மிகவும் கூர்ந்து நோக்கப்பெற்று - மயக்கம்போக்கும் முறையிலாக அவற்றுக்குத் தெளிவான பிரிப்பீடு செய்யப்பெற்றுப் பதிவுற்றுள்ளன.

சான்றுகள் :

(அ) bay : உத்தரவிடைவெளி (உத்தரவு + இடைவெளி ?!),
(உத்தரம் + விடை + வெளி ?! ..)
(*செந்நிலை : உத்தர இடைவெளி)

(ஆ) bond number : பிணைப்பெண் (பிணை + பெண்?!..)
(*செந்நில்ல : பிணைப்பு எண்)

(இ) business goals : வணிகவிலக்குகள்
(வணிகம் + விலக்குகள் ?! ..)
(* செந்நிலை : வணிக இலக்குகள்)

(ஈ) common pump : பொதுவெஃகி (பொது+வெஃகு + இ)
(> வெஃகு = விரும்பு.
வெஃகி : விருப்பங் கொண்டுள்ள ஒன்று)
(* செந்நிலை : பொது எஃகி)

(உ) effiminacy : பெண்டன்மை (பெண்டு + அன்மை:
பெண்டு (பெண்) அல்லாதிருக்கும் நிலை?! ..)
(*செந்நிலை : பெண் தன்மை)

(ஊ) progesterene : கருப்பமூக்கி (கருப்பம் + மூக்கி ?! ..)
(*செந்நிலை : கருப்பம் ஊக்கி)

(எ) polysyllabic word : பல்லசைச்சொல்
(பல் ?! + அசைச்சொல். பல அசைச்சொல் என்பதைப் புணர்த்தினும் பலவசைச்சொல் (?!) என்றவாறே தோற்றமும் மயக்கமுந்தரக்கூடும்! ..)
(*செந்நிலை : பல - அசைச்சொல்)

(ஏ) thinginess : பொருட்டன்மை
(பொருட்டு + அன்மை?!..)
(பொருட்டு (<பொருள் + (அ) து) = பொருளையுடையது)
(*செந்நிலை : பொருள் தன்மை)

(3) சொல்லமைவில் - சொற்கூட்டமைவில் தோன்றி நெருடும் பொருள்-மயக்கம் நீக்கி, அதனைத் திருத்தமுறப் பதிவுசெய்ய வேண்டும் என்னும் நெறிமுறை - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் மிகு கவனமாகப் பின்பற்றப் பெற்றுள்ளது:

(அ) attitude : சார்புணர்வு (சார் + புணர்வு ?!)
(*செந்நிலை : சார்வுணர்வு (< சார்வு + உணர்வு)

(ஆ) echolocation : எதிரொலியால் இடமறிதல்
(அ. அ: ப :103) (எதிரொலியால் இடம் + மறிதல் ?!..)

(* இந்நிலைகளிலான மயக்கப்பாடுகளை நன்கு உணர்ந்தே, நம் முன்னோர் உரிய திரிபைச் சொல்லுக்குள் நிகழ்த்தி, மயக்குநீக்கம் செய்துள்ள அறிவார்ந்த மரபு முறைமை - இவ்விடத்தில் நன்கு உளங்கொளத் தக்கதாகும்.
இடம் + அறிதல்.(இடம்>இடன்) இடன் + அறிதல்>இடனறிதல் (காண்க : திருக்குறள் - அதிகாரம் : 50)
(* செந்நிலை : எதிரொலியால் இடனறிதல்)

(இ) hard word list (LING.) : கடுஞ்சொற்பட்டி (மொழி.)
(கடுஞ்சொல் ?! ..+ பட்டி)
(* செந்நிலை : கடினச் சொற் பட்டி)

(ஈ) hearing aid : கேள்விப் பொறி
(அ. க : 1, 2, 3 தொகுதிகள் : ப : 884)
(கேள்வி + பொறி. (கேள்வி ?! ..)
(* செந்நிலை : கேட்சிப்பொறி.
(காட்சி, என்பதுபோலக் கேட்சி)

(உ) herpetology : ஊர்வனவியல் (ஊர்+வனம் + இயல் ?! ..)
(*செந்நிலை : ஊரிகளியல்)
(ஒ.நோ : ஊர் > ஊரி = ஊர்ந்தியங்கும் உயிரி.
(மே. கா : அகடூரி (< அகடு + ஊரி) = பாம்பு)

(ஊ) non-contrastive pair (LING.): முரணல் இணை (மொழி.)
(G. S. T. L : p: 131)
(முரண் + அல் > முரணல் (?! ..) = முரணுதல் (?! ..)
(*செந்நிலை : அன்முரண் - இணை)
(ஒ.நோ: அன்மொழித்தொகை)

(எ) method of least square : இழிவு வர்க்க முறை
(*செந்நிலை : மீச்சிறுபடிமுறை)

(ஏ) mineral food : கனிப்பொருளுணவு
(கனிப்பொருள் ?! + உணவு)
(* செந்நிலை : கனிமவுணவு)

(ஐ) monk : மடத்துறவி (மடம் : 1. பாழி 2. மடமை ?!)
(* செந்நிலை : மடத்துத் துறவி)
(< மடம் + அத்து (சாரியை) + துறவி)

(ஒ) moon - blindness : மதிக்குருடு
(மதி : 1. நிலா 2. அறிவு ?!)
(* செந்நிலை: நிலாக்குருடு (மறுவ.) மாலைக்கண் (நா.வ)

(ஓ) ontology : உண்மையியல்
(* செந்நிலை : உள்ளமையியல்)

(ஔ) pedestrian : கால்நடையர் (?!) (cattle : கால்நடை)
(*செந்நிலை : நடையாளி)

(க) ruck sack : முதுகுப்பை (முது + குப்பை ?!)
(முதுகு + பை)
(*செந்நிலை : வெரிந் பை)

(கா) westernization : மேற்கத்திய ஆக்கம்
(மேல் + கத்திய ?! + ஆக்கம்)
(* செந்நிலை : மேலையாக்கம்)

(4) உருவாக்கப்பெற்றும் பயிலப்பெற்றும் பதிவெய்தியுள்ள அரைகுறை நிலையிலாகப் பொருளமைவுற்ற கலைச்சொற்களைப் - பொருள் வளர்ச்சியாக்க நிலைக்குகந்த தெளிவார்ந்த நேரிய ஆக்கங்களாக மாற்றிக்கொள்ளுதல் வேண்டும் என்னும் நெறிமுறையை, இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி உரிய இடங்களில் பயன்படுத்தியுள்ளது.

(அ) chemotherapy : மருந்துவழி உளநோய் மருத்துவம் (வா. க.)
(* செந்நிலை : வேதியப் பண்டுவம்)

(ஆ) clinical pathology : உளநோய் நீக்கு உளவியல் (வா.க.)
(* செந்நிலை : மருத்துவவுளத்தியல்)

(இ) domesticated species : பழக்கப்பட்ட இனங்கள்
(* செந்நிலை : பழக்கப்படுத்திய இனங்கள்)
(பழக்கப்படுத்திய சிறப்பினங்கள்)

(ஈ) familial amaurotic idiocy : குருட்டு மூடக் குடும்பம் ;
பார்வையில்லா மூடக்குடும்பம் (ம.க : ப :190)
(* செந்நிலை : குருட்டுக் குடும்பப் பேதைமை)
(உ) Helicopter : உயர வானூர்தி (க.க.அ : 3: ப: 32)
(* செந்நிலை: திருகிறக்கை (மறுவ) துனைச் சிறகி.)
(ஆக்கம் : பொறிஞர். தெ. தமிழநம்பி)
(ஊ) infraction : உடையா முறிவு, துகள்படா முறிவு,
நொறுங்கா முறிவு (ம.க : ப : 241)
[* infraction : incomplete bone fraction
without displacement. M. D. : p : 351.]
(* செந்நிலை : பெயராக் குறைமுறிவு)
(எ) micromastia : சிறுமுலை (ம.க : ப : 282)
(* செந்நிலை : சிறுமைப் பாற்சுரப்பி)
(ஏ) no-confidence motion : நம்பிக்கையில்லாத் தீர்மானம்
(ச.அ : ப : 285)
(* செந்நிலை : நம்பிக்கையின்மைத் தீர்மானம்)
(ஐ) real owner : உண்மையான உரிமையாளர்
(= உண்மை என்னும் தன்மை வாய்ந்த உரிமையுடையவர்?!.)
(* செந்நிலை : உரிய உரிமையாளர்)
(ஒ) straight edge : நேர்விளிம்பு
(: (DES.ENG.) : a strip of wood, plastic or metal with one or more long edges made straight with a desired degree of accuracy)
(* செந்நிலை : வருவு சட்டம்)
(ஓ) trammel net : ஒரு விதப் பாச்சு வலை
(மீன்துறை : சி. சொ. து : ப : 45)
(: trammel net: (trimaculum) = triple drag net for fish)
(* செந்நிலை : மும்மடியீர்ப்பு வலை)

(5) சொற்றொடரியம் (sentence) போன்று, நீளிய வடிவங்களாகவும் விரிவுருவிளக்கங்களாகவும் குறிப்பிடப் பெற்றிருந்த - பயிலப் பெற்றுவருகின்ற பல்வேறு கலைச்சொல் அமைப்புகளுக்கு, - உரிய அருக்கவுருவங்களை ஆக்கஞ்செய்து பதிவுசெய்தல் வேண்டும் என்னும் நெறிமுறை, உரிய இடங்களில் இவ் அ.க.அ - இல் பயன்படுத்தப்பெற்றுள்ளது. சான்றுகள் :

(அ) callgirl : தொலைபேசி மூலம் அமர்த்தப்பெறத்தக்க விலைமகள். (செ.ப.க.ஆ.த.சொ. : 137)
(* செந்நிலை : விளிமகள்
(: "விலைமகள் " - என்னும் சொல்லமைவுக்கு ஒத்த அமைப்பு)
(ஆ) counter sink : திருகாணித் தலைப்புப் பதியும்படி துளையின் விளிம்பினைச் கற்றிச் சரிவாகப் பள்ளஞ்செய் (செ.ப.க : ஆ.த.சொ : ப : 244)
(* குயவு வருவெடு: (நாட்டுப்புறத் தொழிற்கலைச்சொல் வழக்கு) : கொய்வாரெடு (< குயவு வருவு எடு)
(* செந்நிலை : counter sinking : குயவு வருவெடுப்பு;
கொய்வாரெடுப்பு)
(இ) cleg : குதிரை ஈ (செ.ப.க.ஆ. த.சொ : ப : 193)
(* செந்நிலை : பரியீ (< பரி + ஈ)
(ஈ) clonus : மாறிமாறிச் சுருக்கமும் தளர்வுமாக வரும் தசைத்துடிப்பு (செ.ப.க.ஆ.த.சொ. : ப : 195)
(* செந்நிலை : விறை தளர் வலிப்பு)

(உ) coal-fish : முதுகுப் புறம் பச்சையான கடல்மீன்வகை
(* செந்நிலை : புறப்பசுமீன்)
(ஊ) conceptualism : பொதுமைக் கருத்துகள் மனத்தில்தான் உள்ளன எனும் மெய்விளக்கியல் கோட்பாடு. (செ.ப.க. ஆ.த.சொ : ப : 216)
(* செந்நிலை : கருத்தகத்துண்மைக் கோட்பாடு)
(எ) factotum : பல்பணி ஒருவர்
(செ.ப.க.ஆ.த.சொ ப: 371)
(* செந்நிலை : பன்வினை ஓரி)
(ஏ) foreman : முறைகாண் ஆயத்தின் முகவர்;
தொழிலாளர் மேன்முறையாள்
(செ.ப.க.ஆ.த.சொ : ப : 404)
(*செந்நிலை : பொறிமுன் ஆள் ; முன்னாளி)
(ஐ) formication : தோலின்மேல் எறும்பு ஊர்வது போன்ற அரிப்புணர்ச்சி (செ.ப.க.ஆ.த.சொ : ப : 406)
(* செந்நிலை : உயிரியூர்தலுணர்ச்சி)
(ஒ) greenyard : அலைந்து திரியும் கால்நடைகளை அடைக்கும் பட்டி (செ.ப.க.ஆ.த.சொ : ப : 456)
(* செந்நிலை : கால்நடைப் பட்டி)
(ஓ) grill : இறைச்சி முதலியன சுடும் இருப்புத்தட்டம்
(செ.ப.க.ஆ.த.சொ : ப : 457)
(* செந்நிலை : இறைச்சியடுந் தட்டம்)
(ஔ) hippophagy : குதிரை இறைச்சி உண்ணல்
(ம.க : ப : 225)
குதிரைத்தசை தின்னும் வழக்கம் (செபக.ஆத.சொ:ப: 490)
(*செந்நிலை : பரியூன் - உண்ணல்)
(க) langur: நீண்ட வாலுடைய குரங்கு வகை
(செபக.ஆத.சொ:ப:572)
(* செந்நிலை : நெடுவாற்குரங்கு)
(கா) palp : பூச்சிகளின் உணர்கொம்பு
(செ.ப.க.ஆ.த சொ: ப:706)
(* செந்நிலை : புலனி)
(கி) pandiculation : காலை நீட்டிக்கொண்டு கொட்டாவி விடுதல் (செபக.ஆத.சொ:ப:707)
(* செந்நிலை : திமிர்முறித்தல்)
(கீ) pannier : பொதி விலங்கின் சுமைகூடை இரட்டைகளில் ஒன்று(செபக. ஆத.சொ:ப:707)
(* செந்நிலை : பொதிகூடை)
(கு) quadriga: நான்கு குதிரைச் சாரட்டு
(செ.ப.க.ஆ.த.சொ : ப : 794) (chariot > சாரட்டு)
(* செந்நிலை : நாற்பரித் தேர்)
(கூ) quetzal : நீள்தோகையுடைய அழகிய பசும்பொன் நிறம் வாய்ந்த நடுஅமெரிக்கப் பறவை வகை
(செ.ப.க.ஆ.த.சொ : ப : 798)
(* செந்நிலை : பிறங்கிறகி) (< பிறங்கு + இறகி)
(கெ) raspatory : அறுவை மருத்துவத்திற் பயன்படுத்தப்படும் முரட்டு அரம்
(செபக.ஆ.த.சொ: ப: 807)
(* செந்நிலை : அராவரம்) (< அராவு + அரம்)

(கே) uhlan : விரைந்து செல்லும் ஈட்டி ஏந்திய குதிரைவீரன் (செ.ப.க.ஆ.த.சொ : ப : 1130)
(* செந்நிலை : பாய்பரி வீரன்)

விரிவமைவும் துலக்கமும் வாய்ந்திருந்தால்தான் தொடக்கநிலையில் நன்கு புரியும்நிலை அமையும் என்னும்படியான - நீளிய சொல்லமைவுகளைக் கொண்ட கூட்டுக் கலைச்சொற்கள் சிலவற்றிற்கு - நீளிய வடிவிலேயே (தொடக்க நிலையில்) கலைச்சொற்கள் அமைத்துத் தந்து பயில்வுக்கு விடுதல் வேண்டும் என்னும் நெறிமுறையை, இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி உரிய சில்லிடங்களில் பயன்படுத்தியுள்ளது.

சான்றுகள்:

(அ) follicular stimulating hormone (PHYSIO.) :

(* செந்நிலை : சிற்றுறையத் தூண்டியக்கு நீர் (உடலி.)

(ஆ) interstitial cell stimulating hormone (PHYSIO.)

(*செந்நிலை:சிற்றிடைவெளிக் கலந்தூண்டும் இயக்குநீர் (உடலி.)

(இ) microcythemia: (a condition in which the erythrocytes are smaller than normal)

(* செந்நிலை : குருதிக்குடம்பு சிறுமைப்பாட்டு நிலை)

(ஈ) metrostaxis (GYN.): (slight but persistent uterine bleeding)

(* செந்நிலை : மென்றொடர்க் குருதிப்போக்கு)

(உ) microgyrus: (an abnormally small malformed convulsion of the brain)

(*செந்நிலை : மீச்சிறு கருட்சிமூளை)

(ஊ) microsphygmia

: (a pulse that is difficult to perceive by the finger)

(* செந்நிலை): தொட்டுறாத் துடிப்பு

(6) "பெயர்க்கப் பெற வேண்டியது பொருளே" என்பதால், அச் சொல்லுக்குரிய கருத்து அமைவு நோக்கிய அடிப்படைச்செய்திகளில் நன்கு கவனஞ்செலுத்தித் தெளிந்து,- எளிய நிலையிலாகக் கலைச்சொல்லை அமைக்கும் நெறிமுறையை, இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி நூல் நெடுகிலும் பின்பற்றியுள்ளது.

(அ) good-conductor of heat : நல்வெப்பக் கடத்தி (?!)

(* இங்கு - "good" என்னும் சொல் - நன்மை குறித்த கருத்துடையது, அன்று! மிக எண்மை (மிக எளிமை) என்றவாறான கருத்தில் வருவதே! .)

(* செந்நிலை : (good-conductor of heat : வெப்பம் - எளிதற்கடத்தி)

(ஆ) back-file : பின் கோப்பு (?!)

(* back என்பது பின் (பின்னோக்கியது, பின்மை) என்றபொருளுடையதேயாயினும் - கருத்தமைவில் - ஈண்டுள்ள கூட்டுச் சொல்லுக்கு முன்மைப் பொருளைச் சுட்டுவதே பொருத்தமும் உரிய பொருண்மையும் பெறும்!)

(* செந்நிலை : back file : முன்கோப்பு)

(இ) dewlap : ஊமணி (?!)

ஆட்டின் முன்கழுத்துப் புறத்தினடியில் கீழ்நோக்கித் தொங்கும் அலைதாடியன்ன இரு தசைக் காம்புகள் இவை!. ஊமைமணி என்னும் சொற்களின் திரிபென்று தவறாகக் கருதப்பெறுகின்ற ஊமணியின் வேரியலடிப்படையிலான வடிவம் "ஊன்மணி" என்பதேயாகும். ஊனாலாகிய (தசையாலாகிய) மணி என்பதே, இதன் மெய்வடிவத்திற்குரிய பொருளாகும். ஏனெனில், ஊமைமணி என்னும் தமிழ்மரபு வழக்கு (காண்க : "ஊமை மணி ஆட்டுகினுமோசையொழிந்தாற்போல்.." ஒழிவிலொடுக்கம் (துறவி) : 9) தொங்கு நாக்கு இல்லாத வெற்றுமணியை மட்டுமே குறிக்குமாதலால், அக் கருத்தமைவு வழக்கு இதற்குப் பொருந்தாமையும் இவ்விடத்திற் கருதத் தக்கதாகும். செப்பவழக்காக, நாட்டுப்புறத்தில் இன்றும் அறாது தொடரும் இவ்வுண்மைச் சொல், ஈண்டுக் குறிக்கப்பெற்றுள்ளது.

(* செந்நிலை : dewlap : அலைதாடி (மறுவ) ஊன்மணி, ஊன்தாடி)

(ஈ) baby : குழந்தையைக் குறிக்கும் இச்சொல் - இடங்களுக்கேற்ப, அக் குழந்தையன்ன உரு - அக் குழந்தையின் ஒலியீடு முதலிய வேறுபல பொருட்பிரிவுகளையும் ஆங்கிலத்துள் பெற்றுள்ளமையை நன்கு வகைப் பிரிப்பிட்டுக் கண்டே, அவ்வவ்விடத்துக்குரிய பொருட்சொற்களைக் கொண்டுபதித்தல் வேண்டுமாதலின் - அவ் வகை நெறிமுறையை இவ் அருங்கலைச் சொல் அகரமுதலி பல்வேறிடங்களிலும் செப்பமாகப் பின்பற்றியுள்ளது

சான்றுகள் : baby (ANTHRO.) : குழந்தை (மாந்த.) - babyhood (ANTHRO.) : குழந்தைப் பருவம் (மாந்த.) - baby jelly (BUILD.) : பொடிக்கல் (கட்டட.) - baby loom (TEXT.TECH.) : சிறுதறி (நெயவி.) baby spot (ELEC.) : சிறுபொட்டொளி (மின்சா.) - baby talk (LING.) : மழலை மொழி (மொழி.)

(2) spinalgia : (pain in the spinal region)

(spinal column: முதுகந்தண்டு (< முதுகு + அம் + தண்டு)

spinal region : முதுகந்தண்டாரம்

(< முதுகு+ அம் + தண்டு+ஆரம்)

("ஆரம்" - ஓர் இடப்பொருளீறு)

(ஒ.நோ. : வட்டாரம் (< வட்டம் + ஆரம்)

(* செந்நிலை : spinalgia (PATH.):முதுகந்தண்டாரவலி(நோயி.)

(முதுகந்தண்டாகிய எலும்பு, முள்உருவில் இருப்பது நோக்கி "spina" என்னும் சொல் இலத்தீனத்தில் பயன்படுத்தப் பெறுகின்றது. "முள்" அடிப்படையாயினது என்பது மட்டும் நோக்கி - spinal : முள்ளிய - spinal canal : முள்ளியக்கால் - spinal column : முள்ளந்தண்டு - spinal nerve : முள்ளிய நரம்பு என்றவாறெல்லாம் பதிவு செய்யப்பெற்றுள்ளமை பலவும் தவிர்க்கத் தக்கனவாகும். (காண்க : க. க. அ : 3 ப : 170)

(ஊ) எள்ளினின்று பிழிந்தெடுக்கப்பெற்ற நெய்ப்புப் பொருளுக்கே "எண்ணெய்" என்னும் பொருட்சொல் உருவாகியுள்ளது. Gingelly oil : (எள் + நெய் >) எண்ணெய். (காண்க : புறநானூறு: 41: 8-10, 50 : 5-7; 279 : 3- 11). எண்ணெய் என்னும் நெய்ப்புப் பொருள், கடலையெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடுகு எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் என்றவாறெல்லாம் பிற நெய்ப்புப் பொருள்களோடு பின்னிப் பிணைக்கப்பெற்றுத் தவறுதலாகத் தொடர்கின்றது ! " oil " என்னும் சொல்லுக்கு இணையாக, இவ் எண்ணெய் சேர்க்கப்பெற்றுப் பல சொற்கள் இவ்வாறு குழப்பமுறுத்தப் பெறுகின்றன. oil என்னும் நெய்ப்புப் பொருளுக்கு இணையாக (நெய் + ய்+ அம் >) "நெய்யம்" எனும் தனிச்சொல் ஒன்று - எளிய முறையிலாக ஆக்கம் செய்யப்பெற்று - அது கூட்டுச்சொல்லாகச் சேர்ந்து வருமிடங்களிலெல்லாம்

சிக்கலறுத்த முறையிலாக இவ் அருங்கலைச்சொல் . அகரமுதலியுள் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

(*செந்நிலை) : ghee: நெய் - oil: நெய்யம் - gingelly oil : எண்ணெய் - mustard oil: கடுகு நெய்யம் - castor oil : ஆமணக்கு நெய்யம்.

(எ) Gestalt psychology: (PSYCH.) A school of psychology that views and examines the person as a whole (Mc.Graw Hill: (Dic.SCI & TECH: p: 681)

(*செந்நிலை) Gestalt psychology (PSYCH.)
: முழுநிலைக்காட்சிக் கொள்கை (உளத்.)

(ஏ) Thenar (ANAT.) : the ball of the thumb (Mc.Graw Hill : Dic. SCI & TECH. P: 1630)

நிறைவற்ற சில பதிவுகளுக்குச் சான்றுகள் :
thenar : உள்ளங்கை, உள்ளங்கால்,
பெருவிரலின் திரளைப்பகுதி
(செ.ப.க.ஆ.த.சொ: ப: 1074)
thenar : அங்கை ; உள்ளங்கை (ம.க : ப : 426)
(* செந்நிலை : thenar (ANAT.) விரலத் திரளை (உடற்கூறு)
(விரல் + அம் > விரலம் : பெருவிரல் ; கட்டைவிரல்)
(குட்டை விரல் > கட்டைவிரல்)
(விரலம் + திரளை > விரலத்திரளை)

(ஒ) கலைச்சொல் ஒன்றன் விளக்கப்பொருள் கொண்ட சொல்லியத்துள் வரும், ஏதோ ஒரு சொல் தரும் தனிப் பொருளை மட்டுமே பிரித்தெடுத்துக்கொண்டு அதற்குரிய பெயர்ப்பைமட்டும் செய்து - சுருக்க அமைப்பில் கலைச்சொல்லை உருவாக்கிவிட்டதாகத் தவறாக எண்ணிக்கொண்டு - கருத்தளவில் ஒரு சிறிதும் முழுமையுறாத வெற்றமைப்பிலேயே அமையுமாறு அதனை அடிப்படையாக வைத்துப் பல்வேறு கூட்டுச்சொற்களையும் பிணித்துக்கட்டித் - தொகுப்புகள் சிலவற்றில் பதித்துள்ள செய்திகளையும் - இவ் வரலாற்றிடையே பரவலாகக் காணலாகும்.

(கட்டடம் கட்டுவதற்காக உருவாக்கப்பெறும் செங்கற்களின் தகைமையையும் உறுதிப்பாட்டையும் பொறுத்தே - கட்டடக்கட்டுமான உறுதியும்-நிலைப்பும்-நீடிப்பும் அமையுமாதலின் - அடிப்படைப் பொருளான அச் செங்கல் உருவாக்கத்தில் முறையான கவனஞ்செலுத்துதல் மிகமிக இன்றியமையாததாகும்!)

கலைச்சொல்லுக்குரிய மிடுக்கான - கட்டுசெட்டான தோற்றஅமைப்பில் பார்வைக்குத் தோன்றும் இவ்வகைக் குப்பைக்குவியல்கள் கலைச்சொற்றொகுப்புகளிடையே மிகப் பரவலாக மண்டிக் கிடக்கின்றன!

சான்று : fasciotomy : தாள் வெட்டு (? !..)(க.க.அ: 3: ப: 129)

(* fascia : any bond like structure , esp. the connective tissue bands which separate muscles, nerves, etc.

fasciotomy : surgical incision of a fascia.)

(* fascia : a <u>sheet</u> or band of fibrous tissue such as lies deep to the skin or invests muscles and various body organs. (Dorland's pocket medical Dictionary : p: 264) - இவ்வாறு "sheet" என வரும் கருத்துப்பொருளடங்கிய சொற்பதிவைமட்டும் தனிப்பிரித்து மெலுக்காக எடுத்துக் கொண்டே, "தாள்" என்றவாறு மொழிபெயர்த்துக் கொள்ளப் பெற்றிருக் கின்றது ! ...

(* செந்நிலை : fascia : இணைப்பிழையப் பட்டை
(< இணைப்பு + இழையம் + பட்டை)
fasciotomy (SURG.)
: இணைப்பிழையப்பட்டைத் துமிப்பறுவை (அறுவை)
(அறுவை முறையில் incision, excision என இரு கூறுகள் உள. incision (cut, cutting) என்பது, துமிப்பறுவை. (துமித்தல் = வெட்டுதல்). excision (removal) என்பது, நீக்கறுவை. - இந் நிலைகளிவெல்லாம் அடிப்படைத் தெளிவுநிலைகள் வேண்டும்)
fasciectomy (SURG.)
: இணைப்பிழையப்பட்டை நீக்கறுவை. (அறுவை.)

(ஓ) waxing moon (ASTRON.) : The moon <u>between</u> <u>new</u> <u>and</u> <u>full</u> when its visible part is increasing
(Mc.Graw Hill - Dic. SCI & TECH. P : 1749)
(* செந்நிலை : waxing moon (ASTRON.) : நண்ணிலா
(வானி.)
[(நள் (= நடு) (நள் + நிலா > நண்ணிலா)
(ஒ.நோ : நள் + நிலம் > நண்ணிலம் = நடுநிலம்.
Mediterranean Sea (GEOGR.) : நண்ணிலக் கடல்
(நிலவரை.)]

(ஔ) placebo : மருந்துப் போலி, மருந்துக்குப் போலி, மருந்துக்குப் பதில் (ம.க: ப: 52)

(* placebo : (MED.) medicine given to humour, rather than cure, the patient; dummy pill etc. used as control.)

(* செந்நிலை : அல் மருந்து (> அன்மருந்து)
(ஒ.நோ : அன்மொழித்தொகை)

(க) * எளிய முறையிலமைத்துக் கொண்ட சில சொற்களுக்குரிய சான்றுகள் :

(க : 1) farrago : (any disordered mixture)
: குலைவுற்ற கலவை
(க : 2) sex selection abortion
: பால் தெரிவுக் கருக்கலைப்பு
(க : 3) mamma abenam : மிகையெண் நகில்
(க : 4) marginalia : ஓரக்குறிப்புகள்
(க : 5) book - worm : 1. புத்தகப் புழு
2. ஏடாணன் (< ஏடு + ஆழ்நன்)
(: ஏட்டுப்படிப்பிலேயே ஆழ்கின்றவன்)
(ஒ.நோ.: வாழ்நன் > வாணன் -
வாழ்நாள் > வாணாள் - மகிழ்நன் > மகிணன்)
(க : 6) secreted substance : சுரப்பம்
(க : 7) province : வளாரம்
(ஆரம் : ஓர் இடப்பொருளீறு
(ஒ.நோ : வட்டாரம்)
(க:8) sloth (VERT. ZOO.) : மந்தத்தி
("மந்தி" என்றவாறுபோல)
(மந்தமாயிருக்கும் குரங்கு வகை)

(கு: 9) silica : மண்ணல் (மண் + ண் + அல்)

(கு: 10) parking : நிறுத்துதல்
weighing : நிறுத்தல்
(* செந்நிலை : right angled parking
: செங்கோணத்தில் நிறுத்துதல்)

(கா) facet : (a small plane surface on a hard body, as on a bone)
facet: எலும்பிணைப்பில் பொருந்தாச் சிறுபகுதி
(மக: ப: 189)
(* செந்நிலை : முகப்புக்கூறு; குறுமுகப்பு)
(face + ette (Diminutive suffix) > facet)

(கி) cinnabar moth : பெரிய சிவந்த விட்டில் பூச்சி
(செ. ப. க. ஆ. த. சொ: ப : 185)
(* செந்நிலை : பெருஞ்செவ்விட்டில்)

(கீ) circumfluence (BIOL.)
: உணவைச் சூழ்ந்து உட்கொள்ளும் முறை
(செபக:ஆ.த.சொ:ப:187)
(* செந்நிலை : சூழ்ந்துண்-முறை ; சூழ்ந்துணல்)

(கு) manure spreader : உரந்தூவும் எந்திரம்
(அ. க: 1, 2, 3 : ப : 5)
(* செந்நிலை : உரந்தூவி)

(கூ) pentagram : ஐந்து முனைகளுள்ள விண்மீன் வடிவம்
(செ. ப. க : ஆ. த. சொ : ப : 723)
(* செந்நிலை : ஐம்முனை உடுவுரு)

(கை) non - bailable : பிணையில் விடாத (?!)
non - bailable offence
: பிணையில் விடாக் குற்றம் (?!) (ச. அ : ப : 286)
(* செந்நிலை : non - bailable : பிணையில் விடத் தகாத; பிணையில் விடவியலாத)
non-bailable offence : பிணையில் விடத்தகாக் குற்றம்

(கொ) tenomyoplasty (SURG.)
: plastic repair of a tendon and muscle
(* செந்நிலை : tenomyoplasty (SURG.)
: நாண் - தசை ஒட்டறுவை (அறுவை)

(கோ) merosmia : (inability to perceive certain odours)
* செந்நிலை : merosmia : நாற்றஞ்சில - மோப்பியலாமை)

(கௌ) tactual eruditis: (delicacy of touch acquired by practice)
(* செந்நிலை : tactual eruditis : நுண்ணயத் தொடுகை)

(ச) foretype: வரப்போகும் பொருளின் முன் உரு மாதிரி
(செப. க. ஆ. த. சொ: ப : 405)
(* செந்நிலை : foretype : முன் உருப்போலி)

(சா) fumarole : எரிமலைக் குவட்டின் ஆவி வெளிப்படும் பிளவு (செ. ப. க. ஆ. த. சொ : ப : 418)
(* செந்நிலை : fumarole : கிளராவித் துளை)

(சி) gag-bit : குதிரைகளை ஒடுக்கிப் பழக்குவதற்குப் பயன்படுத்தப்படும் வாய்ப்பூட்டுக் கருவி
(செ. ப. க. ஆ. த. சொ: ப. : 421)
(* செந்நிலை : gag-bit : பரி-வாய்ப் பூட்டு)

(சீ) green-house : அருஞ்செடிகொடிகளைப் பார்க்கப் பயன்படுத்தப்படும் கண்ணாடிக் கூண்டு
(செ. ப. க. ஆ. த. சொ : ப : 455)
(* செந்நிலை : green-house : பசுமை இல்லம் ; பாசகம்)

(சு) green finch, green linnet : பசுமை நிறமும் பொன்னிறமும் கலந்த இறக்கைகளுடைய பறவை வகை
(செ. ப. க. ஆ. த. சொ : ப : 455)
(* செந்நிலை : green finch, green linnet
: பைம்பொன்னிறகி)

(சூ) snow eater (ECOL.)
: (a wind which takes away the snow)
(* செந்நிலை : snow eater (ECOL.) : பனிதின்னி (சூழ்நி.)

(செ) macaw (ORNITHO.) : any of the large long tailed brightly coloured American parrot.
macaw : கிளிவகை (செப.க. ஆ. த. சொ : ப : 610)
(* செந்நிலை : macaw (ORNITHO)
: நெடுவாலொண்கிளி (பறவை)

(சை) mental defective (PSYCH.)
: உளக்குறையுளி (உளத்.)
(உள் > உள் + இ > உளி : உள்ள ஆள் அல்லது உள்ள பெண்டு. (இருபாலர்க்கும் பொதுப்பட்டவாறு)

(சொ) cynanthropy (PSYCH.) : delusion in which the patient believes himself a dog
(* செந்நிலை cynanthropy (PSYCH.)
: நாயாமருட்சி (உளத்.)
(< நாய் + (ஆகும்) ஆம் + மருட்சி)

(7) பல்வேறு கலைச்சொற்றொகுதிகளிலும் நூல்களிலும் பதிவாகியுள்ள பச்சையான நேரிடைமொழி பெயர்ப்புகளில் பல - கருத்தமைவு நோக்கி உரிய திருத்தங்கள் பெற்றே பதிவுற வேண்டும் என்னும் நெறிமுறையை, இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி உரிய இடங்கள் யாவற்றிலும் பின்பற்றியுள்ளது.

(அ) black-hole : (கருத்துளை அ. க : தொகுதி : 1 : ப : 957)
(இது அச்சுப் பிழையாக நேர்ந்துள்ளது. "கருந்துளை" எனப் பதிவு செய்யவே முயன்றும் எழுத்துப் பிழைபாட்டைக் கவனியாமையால் நேர்ந்துள்ள பொதுப்பிழை இது. இப் பிழைபாட்டால் "கருவின் துளை" என்றவாறான பொருள் நேர்கின்றது!)

கரும் + துளை > கருந்துளை: black - hole என்னும் சொற்கு, வானியல் நூல்கள் பலவற்றுள்ளும் இக் "கருந்துளை" என்னும் பச்சைப்பெயர்ப்பே மிகப் பரவலாகப் பதிவெய்தியுள்ளது.

துளை என்பது துளைபட்டிருப்பது என்றவாறே பொருள்பட்டுவிடும். உண்மையில், ஆங்கு உள்ளது குழியே; துளையன்று. இவ்வுண்மையடிப்படையில் க. க. அ. தொகுதி : 1 - பக்கம் - 1 - இல், black - hole : கருங்குழி என்றவாறே மிகச் செப்பமாகப் பதிவுசெய்துள்ளது. இச் செந்நிலைப் பதிவு - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள்ளும் பின்பற்றப் பட்டுள்ளது.

(ஆ) "physeter catoden" என்னும் பெயருடைய பெருந்திமிங்கிலத்தின் தலைப் பகுதியினின்று எடுக்கப்பெறும் வெண்மெழுகு போன்ற நெய்மப்பொருளானது உயவுநெய் உருவாக்கத்திற்கென்று பயன்படுத்தப்பெறும் மூலப்

பொருள்களில் ஒன்றாகும். இந் நெய்மம் விந்தின் தோற்றமுடைமை கருதி, இத் திமிங்கிலத்தின் பெயரே "sperm whale" என ஆங்கிலத்தில் சுட்டப்பெறுகின்றது.

இத் திமிங்கிலத்தினின்று எடுக்கப்பெறும் விந்துத் தோற்றமுடைய அந் நெய்யத்திற்கு ஆங்கிலத்துள் "spermaceti" என்பது பெயர். "sperm" என்பதற்குரிய "விந்து" என்னும் நேரிடையான பொருட்சொல்லையே தொடர்புடைய அனைத்துக் கலைச்சொல்லாக்கங்களிலும் பயன்படுத்துவது குழப்பத்தையே ஏற்படுத்திவிடும்.

"sperm oil" என்னும் உயவுநெய் வகை, "விந்தெண்ணெய்" என்றவாறே தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப் பெற்றுள்ளது. கருத்துக் கருவின் உரு கெடாமல் நம் மொழியுள் இதனைக் கொணரவேண்டுமெனின் "விந்துரு நெய்" என்றவாறு ஆக்கம்செய்துகொள்ளுவதே முறைமையும் - சீர்மையும் ஆகும்.

(* செந்நிலை : spermaceti (MATER.)
. திமிங்கிலத் தலைக் கொழுநெய் (மூலப்.)
spermaceti wax : (காண்க : spermaceti)
sperm oil (MATER.) : திமிங்கிலத்தலை - நெய்யம்
(மறுவ.) விந்துரு நெய் (மூலப்.)
sperm whale (VERT. ZOO.)
: நெய்த்தலைத் திமிங்கிலம் (முதுகென்.)
(காண்க : அ. க. அ : ப: 1007)
(இ) daughter nucleus : மகளணுக் கரு (? !)
(* செந்நிலை: daughter nucleus : சேயணுக்கரு)

(8) அடிப்படைப் பொருள் ஒன்றனைக் கொண்ட தனிச்சொல் கூட்டுச் சொல்லாகச் சேர்ந்து நிற்கையில் - அச்சொல் வேறு செப்பப்பொருள் ஒன்றனுக்கு ஊட்டந் தந்துநிற்கும். அச் செப்பப் பொருளையே மீண்டும் முன்னைய தனிச்சொல்லுக்கு ஏற்றிப் பிழையுறுத்தும் போக்கும் கலைச்சொல்தொகுப்புகள் சிலவற்றிடையே காண நேர்கின்றது. இத் தகாப் பிழைபாடுகள் யாவும், இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் பதிவுறாவாறு தவிர்க்கப்பெற்றுள.

இடத்திற்குரிய பொருளைமட்டுமே, தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டாக வேண்டும் என்னும் நெறிமுறை - இவ் அ. க. அ - இல் முறையாகப் பின்பற்றப்பெற்றுள்ளது.

அவ் வகைப் பிழைபாட்டுப் பதிவுக்குரிய சான்று:
fundus : விழியடி ; விழி மையம் (ம. க: ப: 204)
(* fundus: the bottom or base of anything.)
(* செந்நிலை: fundus (ANAT.): உறுப்படி (<உறுப்பு + அடி);
அடிக்குழி ; குழியுறுப்படி ; அடி (உடற்கூறு.)
(மே. கா : fundus of eye - ball (ANAT.)
: கட்கோளவடி (உடற்கூறு.)
fundus of stomach (ANAT.): வயிற்றடி (உடற்கூறு.)
fundus of uterus (ANAT.): கருவகவடி (உடற்கூறு.)
(காண்க: அ. க. அ : ப : 371)

(9) இயல்பாக அமைந்துள்ள பொருளமைவுச் சொற்களுக்குப் பகரமாக, அறிவாகுலம் (= அறிவு ஆரவாரம்) நிறைந்த கடிய சொற்கூட்டமைப்புச் செய்து அச்கருத்தும் அல்லது பெரிதும் அறிவிடர்ப்படவைக்கும் கலைச்சொல் வடிவங்களைத் தவிர்த்துவிட்டுத், தெளிவாக அமைக்கப் பெற்றிருக்கும் வடிவங்களிலேயே பதிவுசெய்தல் வேண்டும் என்னும் நெறிமுறையை, இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி தெளிவாகப் பின்பற்றியுள்ளது.

சான்றுகள்:
(அ) frequency : மீடிறன்
(கணிதவியல் சொற்றொகுதி: ப: 91: இலங்கை)
மீடிறன் = (மீள்திறன் > மீட்டிறன் > மீடிறன்)
(* செந்நிலை: அதிர்வெண்; அலைவெண்; நிகழ்வெண்)
(மே.கா : frequency allocation (COMMUN.)
: அதிர்வெண் ஒதுக்கீடு (தொடர்பி.)
frequency conversion (ELECTR.)
: அதிர்வெண் - தலைமாற்றம் ;
அலைவெண் - நிலைமாற்றம் (மின் துகளி.)
frequency analysis (COMPUT.)
: நிகழ்வெண் பகுப்பாய்வு (கணிப்.)

(ஆ) Navigation : மீகாமக்கலை
(காண்க : கலைக்களஞ்சியம் - அவினாசிலிங்கம்: த. வ. கழகம்)
("மீகாமக்கலை" என்பது த. வ. கழகக்கலைக்களஞ்சியத்துக் கட்டுரைத்தலைப்பு ஒன்றன் பெயரீடு.)

கப்பலோட்டியை அல்லது கலவலவனைக் குறித்துத் தமிழில் வழக்காறு கொண்டிருந்த "மீகான்" என்னும் சொல்லின் வளர்ச்சியாக்கத் திரிபான "மீகாமன்" என்னும் சொல்லொடு "கலை" என்பதனைக் கூட்டி, "மீகாமக்கலை" எனப் பிசையப் பெற்றுள்ளது.

(நீங்குதற் கருத்தடிப்படைக்கெனவெழுந்த (நீங்குதல், இங்கு - நீரினின்றும் நீங்குதல்) "நீ" என்னும் வேரினின்று தோற்றிய (நீ + ஆன் >) (நீயான் >) நீகான் என்பதன் (நகர - மகரத்) திரிபு வடிவமே, இம் "மீகான்" என்பதாகும்).

காமம் எனப், புணர்ச்சி விருப்பத்தைக் குறித்த சொல் - "மீ" என்னும் மிகுதிப்பொருட்சொல்லை அடையாகப் பெற்று (மீ + காமம்) = "மிகையளவான காமம்" எனும் பொருட்பாட்டில் அமைந்துள்ளதோ என எண்ணி மயங்குதற்கு இடனான இச் சொல், சற்றும் சிந்தியாமலேயே பதிக்கப் பெற்றுள்ளது. இவ்வகை மயக்குச்சொற்கள், இவ் அ. க. அ - இல் முற்றும் களையப்பெற்றுத் தெள்ளிய வடிவங்கள் மட்டுமே தரப்பெற்றுள்ளன.

(* செந்நிலை : navigation (NAV)
: கடற்செலவு ; கடற்செலவியல் (கடற்செல.)

(9) ஒரு குறிப்பிட்ட பொருளைத் தரும் கலைச்சொல் - அதனடிப்படையிலான பல்வேறு கூட்டுச்சொற்களுக்கும் உரிய அக் குறிப்பிட்ட பொருளையே முறையாகத் தந்து நிற்பதோடு, சில்லிடங்களில் - அக் கருத்துப்பொருளுக்கு இனமான வேறொரு கருத்துப்பொருள்படவும் சேர்ந்து நிற்கக்கூடுமாதலின் - அவ்விடத்து முன்னைய அக் குறிப்பிட்ட பொருளையே சுட்டாது,- கருத்து வளர்ச்சியாக்கம்பெற்ற அடுத்தபொருளையே உரிய வகையில் பிறழாது பதிவுசெய்தல்

வேண்டும் என்னும் நெறிமுறையை இவ் அ. க. அ உரிய இடங்களிலெல்லாம் முறையாகப் பின்பற்றியுள்ளது.

சான்று :

bacteria (MICROBIO.): குச்சில்கள் (நுண்ணுயிரி.)

[(ஆக்கம்: மொழிஞாயிறு. பாவாணர்)

வழி : (GK.) baktron = stick; staff.(diminutive:)

(GK.) bakterion = small stick.

(குச்சி + இல்) (சிறுமைப் பொருள் பின்னொட்டு)]

bactericide (PHARM.) : குச்சில் கொல்லி (மருந்.)

bacteriocidin (PHARM.) : குச்சில் கொல்லிக்கெதிரி (மருந்.)

bacteriologist (MICROBIO.) : குச்சிலியலர் (நுண்ணுயிரி.)

(* bacteriophobia (PSYCH.): an abnormal fear of <u>bacteria</u> <u>and</u> <u>other</u> <u>microorganisms</u> :)

(* செந்நிலை : bacteriophobia (PSYCH.) :

1. நுண்ணுயிரியச்சம்

2. குச்சிலியச்சம் (உளத்.)

(10) பழைய செப்பவடிவத்தினின்று திரிபெய்தி, வழக்கில் நன்கு அழுந்தி ஊன்றிநின்று பரவலாகப் பயின்றுவரும் வடிவத்தையும் முன்மையுறத் தெரிவு செய்து பயன்படுத்தலாம் என்னும் நெறிமுறையை - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி சில்லிடங்களில் பின்பற்றியுள்ளது.

சேய் > சேய்மை : தூரம்; தொலைவு (சூடாமணிநிகண்டு)

சேய்மைவிளி : தூரத்திலுள்ளாரை அழைக்கும் விளி

(நன்னூல் : 313 : உரை)

சேய்த்து : தூரமானது (காண்க : நாலடியார் : 218.)

சேய்மை > (சீய்மை) > சீமை : தொலைவு ;

மேலைத்தேசம் ; மேனாடு ; வெளிநாடு)

இங்குள்ள பொருள்களையொத்த வெளிநாட்டுப் பொருள்களைக் குறித்தற்கு - இந்நாட்டுக்குரிய பொருள்களோடு சேய்மையின் திரிபாகிய சீமை என்னும் சொல்லை அடையாகச் சேர்த்து வழங்குதல், தமிழ்மக்களின் இயல்பாய் இருந்துள்ளது. (சான்றுகள் : சீமைக் கத்தரி, சீமைக்கள்ளி, சீமைக்கொட்டைக்களா, சீமைக் கொன்றை, சீமைத்தக்காளி, சீமைத்துத்தி, சீமை நிலவாகை, சீமை நிலவேம்பு போன்ற மிகப்பல வடிவங்கள்)

பரவலாகப் பயின்று மிகப்பல வடிவங்களோடு நிலைத்து நிற்கும் இவ் வழக்குகளிற் செப்பமுடையன - இவ் அகரமுதலியுள் முறையாகப் பதிவுற்றுள்ளன.

சான்றுகள் :

Capsicum fastigiatum (BOT.)

: சீமைப் பச்சைமிளகாய் (புதலி.)

Capsicum nepalensis (BOT.) : சீமை மிளகாய் (புதலி.)

Furcraea foetida (BOT.) : சீமைக் கற்றாழை (புதலி.)

Ficus elastica (BOT.) : சீமையால் (புதலி.)

Indigofera anil (BOT.) : சீமைநீலி (புதலி.)

Sideroxylon inerme (BOT.) : சீமை - முகிழ் (புதலி.)

Swietenia mahogoni (BOT.) : சீமை நூக்கு (புதலி.)

(11) கலைச்சொல் ஒன்று - அது தொடர்தேவைநிலையில் பயன்படுத்தப் பெறும் பரவலான பயில்வால் - இயல்பாகவே கருக்கமான எளிய வடிவிலமையும் போக்குகளைக் கண்டு - அந்நிலையில் தெளிந்துநிலைக்கும் வடிவைக் கண்டு அதனையே பற்றிப் பதிவுசெய்து நிலை நிறுத்துதல் வேண்டும் என்னும் நெறிமுறை - இவ் அ. க. அ - இல் முறையுறப் பின்பற்றப்பெற்றுள்ளது.

ins (pl.) (POL.) : ஆட்சியிலுள்ள அரசியல் கட்சி

(செ. ப. க. ஆ. த. சொ: ப: 533)

(* செந்நிலை : ins (pl.) (POL.) : ஆளுங்கட்சி (அரசி.)

(12) பேச்சுவழக்காலும் அதன் நீடிய பயில்வாலும் செப்பவடிவினின்று உருமாறித் திசைந்து வடிவிலிருக்கும் சொல்லை - மறுபடியும் செப்பநிலையமைப்புக்கு மீட்டு - அதனையே கலைச்சொற்பதிவுக்கும் பயில்வுக்குமாக நிலைநிறுத்துதல் வேண்டும் என்னும் நெறிமுறையை, இவ் அ. க. அ. நூல் நெடுகிலும் செப்பமாகப் பின்பற்றியுள்ளது.

(அ) அரிவாண் மணைப்பூண்டு : Sida carpinifolia

(செ. ப. க. TAMIL LEXICON : p: 128)

(அரிவாள் + மணைப் பூண்டு > அரிவாண்மணைப் பூண்டு. இது தவறு.

அரிவாள் முனைப் பூண்டென்பதே சரியான - முறையான பொருளுள்ள செப்பச்சொல் ஆகும்.

(காண்க : செ. ப. க. த. சீ : ப : 9)

(* செந்நிலை :

Sida carpinifolia : (காண்க: sida cordifolia) (அ. க. அ : ப: 965)

Sida cordifolia : (காண்க : sickle-leaf herb) (அ. க. அ : ப: 965)

Sickle-leaf herb (BOT.) : அரிவாள் முனைப் பூண்டு (புதலி.)

(அ. க. அ : ப : 964)

(ஆ) மணத்தக்காளி : black night shade (Solanum Nigrum)

(பதார்த்த குண சிந்தாமணி : ப. 690)

(காண்க : செ. ப. க. TAMIL LEXICON : p. 3037)

மணித்தக்காளி : காண்க : மணத்தக்காளி.

(செ. ப. க : TAMIL LEXICON.)

இச் செடியில் தோன்றும் மீச்சிறுவடிவத் தக்காளி, பசுமைநிறத்தினின்று முற்றிக்கனிந்து இறுதிநிலையில் மீக்கருமை வாய்ந்த சிறிய மணிவடிவத்திலேயே அமையுமாதலின் - இதன் தோற்றநிலை அடிப்படையில் "மணித் தக்காளி" என்பதே தொடக்கத்தில் வழங்கிய பெயராகும். மணிக்கருந் தக்காளி என்பது விரிவாக்கத் தெளிவுப் பெயர்.

* மணி என்னும் சொல்லே கருமையைக் குறிக்கும் (காண்க : பிங்கலம்) கருஞ் சுறா வகையுளொன்று, மணிச்சுறா என்னப்பெறுவதும், ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

(* செந்நிலை : Solanum nigrum : மணிக்கருந் தக்காளி

(அ. க. அ : ப : 991)

(இ) magpie robin (ORNITHO.)

: வண்ணாத்திக் குருவி (பறவை.)

குருவிக்குரிய அடையாக வரும் சொல், ஏதோ ஒரு தொழிற்குலப் பெண்பாலைச் சுட்டும் சொல் போன்று மயக்கம் அளிக்கும் குழப்பம், ஈண்டுக் கருதுதற்குரியது.

(* வண்ணம் : நிறம். வண்ணம் + அத்து + பூச்சி > வண்ணத்துப் பூச்சி > வண்ணத்திப்பூச்சி > (கொச்சை) வண்ணாத்திப்பூச்சி.

செப்பவடிவம் : மீட்டுருவாக்கம் : வண்ணத்துப் பூச்சி)

(* திரியும் அளவை, - "வண்ணத்திப் பூச்சி" என்பது வரை ஏற்கலாம்.)

(* செந்நிலை : magpie robin (ORNITHO.) : வண்ணத்திக் குருவி (பறவை.)

(ஈ) papilionaceous flower : வண்ணாத்திப்பூச்சியுருப் பூ

papilionaceous : வண்ணாத்திப்பூச்சியுருவான

(காண்க : உயிரியல் விஞ்ஞானம் - தாவரவியல் - தொகுதி : ப: 57. இலங்கை)

(* செந்நிலை : papilionaceous : வண்ணத்திப்பூச்சியுருவான)

(உ) pellet - bow : உண்டை வில்

(அருங்காட்சியகம் : சி.சொ. து: ப: 11)

இவ் உண்டைவில், மேலுங்கொச்சையாகி நாட்டுப் புறங்களில் "உண்டிவில்" என்றவாறாக வழங்குகின்றது. "உருண்டை" என்பதன் கொச்சை "உண்டை".

(* செந்நிலை : pellet - bow : உருண்டை வில்)

(ஊ) broken rice : குறுணை

(* செந்நிலை : broken rice : குறுநொய் ; நொய்யரிசி.)

(குறுநொய் > குறுணை (கொச்சை)

(எ) hoopoe : கொண்டலாத்தி (கொச்சை.)

(* ஆலுதல் : ஆடுதல் (ஒ.நோ: ஆல் + ஆலு + அம் > ஆலாலம் = துரிஞ்சில் (பிங்). ஆல் + அத்தி + இ > ஆலத்தி = ஆடும் புள். கொண்டை + ஆலத்தி > கொண்டையாலத்தி > கொண்டலாத்தி (கொச்சை)

(* செந்நிலை : hoopoe : கொண்டையாலத்தி)

(13) இன்றைய பொருள்வளர்ச்சித் தெளிவில் - அறிவியல்தீர்வு முடிவில் சற்றே வேறுபட்ட கருத்தமைவு இருப்பினும் - வழக்கில் ஊன்றிநிற்கும் சொற்கள் சிலவற்றை அவற்றின் பரந்துபட்டு நிலைத்திருக்கும் பயில்வுநிலை நோக்கி, இருக்கும் வகையிலேயே இப்பொழுதுக்கு ஏற்றுக் கொள்ளலாம் என்னும் ஒத்தேற்பு நெறிமுறையை சில சொற்களுக்கென மட்டும் இவ் அ. க. அ. பின்பற்றியுள்ளது.

சான்றுகள் : (அ) lightning : மின்னல்

lightning arrester : இடிதாங்கி

(இச்சொல்லே ஏற்கப்பெறுகின்றது. "மின்னல் தாங்கி" என்றவாறு மாற்றப்பெறவில்லை)

(ஆ) co-operation : கூட்டுறவு.

சொல்லமைவுப்படி, வேறு பொருள்பட்டிருப்பினும் பயன்பாட்டு நீட்சி கருதி, இது ஏற்கப் பெற்றுள்ளது.

"உறவு" என்பது, வினையைக் குறிக்காது. operation என்னும் சொல்லுக்குரிய கருத்து - இதில் இடம் பெறவில்லையாயினும் - பயில்வழுத்தமும் தொடர்ச்சியும் கருதி, இக் "கூட்டுறவு" என்னும் வழக்குச்சொல், இக் கலைச்சொல் அகரமுதலியுள் ஏற்கப் பெற்றுள்ளது.

(14)மயக்கொழிப்புக்கென இலக்கணத்துள் திருத்தமைவு :

ஓரெழுத்தொரு மொழியாகிய ஆ; மா; பா போன்றுவரும் தனிநெடிற் சொல்லொடும் , களா- புறா - கனா போன்று வரும் குறில்-நெடிற்சேர்ந்தாகிய அமைவுச் சொற்களொடும், பரு - உரு - மடு - வடு என்றவாறு வரும் குறிலிணைச்சொற்கள் சிலவற்றொடும் புணரும் "கள்" என்னும் பன்மையீறு, வலிமிக்கே வரும் என்பதுவும் - மற்றைப் பிற சொற்களுடன் புணர்கையில் வலிமிகாது இயல்பாகவே ஒன்றிநிற்கும் என்பதுவும் - மரபுவழி இலக்கணக்கட்டே ஆயினும் - பிந்தைய இவ் வலிமிகா இடங்கள் சிலவற்றுக்கென வாய்ந்துள்ள மரபிலக்கணக் கட்டமைப்பைக் கருத்தமைவு நோக்கிச் சற்றே நெகிழ்வித்துச் செப்பஞ்செய்தமைத்துள்ள போக்குகளும் இவ் அ. க. அ - இல் அடங்கியுள.

சான்று : கருத்துகள் (கரு + துகள் ?!) (= particle of the core ?!)... இவ்வகையில் மயங்க நேர்தற்கு இடந்தராவாறு - கருத்து என்பதற்குரிய பன்மைச்சொல், "கருத்துக்கள்" என்றவாறே வலிமிகுக்கச் செய்து பதிவுறுத்தப் பெற்றுள்ளது.

(15) பொருள் ஒன்றனுக்கு அமைந்துள்ள பயன்கூறு அடிப்படையில் எளிய முறையிற் புத்தாக்கம் செய்து கொண்டு - அவற்றிற்கெனவுள்ள ஒருபொருட்பன்மொழிகளுக்கும் - அது தொடர்புடைய கூட்டுச்சொற்களுக்கும் அப் புத்தாக்கச் சொல் வழியிலான கலைச்சொற்களை ஒருபோகாகவே அமைத்துக்கொள்ளலாம் என்னும் நெறிமுறை - இவ் அருங்கலைச் சொல் அகரமுதலியுள் தேவையாயிருந்த இடங்களிலெல்லாம் பின்பற்றப் பெற்றுள்ளது.

பிலிப்பைன்சு நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட "Abaca" என்னும் நிலைத்திணை வகைக்கு, - நிலைத்திணை மறுபெயரீடு (nomenclature) "Musa textilis" என்னும் பேயன்வாழையாகும். இவ் வாழையின் பட்டை மிகக் கடுமையும் உறுதியும் வாய்ந்த நாரிழைகளைக் கொண்டது. கயிறுதிரிப்புக்கு, இந் நாரிழை மூலப் பயன்பாட்டுப் பொருளாக உள்ளது. எனவே, "Abaca" எனும் சொல்லுக்கு "நார்வாழை" என்பதை அடிப்படைக் கலைச்சொல்லாகக் கொண்டு - தொடர்புடைய கூட்டுச்சொற்கள் யாவும் முறைமையாக்கத்திற்கு உட்படுத்தப் பெற்றுள்ளன.

பிலிப்பைன்சு நாட்டின் தலைநகரம், மணிலா (Manila, Manilla). இதனடிப்படையில், இந் நார்வாழையின் சணல் "Manila hemp" என்றும், நார்வாழைச்சணலினின்று உருவாக்கப்பெறும் தாள் "Manila paper" என்றும் சொற்கள் அமைவுற்றுப் பரந்துபட்ட பயில்விலும் உள.

ஒன்றன் பயன்கூற்று நிலையை அடிப்படையாகக் கொண்டு, எளிய தெளிவமைப்பில் சொல்லாக்கத்தை அமைத்துக் கொண்டு - உரிய தொடர்புச் சொற்களை நிரலுற்ற ஒருபோகு அமைப்பில் நிறைவுசெய்து கொள்ளுதல் வேண்டும் என்னும் நெறிமுறையை இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி பின்பற்றியுள்ளது.

சான்று :

abaca rope (MATER.) : நார்வாழைக்கயிறு (மூலப்.)

(அ. க. அ : ப: 1)

manila cover : நார்வாழைத் தாள் உறை

manila hemp (MATER.) : நார்வாழைச் சணல் (மூலப்.)

manila paper (MATER.) : நார்வாழைத் தாள் (மூலப்.)

manila rope : (காண்க : abaca rope) (அ. க. அ : ப: 590)

(16) ஆங்கிலத்துள் அமைந்துள்ள கூட்டுக் கலைச்சொல்லுக்கு நேரிதாக - அதனுளமைந்துள்ள தனித்தனிச் சொற்கருத்துக்களுக்கேற்பத் - தமிழிலுள்ள தனித்தனிப் பொருட்பாட்டுச் சொற்களை ஒன்றொன்றாகக் கூட்டி-

முறையுற வடிவமைத்துக் கொள்ளலாம் என்னும் எளிய தெளிவான அமைப்புநெறிமுறை, இவ் அ.க.அ - இல் நன்கு, பின்பற்றப் பெற்றுள்ளது.

(அ) bucket - ladder dredger (CIV.ENG.)
: வாளி - ஏணித் தூறுவாரி (குடிபொறி)

(ஆ) jumping cat (POL.) : தாவும் பூனை (அரசி)

(: பொதுமக்கள்-கருத்து உருவாகின்ற வரையில், வாளாவிருந்து திடுமெனச் செயலாற்றும் அரசியல்காரனைக் குறித்து வழங்கும் புதுச்சொல்)

(இ) cow - mouthed chisel : ஆன்வாயுளி
(< ஆன் (= ஆ) + வாய் + உளி)

(ஈ) ear - shell : செவிச்சிப்பி

(உ) spotted owlet : புகராந்தை (புகர் : புள்ளி)
(< புகர் + ஆந்தை)

(ஊ) star-fish : உடுமீன்

(17) பல்வேறு ஆங்கிலக் கலைச்சொற்களுக்கான நேரிய வழக்குச் சொற்கள் - தமிழுள் பயில்வில்லாத நிலையில் - அவற்றுக்கு நேரிணையான பொருட்பாடுகளிலாகப் பண்டைய இலக்கண-இலக்கிய நூல்களிடையே சொற்கள் பதிவுற்றிருப்பின், அவற்றை மீளவும் பற்றி, உரிய முறையில் அமைத்துக் கொள்ளலாம் என்னும் நெறிமுறை,- இவ் அ. க. அ.- இல் நன்கு பயன்படுத்தப் பெற்றுள்ளது.

சான்றுகள் :

(அ) dryfist : இவறன்மையர்
(இவறல் + மை > இவறன்மை + அர் > இவறன்மையர்)

(ஆ) devastating rain : அழிபெயல்

(இ) generosity : வண்மை ; வள்ளன்மை
(வள் > வள் (ண்) + மை) ; (வள்ளல் (ன்) + மை)

(ஈ) ivory : மருப்பு

(உ) large water jar : மிடா

(ஊ) gag-rein : வள்பு
[: குதிரைகளைப் பயிற்சி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் வாய்ப்பூட்டுக் கருவிகளமைந்த வலுவுள்ள கடிவாள வார்
(செ.ப.க.ஆ.த.சொ : ப: 421)]

(எ) frog : நுணல்

(ஏ) interpretation : திறமுரைப்பு

(ஐ) gluttony : மீதூண்

(18) ஒரு பொருளுக்கெனவுள்ள பல சொற்கள் யாவும் - பருப்பொருளளவாக ஒன்றுபடத் தோன்றினும், நுண்பொருளளவாக வேறுபட்டே அமைந்திருக்குமாதலின் - அந் நுண்ணியவகை வேறுபாட்டுக்குரிய தனித்தனிப் பொருட்சொற்களைக் கலைச்சொல் தொகுப்புகளிடையே மிகு கவனமாகப் பதிவு செய்தல் வேண்டும். தொடக்கத் தொகுப்புப் பணியில் ஈடுபட்ட காலத்திலேயே - அவ் வகை வரையறுப்புச் சொற்கள் பட்டியலீட்டை நிறைதீர்வாகச் செப்பஞ் செய்துகொண்டு - பின்னர், அந் நுண்பொருட்பாட்டுச் சொற்கள் பயின்று வந்த இடங்களிலெல்லாம் அவ்வவற்றையும் இவ் அ.க. அ. முறையுறப் பயன்படுத்தியுள்ளது.

சான்றுகள்:

(அ) absorption : உள்ளுறிஞ்சல்
adsorption : வெளியுறிஞ்சல்

(ஆ) cause : காரணம் - reason : கரணியம்

(இ) deficiency : குறை - reduction : குறைவுறு

(ஈ) check : ஆய்கை - test : ஆய்வு

(உ) pressure : அழுத்தம் - compression : அமுக்கம்

(ஊ) bomb : குண்டு - grenade : எறிகுண்டு

(எ) meter : மானி - metry : மானிப்பு

(ஏ) -tomy : துமிப்பறுவை -ectomy : நீக்கறுவை

(ஐ) electrode : மின்வாய் - diode : இருமின்வாய்
cathode : எதிர்மின்வாய் - anode : நேர்மின்வாய்

(ஒ) delegate : பேராளர் - proxy : பகராளி - representative : படிநிகராளி

(ஓ) snow : பனி - mist : மூடுபனி - fog : திண்மூடுபனி - frost : உறைபனி

(ஔ) hole : துளை - foramen : தொளை
pore : புரை - pyle : புழை
cavity : குழி - pit : பள்ளம்

(க) speed : வேகம் - rapidity : விரைவு

(கா) capsule : பொதிவுறை (< பொதிவு + உறை)
tablet : மாத்திரை

(கி) drop : துளி - droplet : திவலை

(கீ) code : சட்டநெறி; குறியீடு
sign : இடுகுறி
signal : கட்டுக்குறி ; சைகை ; இயல்வுக்குறி
symbol : குறியாளம்
notion : குறிப்பீடு
mark : குறி
brand : வகைக்குறி

(கு) ground : நிலத்தளம்
floor : தளம்
land : நிலம்

(கூ) order : ஆணை - rule : நெறி
act : செய்சட்டம் - law : சட்டம்
principle : நெறிமுறை - regulation : கட்டொழுங்கு
command : கட்டளை
ordinance : மேலாணை ; நெருக்கடிநிலைச்சட்டம்

(கெ) appliance : துணைக்கருவி - apparatus: செயற்கருவி
implement : தளவாடம் - engine : பொறி
machine : எந்திரம் - equipment : வினைப்பொறி
device : குறிப்பொறி - tool : உளி
instrument : கருவி
weapon : ஆய்தம் ; படைக்கலம்
cutting instrument : அறுவி
indicator : சுட்டி - marker : குறியன்
pointer : கட்டுநன் - gauge : அளவி

(கே) firm : நிலையகம் - enterprise : நிறுமம்
company : குழுமம் - establishment : நிறுவகம்
institute : நிறுவனம்

(கை) cycle : சுழற்சி - circuit : சுற்று
rotation : சுழலியக்கம் - coil : சுருள்
spiral : திருகு சுருள் ; சுருளி - winding : சுருணை

(கொ) supply : வழங்கீடு - delivery : ஒப்படைப்பு
distribution : பரவல் ; பரவலீடு
handing over : கையளிப்பு
(கோ) allowance : ஏல்பு - tolerance : பொறுதி
(கௌ) deviation : விலகல் - deflection : விலக்கம்
reflection : எதிரொளிப்பு ; தெறிப்பு
diffraction : திசைமாற்றம் - distortion : திரிபு
aberration : திரிவுறு - refraction : ஒளிக்கோட்டம்
(ச) vein : நாளி - artery : நாளம்
vessel : நாடி - nerve : நரம்பு
tendon : நாண் - aorta : பெருநாளம்
vena cava : நாளியம் - duct : கான்
(சா) diagram : வரைபடம் - picture : படம்
map : படமம் - drawing : வரையோவம்
gram : வரைபடம் - sketch : உருவரை
chart : வரையம்
(சி) channel : அலையதர் ; வாய்கால்
canal : கால், கால்வாய் - tube : குழல்
tubule : நுண்குழல்
(சீ) joint : இணைவு - connection : இணைப்பு
(சு) hallucination : அல்லெழுச்சி
illusion : திரித்துணர்வு
(சூ) grade : படியம் ; படித்தகைமை
quality : தகமானம் ; நேர்த்தி
standard : செந்தகைமை - rank : வரிசைத்தகை
worth : பெறுமானம்

(மே. கா : அகராதி வகைப்பாட்டுச் சொற்கள்: concordance : சொற்கோவை - dictionary : அகரமுதலி - encyclopaedia : கலைக்களஞ்சியம்- gazetteer : திணைக்களஞ்சியம் - glossary : சொல்லடைவு - Lexicon : அகராதி - thesaurus : சொற்களஞ்சியம் - vocabulary : அகர வரிசை - word - index : சொற்பட்டி)

(: denial : மறுதலிப்பு - transference : மாற்றீடு - exchange : மாறு - contradiction : முரண் - prohibition : விலக்கு - difference : வேற்றுமை - change : வேறுபாடு)

(19) ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு இணையாக எளிதிற் பொருள்விளங்கும் வேறொரு நேர்-கலைச்சொல் பயில்விலும் பதிவிலும் நிலைகொண்டிருப்பின் - அந் நேர்-கலைச் சொல்லுக்குரிய நேரிய ஆக்கத்தைக் கொண்டு - இரண்டுக்கும் அதனையே வழங்கலாகும் என்னும் நெறிமுறை - இவ் அ.க. அ. - இல் பின்பற்றப் பெற்றுள்ளது.

(அ) Limulus : (horse - shoe crab)
horse - shoe crab : குதிரைக் குளம்பை - நண்டு
லாடம் (உருதுச்சொல்)
(குளம்பு > குளம்பு + ஐ > குளம்பை)
Limulus : குதிரைக்குளம்பை - நண்டு
(ஆ) sirius : (The Dog star)
: (நாய்மீன்) (மறுவ) அழன்மீன்
(இ) wader : (shore bird) : கரைப்புள்

(20) கலைச்சொல் ஒன்றனுக்கு மரபுவழி அடிப்படையிலாக மற்றொரு மாற்றுச்சொல் ஒன்றனைப் பயன்படுத்திப் பதித்திருப்பினும், அதன் பின்னராகப் புதிய வடிவில் தோற்றப் பெற்றுள்ள நேரிடை மொழிபெயர்ப்புச் சொல்லானது சிறப்பும் - கட்டமைப்பும் - பரவலான பயில்வும் கொண்டிருப்பின், பின்னதையே தேர்வுசெய்தல் தகுவதாகும் என்னும் நெறிமுறை - இவ் அ. க. அ - இல் சில்லிடங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

சான்று :
black leg : கோடரிக்காம்பு
(சமூக விஞ்ஞானம் : கு. ஆ. இலங்கை : ப :157)
நேரிடையான மொழிபெயர்ப்பு :
(* செந்நிலை : black leg : கருங்காலி)

(21) பண்டைய - இன்றைய இலக்கண இலக்கிய வழக்குகள் எவற்றிலும் எங்கும் பதிவுறாது - நாட்டுப்புறங்களில் மிக உட்கிடையான நிலைகள் சிலவற்றில் இன்றும் அறாது வழங்கும் அரியசொற்கள் சிலவும், - இவ் அகரமுதலியுள் உரிய சில்லிடங்களில் பதிவெய்தியுள்ளன.

நிறைவற்ற பதிவுகள் : சான்று:
menopause : இறுதி மாதவிடாய்
(செ.ப.க.ஆ.த.சொ : ப : 629)
menopause : மாதவிடாய் அற்ற ; மாதவிடாய் வற்றுதல்
(ம.க : ப : 278)
(*செந்நிலை : menopause (GYN.) : பூமாற்றம் ;
மாதவிடாய்-நிற்பாடு (மாதர்.) (அ.க.அ : ப : 610)
(வினைச்சொல் : பூமாறுதல்)

("அவையற் கிளவி மறைத்தனர் கிளத்தல்" என்னும் தொல்காப்பிய நூற்பாப் பொருண்முறை மரபுப்படி - மிகப்பல இடக்கர்ச்சொற்கள் அவையல் கிளவிகளாகவே உள. அவற்றுள் பல, உரிய இடங்களில் இதனுள் பதிவுற்றுள.)

(22) கூர்ங்கோணத்தின் (Acute angle) முக்கோண அளவைச் சார்பயன்கள் (trigonometric functions) பற்றிய - மிக அடிப்படையான ஆறு தகவுநிலைகள் குறித்த கணக்கியற் கலைச்சொற்கள் - வெறும் ஒலிபெயர்ப்புகளாகவே - எழுத்துப் பெயர்ப்புகளாகவே - சில்லிடங்களில் "co" என்வரும் அடைக்கேற்பத் துணை என்றோ உடன் என்றோ கூட்டிவைத்த இருபிறப்பிகளாகவே பெரும்பாலான நூல்களிலும் பதிவுற்றிருந்தன. அவை முதற்கண் - கருத்துளவாகப் பொருளெழுதப் பெற்று, அவற்றினின்றெடுத்த சாற்றமைப்பிலாக உரிய அருக்க வடிவங்கள் சமைக்கப்பெற்று - தேவையுற்ற இடங்களிலெல்லாம் அவை நிறைவாகவும் - தீர்வாகவும், இவ் அகரமுதலியுள் பயன்படுத்தப்பெற்றுள. (இவை போன்ற பல கலைச்சொற்கள் தீர்வுகளெய்திய நிலையில் பதிவுற்றுள்ளமைக்குச் - சான்று காட்டுதற்கென இவ் அடிக்குறிப்பு இவ்விடத்திற் கூட்டப்பெறுகின்றது.)

சான்று :
(அ) sine : (ratio of opposite side to hypotenuse)
: நெடுங்கை எதிரத் தகவு >
(* அருக்க வடிவம்) நீடெதிரத் தகவு
(ஆ) cosine : (ratio of adjacent side to hypotenuse)
: நெடுங்கை உடன்பக்கத் தகவு >
(* அருக்க வடிவம்) நீடண்மைத் தகவு

(இ) tangent : (ratio of opposite side to adjacent side)
: உடன்பக்க எதிரத் தகவு >
(* அருக்க வடிவம்) அண்மையெதிரத் தகவு

(ஈ) cotangent : (ratio of adjacent side to opposite side)
: எதிர வுடன்பக்கத் தகவு >
(* அருக்க வடிவம்) எதிரண்மைத் தகவு

(உ) secant: (ratio of hypotenuse to adjacent side)
: உடன்பக்க நெடுங்கைத் தகவு >
(* அருக்க வடிவம்) அண்மைநீடு தகவு

(ஊ) cosecant: (ratio of hypotenuse to opposite side)
: எதிர நெடுங்கைத் தகவு >
(* அருக்க வடிவம்) எதிர நீடு தகவு

(23) குடியேற்றப் பாதுகாப்பு வகையிலாக (colonial preservation) இத் தமிழக வரைப்பினுள் வழக்கிற்படாது - தமிழர் வாழ்ந்துவரும் பிற நாடுகளில் பயில்விலும்-வழக்கிலும் அமைந்திருக்கும் உரிய தமிழ்க் கலைச்சொற்களை - உரிய இடங்களில் பதிவுசெய்து கொள்ளலாம் என்னும் நெறிமுறையடிப்படையை, - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலி சில்லிடங்களில் பின்பற்றியுள்ளது.

widow : கைம்பெண்; (விதவை)
("விதவை" என்பது சமற்கிருதச்சொல்)
ஆங்கிலத்துள் உள்ள ஆண்பால் வடிவம் :
(மனைவியை இழந்தவனுக்குரிய சொல்) : "widower".
widower : விதுரன் ; மனைவியை இழந்தவர்
(செ. ப. க : ஆ. த. சொ : ப : 1205)

"காதலி யிழந்த தபுதார நிலையினும்" என்றவாறு தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் ஒரு வரியுள் வரும் சொற்றொடரமைப்பினின்று - "தபுதாரத்தன்" என்ற வாறெல்லாம்கூட சொல்லாக்கமுயற்சிகள் நடந்துள்ளன.

இதற்குரிய சிறப்புச் சொல்லை - யாழ்ப்பாணத் தமிழர் இன்றும் செப்பமாகப் பயின்று வழங்கி வருகின்றனர்.

widower : கைம்மணாளன் (யாழ் - வழக்கு)
[மண(ம்) + ஆட்டி > மணவாட்டி > மணாட்டி
கைம்பெண்: கை + (ம்) + மணாட்டி > கைம்மணாட்டி
கைம்மணாட்டி என்பதற்குரிய ஆண்பால் வழக்கு,
கைம்மணாளன் என்பதாகும்.
மண(ம்) + ஆளன் > மணவாளன் > மணாளன்
கை + (ம்) + மணாளன் > கைம்மணாளன்]

(24) அறிவியல் - கலையியல் துறைகளைச் சார்ந்தாரைக் குறிப்பிடும் அனைத்து இயற்சொற்களிலும் மதிப்புறவுப் பின்னடையாக (Honorific plural), "ஆர்" எனும் ஈறு சேர்க்கப்பெற்று வழக்கில் மிகப் பரவலான பயில்வில் ஊன்றியுள்ளனவெனினும் - சொல்லமைப்பில் அவ் ஈற்றுக் கூட்டமைவால் எதிர்பொருட்கருத்தும் உடன் நெருடி நிற்பதைத் தவிர்த்தற்கென, "ஆர்" ஈற்றுக்குப் பகரமாக "அர்" எனும் ஈறு நிலைநிறுத்தப்பெற்று - இயல் தொடர்புடைய அனைத்துப் பெயர்களும் இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் மாற்றப் பெற்றுள்ளன.

எதிர்சொல் கருத்தமைவு நெருடலமைவுக்குச் சான்று:
scientist: அறிவியலார் (அறிவு + இயலார் (இயலாதவர்) ?!)
(* செந்நிலைகள்: acoustic scientist : கேட்பொலியறிவியலர் - astrophysicist : வான்பூதியலர் - biochemist : உயிரிவேதியலர் - biologist : உயிரியியலர் - botanist : புதலியலர் - chemist : வேதியலர் - immunologist : தடுப்பாற்றியலர் - linguist : மொழியியலர் - sociologist : குமுகவியலர் -virologist : நோய்நுண்ணியியலர் - zoologist : விலங்குயிரியியலர்)

(25) அயலகங்களினின்று நந் நாட்டுள் வந்து நிலைத்துப் பயன்பெறும் பொருள்களுக்கும் - உயிரிகளுக்கும் - மக்கள் (மொழிமான அமைப்பில்) இயல்பாக வைத்துள்ள பெயரீடுகளை இயன்றவரை பதிவுசெய்து பயன்படுத்தல் வேண்டும் என்னும் நெறிமுறை - இவ் அகரமுதலியுள் முறையாகப் பின்பற்றப் பெற்றுள்ளது.

சான்று :

marsh mint (BOT.) : புதினா; புதினாக் கீரை (புதலி)
(pudinâ : உருதுச் சொல்)
(* செந்நிலை : marsh mint (BOT.) : ஈயச்சக் கீரை (புதலி)
(ஈ + அச்சம் + கீரை)

(26) நூல்களிலும் - சொற்றொகுப்புகளிலும் இதுகாறும் பதிவுசெய்யப் பெற்றும் - பயன்படுத்திவரப் பெற்றும் இயன்றுவரும் சொற்கள் பலவற்றுக்கும், தெளிவு நிலையைத் தரும் வகையிலாகவும் - அறிவுநிலையில் மேலும் துலக்கம் விளைக்கும் நிலையிலாகவும் - உரிய முறையில் திருத்தவும் - திட்டப்பாடான வரையறைச் செய்திகளோடு கட்டமைக்கவும் வேண்டும் என்னும் செப்பநிலை பேறாக்க நெறிமுறை - இவ் அ. க. அ - நெடுகிலும் பரவலாகப் பின்பற்றப் பெற்றுள்ளது.

சான்றுகள் :

(அ) social untouchables (SOCIO.)
: குமுகத் தீண்டுறாதார் (குமுக.)

(* "untouchables" என்னும் சொல்லுக்கு இணையாக - இத் தமிழகத்துள் பயன்படுத்தப் பெற்றுவரும் "தீண்டாதார்" - "தீண்டப்படாதார்" - "தீண்டத்தகாதவர்" என்பனபோலும் சொற்கள் முறையான குறிப்பீடுகள் உடையன அல்ல. விரைவில் சமன்மையேற்படும் வரையிலாகப் பயன்படவேண்டும் என்னும் உணர்வில் - குறிப்பிட்ட சில காலத்துக்கு மட்டும் பயன்படுத்தப் படலாகும் என்னும் நோக்கொடு - இம் முற்குறித்த சொற்களுக்கு ஈடாகத் "தீண்டுறாதார்" (= தீண்டுதலை உறாது இருப்பவர்) என்னும் சொல் செப்பப் பொருட்படநிறுத்தப் பெற்றுள்ளது)

(ஆ) pre-operation counselling (MED.)
: அறுவைமுன் - அறிவுரைப்பு (மருத்.)

(இ) intelligible cross-talk (COMMUN.)
: புரிதகு - குறுக்குரை (தொடர்பி)

(ஈ) correza (SEX.) : உச்சியிலாக் கலவி (பாலி.)

(உ) deprecated abbreviation : முன்னெடைச் கருக்கம்
(ஒ. நோ. : அளபெடை (< அளபு + எடை)
சான்று : (ampere >) amp.

(ஊ) telechirics : தொலை இடர்ப் பணியியல்

(எ) wet drawing : ஈரத்தக வரையோவம்
(< ஈரம் + அத்து + அகம் + வரை + ஓவம்)

(நீரோவம், நீரோவியம், ஈரக வரையோவம் என்பன, கருத்தை நிறைவுசெய்வன அல்ல.)

(ஏ) macron : நெடிலுயிர்க்குறி
(பிழை வடிவம் : நெடிற்குறி)

(ஐ) fastigium : the highest point of temperature in a fever

(காண்க : fastigium : நோய்த்தாக்க உச்சநிலை (ம. க: ப:191)
fastigium : உச்சகட்டம் (க. க. அ : 3 : ப : 129)

(* செந்நிலை : temperature : வெதணம்)
(வெது + (தண்ணம்) > தணம் > வெதணம்)
(ஒ.நோ. சீதம் + உஷ்ணம் > சீதோஷ்ணம்)
[சீதோஷ்ணம் எனும் சொல்லுக்கு முந்தைய ஈடு - தட்பவெப்பம் என்பதாக அமைந்திருந்தது]
(* fastigium (PATH.) : வெதணவுச்சம் (நோயி.)

(ஒ) booster : நூக்கி

(ஓ) biopsy : நுள்ளாய்வு
(மர். இராசேசுவரி ஆக்கம் : நுள்ளுச்சோதனை)
(* நுள்ளுதல் : கிள்ளுதல்; கிள்ளியெடுத்தல்)

(ஔ) enrichment : ஆக்குறுத்தம்

(க) fault tolerance : (பிழை-)கருதாப்பொறுதி ; கருதாப் பொறுதி

(கா) fine weighment : நுண்ணிறுவை

(கி) Galilean moons : நானிலா (< நால் + நிலா)

(கீ) hot air baloon: வெங்காற் பூதி (வெம் + கால் + பூதி)

(கு) shunk : முடைவளிமா

(கூ) umbriel : நானூறி (நானூறு + இ)

(கெ) sanctimoniousness : திருநிலைப் பகட்டாரவாரம்

(கே) madam, Madame : மாதம்மை

(கை) thalamus : உளகம் (= inner chamber)

(27) அறிவுத் துறையில் ஆழங்காற்பட்ட அறிவர் பலரும் - மிக நுண்மையும் செறிவும் கட்டமைவும் பெறுமாறு உருவாக்கித் தந்துள்ள நூற்றுக்கணக்கினவான செப்பக் கலைச்சொற்கள் இத் தொகுப்பு நூலாக்கத்துள் தொகையுற்றுள்ளன.

சான்றுகள் :

Liger : அரிப்புலி - Kangaroo : பைம்மா - caking coal : பசை நிலக்கரி (சுட்டால் பசைக் கட்டியாகிற நிலக்கரி) (* பன்மொழிப்புலவர் : கா. அப்பாத்துரையார்) Divinity : தேவிகம் - coffee : குளம்பி - Biscuit : ஈரட்டி - pen : தூவல் - petrol : கன்னெய் - bacteria : குச்சில்கள் - missionary : விடையூழியர் - gun : துமுக்கி - revolver : சுழலி - (மொழிஞாயிறு. பாவாணர்)

(28) அண்மையில் - இரு பத்தாண்டுக்கால அளவிடையில் உருவாகி நிலைத்துப் பயில்விலுள்ள கலைச்சொற்களுள் நூற்றுக்கும் மேற்பட்ட இன்றியமையாச் சொற்கள் பல - இத் தொகுப்புள் பொருளமைவார்ந்த நேரிய சொல்லாக்கங்கள் பெற்று முறையுறப் பதிவெய்தியுள்ளன.

(அ) des res : விழைவாரகம்

(ஆ) stag : 1. கலைமான்
2. மிகையூதியம் பெறும் நிலையில் விற்பதற்கெனப் புதுப்பங்குகளை வாங்குநன்.
(* செந்நிலை : "புதுப்பங்குமான்" (< புதுப்பங்குமகன்)
(மகன் > மான்) (ஒ.நோ : பெருமகன் >பெருமான்)

(இ) tweakness (PSYCH.)
(V.) tweak: to suffer from severe nervous twitching mental disturbance etc. as a result of addiction to drugs.
(: மயக்கடிமைப் பொருள்களுக்கு அடிமையானதால் ஏற்படும் நரம்புத்துடிப்பு, மனவுளைச்சல் (மனவுலைச்சல்), அமைதியின்மை போன்ற விளைவுகளால் துன்புறுதல்)
(* செந்நிலை : tweakness (PSYCH.)
: மயக்குலைச்சலூறு (உளத்.)
(மயக்கு + உலைச்சல் + ஊறு)

(29) முன்னைய தொகுப்பாளர்களுள் மிகப்பலரும் அடிப்படையையே கவனியாது பதிவுசெய்துள்ளமையைக் கலைச் சொல் தொகுப்புக்களிடையே மிகத் தெளிவாகக் காணவியல்கின்றது.. பன்னூற்றுக்கணக்கான பதிவீடுகளில் இவ்வகையிலான செயற்பாடுகளைக் காணமுடிகின்றது.

இலத்தீனத்தில் - hepta என்பது கல்லீரலைக் (Liver) குறிக்கும், சிறப்பு அடிச்சொல். இதற்குரிய அடிப்படையைக் கவனிக்காமலேயே சொல்லாக்கம் செய்யப் புகுந்துள்ளனர் என்பதற்குரிய சான்று ஒன்றைக் கீழே காணலாகும்.

சான்று : hepatic artery : ஈரல் தமனி - hepatic coma : ஈரல் மயக்கம் - hepatitis : ஈரல் அழற்சி - hepatotoxin : ஈரல் நச்சு (காண்க : அ. க. தொகுதி : 5 : சொற்பட்டி)

[நுரையீரல் - மண்ணீரல் - கல்லீரல் என்றவாறு வகைவேறுபாடுகள் இருக்கையில் - முற்கூறப்பெற்றுள்ள ஈரல் எதுவாக இருக்குமோ என்றவாறு, படிப்பவர் பதைப்பும் கலக்கமும் பெறும் நிலையில் - அறிவியல் செய்திகளிடையே வரையறுப்பற்ற சொற்சுட்டு நிலை கூடவே கூடாது.]

இவ் அகரமுதலி எத்தகு உழைப்புப் பாரத்தைச் சுமந்து உருவெய்தியுள்ளது என்பதை ஒரு சோற்றுப் பதனாகப் பார்ப்பதற்கேனும் - இந்நூலின் 427 - ஆம் பக்கத்தை ஒரு முறை புரட்டிக் கண்களைப் பதிக்கலாம்! இப் பக்கத்துள் கல்லீரல் தொடர்பான 67 சொற்களும் சொல்லாக்கங்களும் முறையுறவும் தெளிவுறவும் பதிவுற்றுள்ளமையை ஒப்பிட்டுப் பார்த்தாலேயே - இந் நூலின் தேவையும் - பயனும் கட்டமைப்புச்சிறப்பும் - உண்மையும் விளங்குவனவாகும்!

இன்னவாறே - கொத்துக் கொத்தாக - குலை குலையாக, பல்வேறு இனவகைச் சொற்களுக்கு அரும்பாடுபட்டு உரிய ஆக்கங்கள் செய்யப்பெற்று இதனுள் வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன.

[Liver : என்பது, கல்லீரல். spleen : என்பது, மண்ணீரல். இம் "மண்ணீரல்" என்னும் சொல்லையே அறியாது - க. க. அ. தொகுதி : 3 : ப : 170 - இல் பதித்துள்ள பட்டியலை அருள்கூர்ந்து கவனியுங்கள் :

spleen : பிளீகம் - splenic : பிளீக - splenic artery : பிளீகத் தமனி - splenic flexure : பிளீக வளைவு - splenic puncture :

பிளீகக் குத்து - splenocaval : பிளீகப் புழையிய - splenogram : பிளீக வரைபடம் - splenomegaly : பெரும் பிளீகம் - splenoportal : பிளீக வாயிலிய - splenorenal : பிளீகநீரக...]

(30) இன்றைய மிகப்பெரும் பாரிய அறிவியல் வேக வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து நாமும் முன்னேறிக் கொள்ள, நாம் நமக்கென வாய்த்துள்ள மொழியை - அதன் ஈடிணையற்ற பேராற்றல் சான்ற வளத்தை, முழுக்கவும் முற்றவும் நன்கு பயன்படுத்தியே தீரவேண்டிய காலத்தேவை நம்முன் எழுந்துள்ளமையை ஆழ்ந்து சிந்தித்தே - இவ் வினைப்பாடானது மிகப்பொறுப்போடும் - விருப்போடும் - செறிவோடும் - விரிவோடும் ஆக்கம் பெற்றுள்ளது.

உலகத்தில் இன்றைக்கு வளர்ந்துள்ள எந்த அறிவியற் கருத்தையும், நாம் மிகவிரைந்து விளங்கிக் கொள்ளலாகும் வகையிலாக உரிய கலைச்சொல் ஆக்கங்களை மிக எளிதில் செய்து கொள்ள முடியும். இத் தகைமைக்குரிய மெய்ப்பிப்பு, - இத் தொகுப்பு முழுமையுள்ளும் அடரச் செறிந்துள்ளமை - முற்ற நோக்குவோர் யாவர்க்கும் தெற்றெனத் தெரிவுறும்!

"குரு" என்பது, நிறத்தைக் குறிக்கும் மீப் பண்டைய பழஞ்சொல். " குருவும் கெழுவும் நிறனாகும்மே" என்பது, தொல்காப்பிய உரியியல் நூற்பா (8 : 5). நிறத்தைப் பொதுப்படவும் - சிவப்பு நிறத்தைச் சிறப்பாகவும் சுட்டும் அருமையான இக் "குரு" என்னும் சொல்லை அடியாக வைத்து, குரு + ம் + அம் > குருமம் என்றவாறான சொற்புனைவை ஏற்படுத்திக் கொண்டாலே போதுமானது. 'chroma' என நிறப்பொருள் குறித்துக் கிரேக்கவழியே தோன்றிய பன்னூற்றுக்கணக்கினவான அறிவியற் சொற்களை, உடனேயே நாம் நம் தமிழில் செப்பமாக ஆக்கிக் கொள்ள முடியும்.

ஒளியையும், கதிர்மண்டிலத்தையும் குறித்து வழங்கும் "எல்" என்னும் தமிழ்ச்சொல்லை அடுத்துத் தோன்றிய சொல்லான (எல் + ல் + இ) எல்லி என்பதனொடு - "அம்" என்னும் ஈற்றைச் சேர்த்து (எல்லி + அம் >) "எல்லியம்" என ஆக்கமுறுத்திக் கொண்டு "Helio" என்னும் கிரேக்கக் கலைச்சொல் வடிவத்தினின்று ஆக்கப் பெற்றுள்ள அத்துணை அறிவியற்சொற்களையும் நாம் விரைந்தும் செப்பமாகவும் ஒருபோகாகவும் ஆக்கிக் கொள்ளவியலும்.

இன்னவாறு பல அடிப்படைத் தெளிவு வடிவங்களை முறைமைப்படுத்திக் கொண்டு - "பெயர்க்கப் படவேண்டியது கருத்தே" என்னும் தெளிவார்ந்த கொள்கைக் கடைப்பிடியோடு உருவாக்கப் பெற்ற கருத்தியற் கருவிகளான (conceptual tools) கலைச்சொற்களிற் பன்னூற்றுக்கணக்கின - இதனுள் புத்தம் புதியனவாய்ப் பதிவேறியுள்ளன..

(31) நிலைத்திணை இரட்டைப்பெயர் யாவும், இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் சாய்வெழுத்திற் பதியப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு நிலைத்திணை இரட்டைப்பெயரும் - பேரினப்பெயர் - சிற்றினப்பெயர் என்னும் இரண்டும் அடங்கியதாகும். உலகெங்கணும் ஒரே முறையில் சற்றும் பிசகில்லாமல் பயன்படுத்தப்பெறுவது நோக்கி - மிகவும் கவனமுடன் இதற்குரிய பதிவுகள் இதனுள் செய்யப் பெற்றுள்ளன.

இலத்தீனமொழியில் முறையுற எழுதப்பெற்று - இங்கிலாந்திலுள்ள கியூ நிறுவனத்தாரின் ஒப்புகைக்கு உட்பட்டு, ஐயாண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து வெளியிடப் பெற்றுவரும் கியூவென்சிசு அடைவு நூலுள் (Index Kewensis) பதிவுற்றனவற்றுள் அடங்கிய முறையான பெயர்கள் இவை.

(32) ஒருமை - பன்மை குறித்த சொற்பதிவுகள்:

(சான்று : stratum : strata - minimum : minima
datum : data - matrix : matrices)

இயல்பான வடிவங்களிலிருந்து சற்றே மாற்றமானதாயிருப்பின், பன்மைப் பெயர் வடிவும் - ஒருமைப் பெயர் வடிவும் அகரநிரற்பாட்டில் உரியவிடங்களில் தனித்தனியே ஆங்காங்கும் சுட்டப்பெறும். பெரும் பயன்பாட்டில் பயிலப்பெறும் ஒன்றனுக்கு மட்டும் பொருள் கூறிப், பிறிதொன்று வருமிடத்தில் பொருள் கூறப்பெற்ற சொல்லை மாட்டெறிந்துவிடுதல் வேண்டும் என்னும் நெறிமுறை - இதனுள் செப்பமாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

பெரும்பாலும் ஒருமைக்குப் பொருள்கட்டிப் - பன்மைச்சொல் வருமிடத்து, ஒருமையிடம் நோக்கி மாட்டெறிவதே வழக்கமுறைமை. சில்லிடங்களில் பொருட்பயன்படுத்தக் காரண அடிப்படையில் பன்மையிடத்திற் பொருளைச் சுட்டிவிட்டு - ஒருமையிடத்தில் அப் பன்மைப் பெயரை மட்டுமே குறித்துச் சுட்டலாகும் நெறிமுறையும் இதனுள் அடங்கியுள்ளது.

[சான்று : (அ) dice (pl.) : பகடை
(ஆ) die : (காண்க : dice)]

(33) மாட்டெறிவு முறைகள் :

(அ) emitter : 1. உமிழி
2. உமிழிப் பரப்பாரம்
emitter region : (காண்க : emitter - 2)

(ஆ) incisura (*LATIN.) : (காண்க: incisure)
incisurae (*LATIN.) : (காண்க: incisura)
incisure (PATH.) : 1. வெட்டு
2. ஆழமான வெட்டுக்காயம் (நோயி)

(இ) kapoc : (காண்க : kapok oil)
kapok oil (MATER.) : இலவங்கொட்டை நெய்யம் (மூலப்)

(ஈ) kadaya gum : (காண்க : karaya gum)
(karaya gum : the exudation from the Indian tree - sterculia urens.)
[sterculia urens (BOT.) : செந்தணக்கு (புதலி)]
* karaya gum (MATER.) : செந்தணக்குப் பயின் (மூலப்)

(உ) chronolith : (காண்க : time stratigraphic unit)
(அ.க.அ : ப : 147)
chronological unit : (காண்க : time stratigraphic unit)
(அ.க.அ : ப : 147)

chronostratic unit : *(காண்க : time stratigraphic unit)*
(அ. க. அ : ப :147)

chronostratigraphic unit :
(காண்க : time stratigraphic unit)
(அ. க. அ : ப :147)

time rock unit : *(காண்க : time stratigraphic unit)*
(அ. க. அ :)

time stratigraphic unit (GEOL.)
: நேர அடுக்கியற்படுகை - அலகு (நிலத்.) (அ. க. அ)

(ஊ) canangium odoratum
: *(காண்க :* cananga flower tree) *(அ. க. அ: ப: 115)*

cananga flower tree (BOT.): *சிறுசெண்பக மரம் (புதவி.)*
(அ. க. அ: ப: 115)

ilang - ilang oil (MATER.) : *சிறுசெண்பக நெய்யம் (மூலப்.)*

ylang - ylang oil : *(காண்க :* ilang - ilang oil)

(34) வேதியல் தனிமங்களுக்குரிய பெயர்கள் யாவும் - உரிய கருத்துப்பொருள்களினின்று அருக்க ஒருபோகு வடிவங்களில் மிகச்செப்பமாகத் தூயதமிழில் மொழியாக்கம் செய்யப்பெற்றுள்ளன. அத் தனிமங்களின் அடிப்படை வரலாறுகளும் - வேரியல் அடிப்படையுண்மைகளும் கூர்த்த நோக்கு - ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்று - நிறைதீர்வான வரையறுப்பில் பெயரீடுகள் அமைக்கப்பெற்றுள்ளன. *104, 105, 107, 109* ஆகிய எண்களுக்குரிய தனிமங்கள் கண்டறியப்பட்டுள்ளனவெனினும் அவற்றுக்கான முறையுறவுப் பெயர்கள் இன்னும் பதிவுற்றில்வாதலின், அவை மட்டும் ஈண்டு விடுபட்டுள. தனிமங்களுக்குரிய தெண்பட்டியல், அடக்கநூலுக்கு முன்னீட்டுப் பகுதியில் முறையமைப்புக் காட்சியாகப் பதிவீடுற்றுள்ளது.

தனிமப்பெயரீட்டு உருவாக்கத்திற்கமைந்த நோக்குமுறைச் சான்று :

Iridium : iris : (iridos) : goddess of rainbow
(விண்வில் > விண்வில்லி)
விண்வில்லி + அம் > விண்வில்லியம் > விண்விலியம்
Iridium (CHEM.) : விண்விலியம் (வேதி.)

(36) வேதியற்பொருள்களுடன் சேர்ந்துவரும் ஈறுகள் யாவும், நூல் முழுமையுள்ளும் ஒருபோகாகவே அமைந்திருக்கவேண்டும் என்பதற்காகத் - தொடக்கத்திலேயே அவ்வகைச்சொற்களின் சொல்லீறுகளுக்குரிய தமிழீறுகள் வகைப்படுத்தப்பெற்று அணியப்படுத்தப்பெற்றன.

ஆங்கிலக் கலைச்சொல்லீறுகளுக்குரிய -"நேர்- ஈறுகள்"

(காண்க : ate : அகி - ide : இகம், அதை, அகை, இதை
ine : அணம் - ite : அடம்)

(37) இலத்தீனம், கிரேக்கம் முதலிய மொழிகளுக்குரிய அடிப்படைச் சொற்களிற் பலவும் - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியுள் ஆங்காங்கும் விரவலாகப் பொருளொடு பதிவெய்தியுள்ளன.

ஆங்கிலத்துள் மேன்மேலும் தொடர்ந்து பல்கிப் பெருகி வரவுள்ள அறிவியற்கலைச்சொற்கள் விளக்கத்துக்கும் - தெளிவுக்கும், - இம் முன்னீட்டுப் பதிவுகள் அடிப்படை விளக்குகளாக அமையும்.

விளையவுள்ள புதுச்சொற்கள் பெரும்பாலனவும் - இவ் அடிப்படைச்சொற்களின் வேரடிப்படையிலேயே - முதனிலையடிப்படையிலேயே தோன்றலாகும் என்பதால் - இம் முறைப்பதிவுகள், இதில் இடம்பெற்றுள்ளன.

(38) தொடரியக் கூட்டுச்சொல்லாக. அறிவியலில் அமைந்து பயின்றுவரப்பெறும் பல்வேறு இன்றியமையாக் கலைச்சொற்களுக்குரிய தலைப்பெழுத்துச்சொற்கள் (*acronyms) பலவற்றுக்கும் - இணைநிலையிலான தலைப்பெழுத்துச்சொற்கள் உரிய விரிவாக்கத் தமிழ்க் கலைச்சொற்களினின்று அமைப்பாக்கம் செய்யப்பெற்றுள.

சான்றுகள் : *(அ)* RADAR : கதுவீ
(ஆ) LASER : கதிஔி
(இ) MASER : கதிநுவி
(ஈ) SONAR : ஒநீநெ

(39) தமிழகத்தே வாழ்ந்து மறைந்த - இன்றும் வாழ்ந்து நம் மண்ணக மைந்தர்தம் அறிவுவளர்ச்சிக்கெனத் தொடர்ந்து வளஞ்சேர்க்கின்ற சின்னூறு அறிவு உழைப்பாளியரின் தெளிந்த சிந்தனையாக்கங்களின்வழியே உருவாகிப் பதிவெய்தியுள்ள பல்லாயிரம் கூறுகளின் சாறங்கள் - உரிய இடங்களிலெல்லாம் இவ்வாக்கத்துள் பயன்பிலிற்றுகின்றன!.

(40) ஆழம்பட்டுப் பரந்தகன்ற தமிழகக் கடலினின்று நம் குப்பக் கரையோரங்களில் கொணரப் பெறும் சில்லாயிரம் மீனினங்கள் - பிறகடலுயிரிகள் - பல்லாயிரம் விலங்குயிரிகள் - நுண்ணுயிரிகள் - நந் நாட்டு வானகத்தே சிறகடித்து உலர்க் கொள்ளுகின்ற - சிறகிருந்தும் பறவாது தத்து நடையிடுகின்ற நூற்றுக்கணக்கினவான பறவையினங்கள் - மரம் செடி கொடிகள் முதலியவற்றின் பெயர்களில், - மிகப் பெரும்பான்மையின இவ் அகரமுதலியுள் பதிவுற்றுள்ளன. தேசியத்தேவையுணர்ந்து அரும்பாடுபட்டுத் தொகுத்தெடுத்து வகைப்படுத்தி - செப்பமுறுத்தி இதனுள் அணிபெறுமாறு, அவை அடுக்கி வைக்கப்பெற்றுள.

பொதுப் பார்வையில் - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியின் பெருமையும் உழைப்பளவும் அனைவருக்கும் எளிதில் விளங்கா! உரிய தேவையும் - தெளிவுநிலைக்கென அவாவும் வேட்கையுடன் கூடிய ஆய்வுணர்வுங் கொண்டு, அமைந்து நோக்கினால் மட்டுமே - இவற்றுள் பதிவுற்றுள்ள கருத்துச் சொற்களுக்கென்றமைந்த பொருத்தப்பாடும் - அமைப்பெழின்மையும் துலங்க விளங்கி இன்புறுத்துவன வாகும்!

இவ் ஆக்கத்துள் - "அகராதி அறம்" முறையாகக் கடைப்பிடிக்கப்பெற்றுள்ளது; தமிழாற்றல் தகைமை மெய்ப்பிக்கப்பெற்றுள்ளது; அலம்பல் தவிர்க்கப் பெற்றுள்ளது.

எதிர்கால அறிவியல் - கலையியல் வளர்ச்சிகளை நன்கு கருத்திற்கொண்டு சொல்லமைப்புகளில் அடிப்படைக் கவனஞ் செலுத்தப்பெற்று ஆய்வுத் தீர்வுகளால் அணிசெய்யப் பெற்றுள்ளது.

பிற பொது அகராதிகளில் காணவே இயலாதனவாகிய பிறப் பல்வேறு வகைமையும் வரிசையும்பட்ட தொடர்புக் கலைச்சொற்களுக்கு - இவ் அருங்கலைச்சொல் அகரமுதலியானது உரிய செப்பக் கலைச்சொற் பொருட்பதிவுகளை முறைமையுற அமைத்து நிறை வார்ந்துள்ளது.

இந்நூலாக்கத்துள் பதிந்து நிற்கும் தமிழ்க் கலைச்சொற்கள் யாவும், தூய செந்தமிழாக்கங்களே! அனைத்துக்கும் மேலாக, இது பிழைகளற்ற ஒரு செந்தொகுப்பு! பளிச்சீட்டுப் பதிப்பு!

இதனை, ஆழ்ந்தாய்ந்து மகிழ்ந்து அரிய அணிந்துரை-யொன்றை நல்கிப் பெருமையளித்துள்ள திருக்குறட்செம்மல் எம் துணைவேந்தர் மாண்புமிகு - இ. சுந்தரமூர்த்தி ஐயாவுக்கு நிறைவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர-அமர-எண்ணி-ஆய்ந்து அரும்பாடுபட்டு உருவாக்கப் பெற்றுள்ள அருமையான படைப்பு, இது! இதன் பெருமையைப் படித்துப் பயன்படுத்துநர் அனைவரும் ஆங்காங்கும் உணர்ந்து உவப்பெய்துவர்! எடுத்த துறைகளிலெல்லாம் ஏற்றமுற்றுச் செழித்துயர்வர்!

இதனை - இவ் உருவில் - இத் தகைமையில் - இத் திருவில் - இந் நிறைவில் கொணர்ந்துள்ளமைக்கு அடிப்படை, இன்றைய எம் அறிவாரும் அரிய நட்புச் சுற்றமே!

என்றும் இதனை எண்ணி மகிழ்ந்தவாறேயிருப்பேன்!

இப் படிக்கு உரிய
அன்பன்,

(ப. அருளி)

முன் முகவுரையில் பயன்படுத்தப்பெற்றுள்ள சுருக்கப்பெயர்களுக்கான விளத்தப்பட்டி

[நூலுள் அடங்கும் சுருக்கக் குறிப்பீடுகளும் இவ் விளத்தப்பட்டியுள் அடங்குவனவே.]

அ-அ: அறிவியல் அகராதி அ.கி. மூர்த்தி (1995)
அ-ஆ.க (கட்டுரைச் சுருக்கக்கோவை):
முதலாவது - அறிவியல் ஆய்வுக் கருத்தரங்கு (த.ப.க)
அ. க : அறிவியல் களஞ்சியம் (1-8 தொகுதிகள்) (த. ப. க)
அ. க. அ : அருங்கலைச்சொல் அகரமுதலி (த. ப. க.)
ஆ. த. கை : ஆங்கிலம் - தமிழ்க் கையகராதி
(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - சென்னை)
இ.சொ: இரசாயனவியற் சொற்றொகுதி தன்மொழியலுவலகம்
இலங்கை (1955)
ஒ.நோ: ஒப்பு நோக்குக!
க.க.அ: கலைக்கதிர் - கலைச்சொல் அகராதி
பகுதி -1 . அடிப்படை அறிவியல் பகுதி -2. சமூக அறிவியல்
பகுதி-3. பயனுறு அறிவியல்
கலைக்கதிர் வெளியீடு, கோவை (1985)
கு-ஆ: சமூக விஞ்ஞானம்: குடிமையியலும் ஆட்சியியலும் (-2)
அரசகரும மொழித்திணைக்களம் - இலங்கை (1961)
குறள்: திருக்குறள் - திருவள்ளுவர்
ச அ: சட்டத் தமிழ் அகராதி - மா. சண்முக சுப்பிரமணியன்,
புலமை வேங்கடாசலம் (த.ப.க) (1984)
சீவக: சீவகசிந்தாமணி - திருத்தக்கதேவர்
செ.ப.க. ஆ.த.சொ. - சென்னைப் பல்கலைக்கழக
ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் (1965)
செ.ப.க.சி: சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின்
சீர்கேடுகள் - ஞா தேவநேயன் (1961)

த.ப.க: தமிழ்ப் பல்கலைக் கழகம்
தொல்.சொல்: தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

நாலடி : நாலடியார்
நா வ : நாட்டு வழக்கு
நெ. ஊ. து - சி. சொ. து : நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை
சிறப்புச் சொற்கள் துணையகராதி, தமிழ்நாடு அரசு (1976)
ப : பக்கம்
பேரா. உரை : தொல்காப்பியம் - பேராசிரியர் உரை
புவி : புவியியல் - கல்லூரித் தமிழ்க் குழு, தமிழகம் (1960)
பொ. தொ. க : பொறியியல் - தொழில் நுட்பவியல்
கலைச்சொல் அகராதி (த. ப. க.) (1997)
பௌ. வி : பௌதிக விஞ்ஞானம் அரசகரும மொழி
வெளியீட்டுக் கிளை பிரசுரம் - கொழும்பு (1960)
ம. அ : மருத்துவக் கலைச்சொல் அகராதி -
(உருட்டச்சிட்டது) (த. ப. க.) (1984)
ம. க : மருத்துவக் கலைச்சொற்கள் - மா். சாமி சண்முகம்
மறுவ : மறுவழக்கு
மி. மி. க. அ : மின்னியல் - மின்னணுவியல் கலைச்சொல் அகராதி
(த. ப. க) (1997)
மே. கா : மேலுங் காண்க
வா. க. : வாழ்வியல் களஞ்சியம் (1 - 10 தொகுதிகள்) (த.ப.க.)
வே. பொ. அ : வேதிப் பொது அறிவு
கல்லூரித் தமிழ்க்குழு - தமிழகம் (1960)
வே. ம. க : வேளாண்மையியல் மண்ணியல் கலைச்சொற்கள்
(த.ப.க.) (1997)
C.O.D: concise oxford Dictionary
G.S.T.L. : A Glossary standardized technical terms in Linguistics
(த.ப.க.) (1994)

(GK) : GREEK
(L) : LATIN
M.D : Dorland's pocket Medical Dictionary
p: page
v: verb

ஒல்லும் வகையால் உறுதுணைபுரிந்த-எம்
நன்றிக்கு உரியவர்கள்

திட்டத் திருத்தந்தை : மாண்புமிகு. வ. அய். சுப்பிரமணியம் ஐயா
வினைமுடிப்புக்குத் துணைதந்த பெருமகன் : [மாண்புமிகு. சி. பாலசுப்பிரமணியன் ஐயா]
நிலைநிறுத்தியுக்கிய நேயத்தர் : மாண்புமிகு. ஔவை. நடவரசன் ஐயா

புறப்படுத்த வந்துள்ள புதிய துணைவேந்தர் : மாண்புமிகு. இ. சுந்தரமூர்த்தி ஐயா

துறைப் பணிஞர்கள் :
திரு. பெஇராமலிங்கம் (இளநிலை ஆராய்ச்சிக் கல்வியர்)
திருவாட்டி. மா. பார்வதியம்மாள் (இளநிலை ஆராய்ச்சிக் கல்வியர்)
திரு. ஆ. சண்முகம் (இளநிலை ஆராய்ச்சிக் கல்வியர்)

தட்டச்சர்கள் :
திரு. து. இரா. செனார்த்தனன்
திருவாட்டி. செ. பிரேமாவதி

உதவியாண்மையர் :
திரு. அ. கலைமணி
திருவாட்டி. து. இராசேசுவரி
திருவாட்டி. ச. செயலட்சுமி

அலுவலகப் பணியாளர்கள் :
[திரு. ஜெ. கலியமூர்த்தி] திரு. கி. சிவக்குமார் திரு. பொ. அன்பழகன் திரு. சி. பிலமின்ராசு

நூலகப் பணிஞர்கள் :
திரு. த. பத்மநாபன் (இயக்குநர்)
திரு. ஆ. குணசேகரன் (முதல் நிலை நூலகர்) (தேநி)
திரு. அ. அரங்கநாதன் (முதல் நிலை நூலகர்)
திரு. செ. மரியசூசைநாதன் (முதல் நிலை நூலகர்)
திரு. பா. சண்முகம் (முதல் நிலை நூலகர்)
திரு. மா. கௌதமன் (நூலகவுதவியாளர்)
திரு. பா. சுந்தரேசன் (இயக்குநர் - பொறுப்பு)
திரு. கு. திருமாறன் முதல்நிலை நூலகர் (தேநி)
திரு. சோ. ஆனந்த நடராசன் (முதல் நிலை நூலகர்)
திரு. ப. வேலாயுதப் பெருமாள் (முதல் நிலை நூலகர்)
திரு. இரா. துரை (நூலகவுதவியாளர்)
திரு. சு. ஆறுமுகம் (முதல் நிலை நூலகர்)

கணிப்பொறி : படி யுருவாக்கம் - மேம்பாடி எடுப்பு :
திரு. து. வெங்கடேசன்

பதிப்புத்துறைப் பணிஞர்கள் :
திரு. ம.சா. அறிவுடைநம்பி(இயக்குநர்- பொறுப்பு)
திரு. பா. உன்னிகிருட்டிணன்(நிகர்நிலைக் கண்காணிப்பாளர்)
திரு. பெ.செல்வராசு (தேநி.து. தகட்டச்சாளர்)
திரு.மூ. சான் பால்ராசு (அச்சுப்பொறி உதவியாளர்)
திரு. கோ. இராசமோகன் (துநி. எடுக்குநர்)
திரு. செ. வள்ளிநாயகம் (து. தகட்டச்சாளர்)
திரு. செ. பழநியப்பன் (நிகர்நிலை-உதவிப் பதிவாளர்)
திரு. சு. கேசவன் (தே. நி. -துணைநிழற்படம் எடுக்குநர்
திரு. மா.பவளக்கண்ணன் (தேநி.து. தகட்டச்சாளர்)
திரு. பிஆர். சிவானந்தம் (அச்சுப்பொறி உதவியாளர்)
திரு. இரா. சரவணன் (து. தகட்டச்சாளர்)
திரு. அ. முகமது அனிப் (அ.பொ. உதவியாளர்)

புறத்துணைத் திறவோர் :

திரு. க. குணத்தொகையன்
திரு. சீனு. தமிழ்மணி
திரு. சீ. கருணாமூர்த்தி
திரு. க. இராமச்சந்திரன்
திரு. கு. இளங்கோ
திரு. மு. துரை
திரு. குழந்தை - ஈகவரசன்
திரு.சு. பன்னீர்செல்வம்
திரு. மு. பச்சையப்பன்
திரு. பூ. தமிழ்மொய்ம்பன்
திரு. விழுப்பரையனார்
திரு. சா. செழியன்
திரு. சீனு. தமிழ்நெஞ்சன்
திரு. இரா. சு. குமாரசாமி
திரு. நா. கமலச்செல்வன்
திரு. அ. செம்பரிதி
திரு. வடிவேல் இராவணன்
திரு. ப. சரவணன்
திரு.செந்தமிழினியன்
திரு. இறை. செம்மல்
திரு. அ. தெள்ளியன்
திரு. அ. நக்கீரனார்
திரு. சீனு. அரிமாப்பாண்டியன் -
திரு. தே. பாலமுருகன்
திரு. எ. சிவானந்தம்
திரு. அ. வேளாங்கண்ணி
திரு. சி. அமிழ்தன்
திரு. மா. பாலசுப்பிரமணியன்
திரு. கோ. மு. தமிழ்ச்செல்வன்
திரு. அர. சந்திரசேகரன்
திரு. அ. அறிவன்
திரு. பல்லடம். ந. முத்துக்குமரனார்
திரு. கா. பெரியதம்பி

அகத்துணை :
திருவாட்டி. மா. தேன்மொழியருளி

சொற்றொகுப்புக்கும் - தெரிவுக்கும் - ஆய்வுக்குமாகப் பயன்படுத்திய அறிவியல் - கலையியல் நூல்கள்

பட்டியல்

தமிழ் :

அங்கக வேதியியல் (துணைப்பாடம்)
பழ. இராமசாமி
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் (= த.பா.நி.) (1975)

அங்கக வேதியியல் (சிறப்புப் பாடம்)
எம். ஆள்கொண்டான் (த. பா. நி.) (1970)

அச்சங்களும் - வெறிகளும் : ஓர் அகரமுதலி
ப. அருளி
(வெளியீடு : தமிழினத் தொண்டியக்கம், புதுச்சேரி) (1992)

அச்சியல் சொற்றொகுதி
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1965)

அச்சுக்கலை
மா. க. சம்பந்தன் தமிழர் பதிப்பகம் - சென்னை (1976)

அச்சும் பதிப்பும்
மா. க. சம்பந்தன் தமிழர் பதிப்பகம் - சென்னை (1980)

அஞ்சியோசுபர்ம்களின் வகைப்பாட்டியல் (சிறப்புப் பாடம்)
கே. பி. செல்லப்பன் (த.பா.நி.) (1973)

அடிப்படை அரசியல் கோட்பாடுகள்
ஞா. வெர்சின் சிகாமணி (த.பா.நி.) (1978)

அடிப்படை இயந்திரவியல் (முதல் பாகம்)
ஆர். இராமகிருட்டிணன் (த.பா.நி.) (1976)

அடிப்படை இயந்திரவியல் (இரண்டாம்பாகம்)
ஆர். இராமகிருட்டிணன் (த.பா.நி.) (1979)

அடிப்படைக் கணிதம்
கு. இராசகோபாலன் (த.பா.நி.) (1975)

அடிப்படைத் திண்மநிலை இயற்பியல்
ச. சம்பத்து (த.பா.நி.) (1979)

அடிப்படைப் பௌதிகம்
சே. ஆரியர் (த.பா.நி.) (1974)

அணிகளும் அணிக்கோவைகளும்
சே. டி. சாமுவேல் (த.பா.நி.) (1972)

அணிகளும் வெக்டர்களும் (பொறியியற்கணக்கு - பகுதி 3)
பெ. ரெ. கிருட்டிணமூர்த்தி (த.பா.நி.) (1975)

அணிக்கொள்கையும் - திட்டமான வேறுபாடுகளும்
வி. எசு. சம்பத்குமார் (த.பா.நி.) (1977)

அணு அமைப்பும் - வேதிப் பிணைப்பும்
கணேச கோபாலகிருட்டிணன் (த.பா.நி.) (1975)

அணு இயற்பியல்
கா. வே. சுப்பிரமணியன் (த.பா.நி.) (1977)

அணுக் கருவியல்
இரா. சபேசன் (த.பா.நி.) (1976)

அணுசக்தி - ஓர் அறிமுகம்
பூவுலகின் நண்பர்கள். அண்ணாநகர், சென்னை-40. (1989)

அணுவைப் பற்றி
து. கிருட்டிணன், எசு. எச். சுப்பிரமணியன்,க. ச. வ. நம்பி,
தி. நா. ரங்கராசன், வே. சி. ராகவன்,அ. ராமமூர்த்தி,
வ. வெங்கட்ராசு - (விஞ்ஞானத் தமிழ்வளர்ச்சிக் கழகம் -
பம்பாய், பம்பாய்த் தமிழ்ச் சங்கம்) (1968)

அண்மைக் காலத்து இந்திய மெய்ப்பொருளியல்
சி. இராமலிங்கம் (த.பா.நி.) (1976)

அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம்
ஏ. என். சிவராமன் (தினமணி) (1970)

அந்நியச் செலாவணி
த. இராயர் (த.பா.நி.) (1973)

அமிலங்களும் காரங்களும்
கணேச கோபாலகிருட்டிணன் (த.பா.நி.) (1973)

அமைச்சரவை ஆட்சியியல்
நல். முருகேசன் (த.பா.நி.) (1973)

அமைதிக்கால நாட்டிடைச் சட்டம்
இர. வை. தனபாலன் (த.பா.நி.) (1973)

அமைப்புவச ஆய்வு
கா. வா. இராமதாசு (த.பா.நி.) (1975)

அரசாங்க நிதியியல்
அர. சேசாசலம் (த.பா.நி.) (1963)

அரசாங்கப் பகுதிகள்-உத்தியோகப் பதவிப் பெயர்கள்-நாமவலி
இலங்கை அரசாங்கம் (1955)

அரசியல் (த.பா.நி.) (1971)

அரசியல் அமைப்புகள் (ஐரோப்பிய நாடுகள்)
பு. ரா. பக்கிரி சங்கர் (த.பா.நி.) (1960)

அரசியல் அமைப்புகள் - ஓர் ஒப்பீடு
மோ. வள்ளுவன் கிளாரன்சு (த.பா.நி.) (1976)

அரசியல், பொதுத்துறை ஆட்சியியல்
கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம் (1960)

அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம் -
(பகுதி 1, 2, 3) ஏ. வி. டைசி.
தமிழாக்கம் : பா. சூரியநாராயணன் (1) (2)
கி. ஏ. அநுமந்தன் (2) (3) (த.பா.நி.) (1975)

அரசியலுக்கு ஓர் அறிமுகம்
ரோசர் எச். சோல்டாவ் தமிழாக்கம் : டி. செல்லப்பா
(தமிழ் வெளியீட்டுக் கழகம்) (1964)

அரசிறைப் பொருளியல் (முதல் புத்தகம்)
அர. சேசாசலம் (த.பா.நி.) (1976)

அரசின் அணுக்கள்
செல்வி. கொ. அரிபிரியா (த.பா.நி.) (1972)

அலைகள்
டி. ஆர். பாலகிருட்டிணன் (த.பா.நி.) (1972)

அழுகண்ணியும் ஆசுத்தமாவும்
ஆர். குமாரசாமி (சுசிலா பதிப்பகம் - தேரூர்) (1974)

அளக்கையியல் (முதல்தொகுதி)
கொடுமுடி ச. சண்முகன் (த.பா.நி.) (1972)

அளவறி பகுப்பாய்வு - வி. அலெக்சியெவ்
(தமிழாக்கம் தி. சக்திவேலு) (த.பா.நி.) (1976)

அளவை இயல்
ப. செ. தாயுமானவர் (த.பா.நி.) (1977)

அளவையியற் சொற்றொகுதி
அரசகரும மொழித்திணைக்களம் - இலங்கை (1964)

அறவியல் ஓர் அறிமுகம்
வில்லியம் லில்லி - தமிழாக்கம் : கோ. மோ. காந்தி (த.பா.நி.) (1964)

அறிக அறிவியல் - (திங்களிதழ்)
கதிர் : 1 (ஆகத்து - 1986) கதிர் : 2 (செபுதெம்பர் -1986)
கதிர் : 3 (அக்குதோவர் -1986) கதிர் : 4 (நவம்பர் - 1986)
கதிர் : 5 (திசம்பர் - 1986) கதிர் : 6 (சனவரி - 1987)
கதிர் : 7 (பெப்புருவரி - 1987) கதிர் : 8 (மார்ச்சு - 1987)
கதிர் : 9 (ஏப்பிரல் - 1987) கதிர் : 10 (மே - 1987)
கதிர் : 11 (சூன் - 1987) கதிர் : 12 (சூலை - 1987)
கதிர் : 1 (ஆகத்து - 1987)

அறிமுக வேதிவெப்ப இயக்கவியல்
சுப. சண்முகநாதன், சு. விவேகானந்தன் (த.பா.நி.) (1976)

அறிமுறை வேதியியல் (முதல் புத்தகம்)
உ. ஆர். சூரியநாராயணன் (த.பா.நி.) (1970)

அறிமுறை வேதியியல் (இரண்டாம் புத்தகம்)
உ. ஆர். சூரியநாராயணன் (த.பா.நி.) (1970)

அறிவியல் (ஆறாம் வகுப்பு)
(இயற்பியல்) : என். எசு. சிதம்பரம்
(வேதியியல்) : எம். செயராமன்
(உயிரியல்) : நீட்டா ஆப்பர் (த.பா.நி.) (1981)

அறிவியல் (ஏழாம் வகுப்பு)
எம். வெங்கடாசலம்
இரா. நாகராசன்
டி. பி. இளங்கோவன் (த.பா.நி.) (1982)

அறிவியல் (எட்டாம் வகுப்பு)
(இயற்பியல்) : டி. எசு. பெரிய திருவடி
(வேதியியல்) : பி. எசு. கிருட்டிணசாமி
(உயிரியல்) : எசு. கோபால கிருட்டிணன் (த.பா.நி.) (1985)

அறிவியல் (ஒன்பதாம் வகுப்பு)
(இயற்பியல்) : அ. பா. நரசிம்மன்
(வேதியியல்) : எம். எசு. வேங்கடரங்கன்
(உயிரியல்) : வே. மு. மந்திரம் (த.பா.நி.) (1983)

அறிவியல் (பத்தாம் வகுப்பு)
(இயற்பியல்) : தி. கு. சஞ்சீவி
(வேதியியல்) : எசு. மணி
(உயிரியல்) : சி. ஆர். ராமசேசன் (த.பா.நி.) (1984)

அறிவியல் : "எயிட்சு என்னும் புதிய நோய் பற்றிய ஆய்வுகள்" - (1)
கே.என். இராமச்சந்திரன் (தினமணி நாளிதழ்) (15-7-1986)
: "மெல்லிய காற்றிலிருந்தும் மின்சாரம்பெற ஒரு புதிய ஆத்திரேலியக் கருவி"
கே.என். இராமச்சந்திரன் (தினமணி நாளிதழ்) (23-7-1986)

அறிவியல் அமுதம்
டி.எம். சௌந்தரராசன் - பிரம் பிரசு - சென்னை (1983)

அறிவியல் கட்டுரைகள்
கே. நடராசன் (பாரி நிலையம் - சென்னை-1) (1980)

அறிவியல் கண்டுபிடிப்புகளின் வரலாறு - (பகுதி ஒன்று)
ஈகான் லார்சன். தமிழாக்கம் கு. ராசாராமன்
(கூட்டு வெளியீடு - சென்னை) (1977)

அறிவியல் கண்டுபிடிப்புகளின் வரலாறு (பகுதி - இரண்டு)
ஈகான் லார்சன். தமிழாக்கம் மணவை-முசுதபா
(கூட்டு வெளியீடு - சென்னை) (1978)

அறிவியல் கண்டுபிடிப்புகளின் வரலாறு (பகுதி - மூன்று)
ஈகான் லார்சன் (தென்மொழிகள் புத்தக டிரசுடு) (1979)

அறிவியல் கதம்பம்
வே. தமையேந்திரன் (அன்னை அறிவுப் பதிப்பகம்) (1982)

அறிவியல் களஞ்சியம் - தொகுதி 1
முதன்மைப் பதிப்பாசிரியர் : பி. எல். சாமி
தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் (1986)
தொகுதி 2: முதன்மைப் பதிப்பாசிரியர் :
கி. கண்ணபிரான் (1987)
தொகுதி 3: முதன்மைப் பதிப்பாசிரியர் :
உலோ. செந்தமிழ்க் கோதை (1987)
தொகுதி - 4, 5, 6, 7, 8
முதன்மைப் பதிப்பாசிரியர் : கே. கே. அருணாசலம்
தொகுதிகள் : 4 , 5 , 6 (1988)
தொகுதி : 7 (1991)
தொகுதி : 8 (1993)

அறிவியல் - சில பார்வைகள்
ப. க. பொன்னுசாமி. அன்னம் (பி) லிட். சிவகங்கை (1985)

அறிவியல் தமிழ்
பதிப்பாசிரியர் : டி. பத்மனாபன் (கலைக்கதிர்) கோவை - 37

அறிவியல் தமிழ்
வா.செ. குழந்தைசாமி (பாரதி பதிப்பகம், சென்னை) (1985)

அறிவியல் பயிற்றும் முறை
ந. சுப்பு - பழனியப்பா பிரதர்சு (1957)

அறிவியல் பாதையில் மனிதன்
கே.எசு. மகாதேவன்
(மெர்குரி புத்தகக்காலனி, கோவை-1) (1962)

அறிவியல் பூங்கா
வே . தமையேந்திரன் (புகழ் பப்ளிகேசன்சு, சென்னை) (1980)

அறிவியல் மஞ்சரி
அறிவியல் மன்றம் - டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி (1987)

அறிவியல் முத்துக்கள் : ஏன் ? என்ன ? எப்படி ?
த. சலாவுத்தின் (தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை) (1985)

அறிவியல்வழி தமிழ்
அறிவியல் மன்றம் -
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி (1987)

அறிவியலின் வளர்ச்சியிலே
ஆனைவாரி - ஆனந்தன்
(மகாலட்சுமி பதிப்பகம், ஆரணி) (1990)

அறிவியலின் சில முகங்கள்
ருத்ர-துளசிதாசு (அகரம் - கும்பகோணம் -1) (1997)

அறிவுக்கதிர் - ஆற்றல் மலர்
தமிழ்மன்ற வெளியீடு -
பூ.சா.கோ. பொறியியல் பல்தொழில் கல்லூரி, கோவை (1982-1983)

அறிவுக்கதிர்-
இதழ் - 1 (1975-1976) இதழ் - 2 (1975-1976)
இதழ் - 7 (1976-1977) இதழ் - 8 (1977-1978)
இதழ் - 9 (1978-1979) இதழ் - 10 (1979-1980)
இதழ் - 11 (1980-1981)

தமிழ்மன்ற வெளியீடு.
பூ.சா.கோ. பொறியியற் பல்தொழில் கல்லூரி, கோவை.

அறிவுச்சுடர் - இதழ்கள் :
(1976, 1977, 1979, 1980, 1981, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989)

அறுவை சிகிச்சை நோய்நாடல்
லெ. சிவராமன் (தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

அனைவருக்குமான இயற்பியல் (இயக்கம், வெப்பம்)
எல். லண்டன், கி. கித்தோர்சுகி
தமிழாக்கம்: பா. இ. பழனியாண்டி
மீர் பதிப்பகம்-மாசுகோ (1984)

அன்றாட உணவில் வைத்தியம்
இல. நாதன் (தமிழ்க்கடல் பதிப்பகம் - சென்னை) (1985)

ஆக்க இலக்கியமும் அறிவியலும்
பதிப்பாசிரியர் : அ. சண்முகதாசு
(யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை வெளியீடு) (1977)

ஆக்கத்துறையில் அணுசக்தி
டி. எம். சௌந்தரராசன். வேமா பதிப்பகம், சென்னை (1983)

ஆங்கில நாட்டின் அரசியலமைப்பு
என். சே. இராசகோபால் (த.பா.நி.) (1972)

ஆங்கிலம் - தமிழ் அகராதி (பொது விஞ்ஞானம்)
செ. நடராசா. கொழும்பு (1952)

ஆசிய அரசுகளின் நிர்வாகத் துறைகள்
திருவாட்டி. வ. இராசலட்சுமி (த.பா.நி.) (1973)

ஆசிய நாடுகளின் அரசாங்கங்கள்
சோ. சுப்பிரமணியன் (த.பா.நி.) (1972)

ஆசிரியர்கள் கல்லூரிகளுக்குத் தமிழ்க் கலைச்சொற்கள்
சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (1958)

ஆஞ்சியோசுபெர்ம்களின் கருவியல்
கு. பெரியசாமி (த.பா.நி.) (1973)

ஆட்சிச்சொல் அகராதி (ஆங்கிலம் - தமிழ்)
தமிழ்நாடு அரசு (1971)

ஆட்சிச் சொற்களஞ்சியம்
போரிசு புத்ரின். நியூசெஞ்சுரி புக் கவுசு - சென்னை (1986)

ஆட்சித் துறைத்தமிழ்
கீ. இராமலிங்கனார்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - சென்னை (1974)

ஆணுக்கும் பெண்ணுக்கும் 500 யோசனைகள்
அதிவீர பாண்டியன், வானதி பதிப்பகம், சென்னை (1986)

ஆடும் பாம்பு
ம. வி. இராசேந்திரன்
"போனோர் அகம்" பாளையங்கோட்டை (1985)

ஆயத்தொலை வடிவ கணிதம்
டி. கே. மாணிக்கவாசகம் (த.பா.நி.) (1977)

ஆய்வியல் அறிமுகம்
இராம. பெரிய கருப்பன், எம். எசு. இலக்குமணன்
மீனாட்சி புத்தகநிலையம், மதுரை - 1. (1986)

ஆய்வு எது? ஏன்? எப்படி?
பேரா. க. நாராயணன்
மாரி பதிப்பகம், புதுச்சேரி (1987)

ஆய்வுக் களஞ்சியம் (வரிசை 3)
குறும்பொறைக் கோமான்
கொடுமுடி சண்முகப் பிரகதம்
தேனோலை, இந்திரா நகர், சென்னை. (1981)

ஆர்த்ரோபோடா (முதலாம் பாகம்)
கிரசுடேசியா ஒனைக்கோபோரா
தமிழாக்கம் : செ. இராசசேகரன் (த.பா.நி.) (1974)

ஆர்த்ரோபோடா (இரண்டாம் புத்தகம்)
தமிழாக்கம் : ந. முத்துக்குமாரசாமி (த.பா.நி.) (1974)

ஆர்த்ரோபோடா (இரண்டாம் பாகம்)
தமிழாக்கம் : எசு. கே. வள்ளி (த.பா.நி.) (1973)

ஆர்த்ரோபோடா (மூன்றாம் பாகம்)
தமிழாக்கம் : ந. முத்துக்குமாரசாமி (த.பா.நி.) (1972)

ஆராய்ச்சி நெறிமுறைகள்
ச. வே. சுப்பிரமணியன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. (1975)

ஆழ்கடலில் சில அதிசயங்கள்
அரசு மணிமேகலை (பத்மாவதி பதிப்பகம், சென்னை) (1998)

ஆற்றலியல் இன்றும் நாளையும்
வி. அ. கிரீலின் - தமிழாக்கம் : கி. பரமேசுவரன்
மீர் பதிப்பகம், மாசுகோ (1987)

ஆற்றலோ ஆற்றல்
தமிழாக்கம் : தி. அ. கறுப்பண்ணன்
கலைக்கதிர் வெளியீடு - கோவை (1961)

ஆத்திரேலியா
எச். நியூமன் (த.பா.நி.) (1963)

ஆத்திரேலியா
க. குமாரி மீனாட்சி - ரா. சித்ரலேகா (த.பா.நி.) (1973)

இங்கிலாந்தின் அரசாங்கமும் அரசியலும் (கி.பி. 1603 முதல்)
கே. செங்கோட்டி (த.பா.நி.) (1978)

இதயத்தை வலுவாக்கு
வி. செ. லெனின் தமிழாக்கம் : ஏ. எசு. மூர்த்தி
மீர் பதிப்பகம் - மாசுகோ (1981)

இதழியல்
இரா. கோதண்டபாணி
கற்பக நூலகம் - மதுரை (1980)

இதழியல் கலை
மா.பா. குருசாமி, வெளியீடு : திருச்செந்தூர்-15. (1988)

இந்திய அரசியலமைப்பு
எசு. இளங்கோவன் (த.பா.நி.) (1972)

இந்திய அரசியலமைப்புச் சட்டம்
பு. சு. திருமலை (த.பா.நி.) (1975)

இந்திய அரசியலமைப்புத் திட்டம்
எம். வி. பைலி. தமிழாக்கம் : தி.வெ. குப்புசாமி ; எசு. சுப்பிரமணியன் (த.பா.நி.) (1974)

இந்திய அறிவியல் மேதைகள்
இரா. தனசேகரன்,
அர்ச்சனா பதிப்பகம், குறிஞ்சிப்பாடி. (1982)

இந்திய ஆட்சி அமைப்பு வளர்ச்சி வரலாறு - (கி.பி. 1707 வரை)
ந. க. மங்கள முருகேசன் (த.பா.நி.) (1972)

இந்திய இசுலாமியர் சட்டம்
எச். எம். அப்துல்கலாம் (த.பா.நி.) (1973)

இந்திய கணித வரலாறு
கே. ஆர். ராசகோபாலன் எசு. கோவிந்தராசு
அப்துல் அக் (கிறித்தவ இலக்கிய சங்கம், சென்னை-3) (1979)

இந்தியச் செலாவணியும் வங்கியியலும்
பு. வி. சீனிவாசன் (த.பா.நி.) (1975)

இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்
பு. வி. சீனிவாசன் (த.பா.நி.) (1963)

இந்தியத் தண்டனைச் சட்டம்
எச். எம். அபுல்கலாம் (த.பா.நி.) (1978)

இந்தியத் தத்துவம்
முதல்பாகம் (1966), இரண்டாம் பாகம் (1968)
எச். இரியண்ணா - தமிழாக்கம் : வி. ஏ. தேவசேனாபதி ;
பி. என். சண்முகசுந்தரம் (த.பா.நி.)

இந்தியத் தரையியல் - 1.
க. மாணிக்கம் (த.பா.நி.) (1962)

இந்தியத் தொழில்துறையில் தொழிலாளர் பிரச்சனைகள்
முதல்பாகம் (1972), இரண்டாம் பாகம் (1973)
வி. வி. கிரி தமிழாக்கம் : எம். ஏ. அபூர்வசாமி (த.பா.நி.)

இந்தியப் பொருளாதாரம்
வே. கவியமூர்த்தி, (சுடரொளி பதிப்பகம்) சிதம்பரம் (1987)

இந்தியப் பொருளாதார வளர்ச்சி
மு. விசுவநாதன் (த.பா.நி.) (1972)

இந்தியப் பொருளியல்
பா. நடராசன் (த.பா.நி.) (1962)

இந்திய விவர்வொர்ட்களும் - மாச்சுகளும்
ப. செயராமன் (த.பா.நி.) (1973)

இந்திய வனவிலங்குகள்
ப. சி. சுப்பையன் (த.பா.நி.) (1974)

இந்தியப் பொருளியல் சிந்தனை
சி.டி. இராசேசுவரன் (த.பா.நி.) (1973)

இந்திய வாரிசுரிமைச் சட்டம் - 1925
எ. பரிபூரணம் (த.பா.நி.) (1979)

இந்திய வேளாண்மை
வே. தில்லைநாயகம்,
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் (1988)

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?
ஞா. தேவநேயன் (நேசமணிப்பதிப்பகம்) (1968)

இந்தியாவில் போக்குவரத்து
பி. அப்துல் ரசாக் (த.பா.நி.) (1974)

இந்தியாவில் போக்குவரவு
கீ. சீ. இராமசாமி - அமுதநிலையம், சென்னை - 18. (1958)

இந்தியாவில் வரிவிதிப்பு
ப. வ. ராச்குமார் (த.பா.நி.) (1974)

இந்தியாவில் கனிம வளங்கள்
பெ. தி. முனியப்பா (த.பா.நி.) (1982)

இந்தியாவின் நன்னீர்வாழ் ஆல்காக்கள்
ஆர். ரங்கராசன் (த.பா.நி.) (1974)

இந்தியாவின் புவியியல்
எசு. இராதாகிருட்டிணன் (த.பா.நி.) (1978)

இந்துச் சட்டம்
ச. செந்தில்நாதன் (த.பா.நி.) (1973)

இந்துச்சமயத் தத்துவம்
டி. எம். பி. மகாதேவன்,
தமிழாக்கம் : ஞா. இராசாபகதூர் (த.பா.நி.) (1973)

இந்துத் திருமணச் சட்டம்
புலமை வேங்கடாசலம், த. ப. க., தஞ்சை (1986)

இயக்க விசையியல்
கே. இராசகோபாலன் (த.பா.நி.) (1973)

இயக்கவியல்
கு. நாகலிங்கம் (த.பா.நி.) (1973)

இயக்கவியல் (சிறப்புப்பாடம்)
ஆர். மகாதேவன் - க. சிவசுப்பிரமணியம் -
ப. இரா. சுப்பிரமணியம் (த.பா.நி.) (1971)

இயக்கவியல் பொருள் முதல்வாதம்
மாரிசு கார்ன் போர்த் - சென்னை புக் கவுசு

இயல்முறை வீச்சு வடிவ கணிதம்
க. சு. இராமச்சந்திரன் (த.பா.நி.) (1972)

இயற்கணிதம்
ரா. சுந்தரவல்லி (த.பா.நி.) (1972)

இயற்கை மருத்துவம்
ரா. கிருட்டிணசாமி, உழவன் அச்சகம், கோவை-6. (1985)

இயற்கை விஞ்ஞானம்
சென்னை அரசாங்கம் (1947)

இயற்கை வைத்தியம்
தமிழ்வாணன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை (1969)

இயற்பியல் (தொகுதி 1) (மேல்நிலை முதலாம் ஆண்டு)
பி. திருஞானசம்பந்தம் (த.பா.நி.) (1982)

இயற்பியல் (மேல்நிலை - இரண்டாம் ஆண்டு)
பி. திருஞானசம்பந்தம் (த.பா.நி.) (1978)

இயைபு நூல்
சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (1936)

இரசாயன எந்திரவியற் சொற்றொகுதி
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1967)

இரசாயனப் பொருளியல்
டி. குச்நெட்சோவ்,
தமிழாக்கம் : சோ. வரதராசன் (த.பா.நி.) (1976)

இரசாயனம்
சென்னை அரசாங்கம் (1947)

இரசாயனவியற் சொற்றொகுதி - 1
தன்மொழியலுவலகம், இலங்கை அரசாங்க அச்சகம் (1955)

இரட்டையாட்சி
எசு. சிங்கராசன் (த.பா.நி.) (1972)

இரண வைத்தியம்
ய. டன்வதர், யாழ்ப்பாணம் (1867)

இரண்டாவது ஆண்டு மலர்
தமிழ்நாடு அறிவியல் கல்விக்கழகம் (1979)

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டக்
கடற்கரைப்பரதவர் தொழிற்கலைச்சொற்கள்
ச. முருகானந்தம். தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்(1983)

இருபரிமாணப் பகுமுறை வடிவகணிதம்
ஏ. கோவிந்தராசுலு (த.பா.நி.) (1971)

இருவாழ்விகள்
வி. பி. எசு. இராசன் (த.பா.நி.) (1973)

இரு வானொலி உரைகள்:
தமிழில்கலைச்சொல்லாக்கம். தமிழில் அறிவியல்
ப . அருளி. (வெளியீடு : தமிழினத் தொண்டியக்கம், புதுவை) இரண்டாம் பதிப்பு (1990)

இரைப்பைக்குடல் - மலக்குடல் இயல்
ந. அரங்கபாச்யம் - து. ஞானப்பிரகாசம்(த.பா.நி.) (1978)

இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் - 1
பதிப்பாசிரியர்கள்: ச. அகத்தியலிங்கம், சு. பாலசுப்பிரமணியம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1974)

இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள்
முத்துச்சண்முகன், சு. வேங்கடராமன்
முத்துப் பதிப்பகம், மதுரை (1980)

இலக்கியக் கொள்கை
ரெனி வெல்லாக் - ஆண்ட்டின் லாரன்
தமிழாக்கம் : எசு. குளோரியா சுந்தரமதி (1966)

இலகு பௌதிகம்
பி. சவரிமுத்து (த.பா.நி.) (1960)

இலாபம் தரும் இறால் வளர்ப்புத் தொழில்
மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு, சென்னை (1990)

இளம்விஞ்ஞானி (மலர் : 3. இதழ் எண். 11)
விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிச் சங்கம் (1967)

இளையோர் உளவியல்
அ. அப்துல்கரீம் (த.பா.நி.) (1975)

இளையோர் உளவியல் - 1
கார்ல் சி. காரிசன்
தமிழாக்கம் : தி. இரா. அரங்கராசன் (த.பா.நி.) (1964)

இறைமாட்சி அல்லது அரசியல்
சோ. இலட்சுமிரதன் பாரதி
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1946)

இன்றைய சிகடுகள்
அலர்மேலு இராமகிருட்டிணன் (த.பா.நி.) (1972)

இன்றைய பௌதிகம் (சிறப்புப் பாடம்)
எம். ஏ. தங்கராசு (த.பா.நி.) (1960)

இன்றைய விலங்கினச் சூழலியல்
ம. வி. இராசேந்திரன் (த.பா.நி.) (1973)

இன்டர்னெட் மல்டிமீடியா சொற்களஞ்சியம்
இராம்குமார்சைவ சித்தாந்தக் கழகம், சென்னை. (1997)

இனிக்கும் பதநீர்
கே. சம்பந்தம்,சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், சென்னை (1966)

உங்கள் குழந்தை
வெளியீடு: ருக்மணி புத்தக நிலையம், புதுக்கோட்டை (1947)

உங்கள் மாடு சினைபிடிக்காதது ஏன்?
பி. போத்தி நியூ செஞ்சுரி புக் கவுசு, சென்னை-98. (1982)

உங்களுக்குத் தலைவலியா?
சு. நரேந்திரன். பூம்புகார் பதிப்பகம், சென்னை. (1988)

உட்கவர்மனம்
மரியா மாண்டிசோரி
தமிழாக்கம் : சி. ந. வைத்தீசுவரன் (த.பா.நி.) (1964)

உட்கனற் பொறி - ஓர் அறிமுகம்
கே. ஆர். கோவிந்தன் (த.பா.நி.) (1973)

உடல் செயலியல்
பொன். விசயலட்சுமி கி. வள்ளியம்மை
நியூ செஞ்சுரி புக் கவுசு, சென்னை. 98. (1986)

உடலமைப்பியலும் இழைமவியலும்
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1965)

உடலியக்கவியல்
தமிழியக்கப் பாசறை, காரைக்குடி (1972)

உடலியங்கியல்
கே. எம். பைகாவ்
தமிழாக்கம் : சி. வேங்கடசாமி, டி. சரோசினி, எசு. கே. துரைராசு, ஆர். சேது.
(முதல் தொகுதி : 1968
இரண்டாம் தொகுதி : 1968
மூன்றாம் தொகுதி : 1972
(த.பா.நி.) நான்காம் தொகுதி : 1971)

உடலியலும் சுகாதாரமும்
தமிழ்நாடு அரசு (1947)

உடலியலும் நலவழியும்
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (1936)

உடற்கலைச் சொற்றொகுதி
அரசகரும மொழித் திணைக்களம் - இலங்கை (1963)

உடற்கூற்று உளவியல்
மு. இராசமாணிக்கம் (த.பா.நி.) (1978)

உடற்செயலியல்
மங்களா. பொ. வினோபா (த.பா.நி.) (1976)

உடற்றொழிலியலும், உடனலவியலும்
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1957)

உடற்றொழிலியலும் உயிரிரசாயனவியலும் (மருத்துவம்)
(விஞ்ஞானச் சொற்றொகுதி)
அரசகரும மொழித் திணைக்களம் - இலங்கை (1965)

உணர்ச்சிகள் உருவாக்கும் உடல்நோய்கள்
(சிகிச்சையும் தடுப்பு முறையும்)
தி. செயராமகிருட்டிணன், பு. செயச்சந்திரன்
நியூ செஞ்சுரி புக் கவுசு - சென்னை (1985)

உணர்த்திகளும் மின்கருவிகளும் காப்புமைப்பும்
பழ. முருகேசன் (த.பா.நி.) (1973)

உணவும் ஊட்டமும்
தி. வெங்கடகிருட்டிணன் (த.பா.நி.) (1966)

உயர்கணக்கியல் (முதல்பகுதி)
அ. குமாரராசு (த.பா.நி.) (1975)

உயர்கணக்கியல் (இரண்டாம் பகுதி)
(முதல் புத்தகம் : 1975)

(இரண்டாம் புத்தகம் : 1975)
அ. குமாரராசு (த.பா.நி.)

உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதல் பாகம்)
ஞா. தேவநேயன்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1950)

உயர்தரக் கட்டுரை இலக்கணம் (இரண்டாம் பாகம்)
ஞா. தேவநேயன்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1950)

உயர்நிலை நுண்ணினப் பொருளாதார இயல்
சி.வேலாயுதம் (த.பா.நி) (1977)

உயர்நிலை வானஇயல்
க. சு. இராமச்சந்திரன் (த.பா.நி.) (1977)

உயர்விசையியல்
ரா. மகாதேவன் (த.பா.நி.) (1973)

உயிரி இயற்பியல் - 1
கே. என். இராமச்சந்திரன்,
எம். தட்சிணாமூர்த்தி (த.பா.நி.) (1976)

உயிரியல் (பதினொன்றாம் வகுப்பு - விருப்பப்பாடம்)
குழு - தமிழக அரசு வெளியீடு (1968)

உயிரியல் உலகம் (கட்டுரைத் தொகுப்பு)
அறிவியல் மன்றம்
டாக்டர். சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி (1987)

உயிரியல்களைக் கற்பித்தல்
கி. இராசகோபால் (த.பா.நி.) (1978)

உயிரியல் - தாவரவியல் (பதினொன்றாம் வகுப்பு)
இ. கோவிந்தராசுலு, கே. ஆர். பாலச்சந்திரகணேசன்,
டி. டி. சுப்பிரமணியம் (த.பா.நி.) (1982)

உயிரியல் - தாவரவியல் (பன்னிரண்டாம் வகுப்பு)
இ. கோவிந்தராசுலு, ஆர். வெங்கட்ராமன்,
ஆர். துரைசாமி, கே. ராசசேகரன் (த.பா.நி.) (1982)

உயிரியல் தொழில்நுட்ப அகராதி
இரா. செயந்தி, இல. செ. கந்தசாமி
கலைச்செல்வம் பதிப்பகம், கோவை (1989)

உயிரியல் பாட்டு - சிறுவர் பாடல்கள்
தமிழியக்கன், நியூ செஞ்சுரி புக் கவுசு, சென்னை. (1985)

உயிரியல் - விலங்கியல் (பதினொன்றாம் வகுப்பு)
பி. எம். அண்ணாமலை, கே. பி. சுப்பிரமணியம்,
ஏ. பி. கமலாக்கர ராவ் (த.பா.நி.) (1981)

உயிரியல் விஞ்ஞானம்
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1961)

உயிரினங்களின் இயல்பு
சி. பகுக்வொர்த், ராபர்ட், கே. என்டெர்சு
தமிழாக்கம் : வி. எசு. இராமசாமி
தென்னிந்திய சயன்சு கிளப் - இக்கின்சு பாதம், சென்னை. (1966)

உயிருக்கே உலைவைக்கும் போதைமருந்துப் பழக்கம்
பி. ரெக்சு வானதி பதிப்பகம் - சென்னை. (1987)

உயிர் நூல்
கல்லூரித் தமிழ்க்குழு, சென்னை அரசாங்கம் (1960)

உயிர்ப் பரிணாமம்
கோ. செயராசு பாண்டியன் (த.பா.நி.) (1972)

உயிர்ப் புள்ளியியல்
எசு. எசு. நாராயணசாமி (த.பா.நி.) (1972)

உருவத் தோற்றியல்
ப. இராசாராம் (த.பா.நி.) (1974)

உருளைப் புழுக்கள்
அ. சன்னியாசிநாதன் (த.பா.நி.) (1973)

உலகத் தொடர்புகளின் முறையான புவியியல்
மார்கரெட் எசு. வில்விசு
தமிழாக்கம்: வெ. சு. அனந்த பத்மநாபன் (த.பா.நி.) (1972)

உலகமொழிகள் - (முதல்பகுதி) (1968)
(இரண்டாம் பகுதி) (1969)
(இந்தோ - ஐரோப்பிய மொழிகள்) - ச. அகத்தியலிங்கம்,
வெளியீடு : பொன்னகம் - அண்ணாமலை நகர் (1968)

உலோகவியல்
இரா. இலக்குமணன் (த.பா.நி.) (1973)

உலோகவேலை
அரசகரும மொழித்திணைக்களம் - இலங்கை (1957)

உளப் புள்ளியியல் (துணைப்பாடம்)
கே. நந்தி (த.பா.நி.) (1973)

உளவியல்
(த.பா.நி.) (1971)

உளவியல்
கல்லூரித் தமிழ்க்குழு - சென்னை அரசு (1960)

உளவியல் துறைகள் - 1 : (1973) 2 : (1974)
மு. இராசமாணிக்கம் (த.பா.நி.)

உளநலவியல்
தா. ஏ. சண்முகம் (த.பா.நி.) (1960)

உற்பத்தித் திறனும் சமுதாயமும்
பூ. சா. கோ. தொழில்நுட்ப நிறுவனம்
(பயிற்சித்துறை தொழில்நுட்ப வெளியீடு) (1969)

ஊட்ட உணவும் அதைப்பெறும் வழிகளும்
வெங்கட கிருட்டிணன் (வானதி பதிப்பகம்,சென்னை) (1984)

ஊர்வன (முதல்பகுதி)
ராணி கந்தசுவாமி (த.பா.நி.) (1972)

ஊர்வன (இரண்டாம் பகுதி)
ராணி கந்தசுவாமி (த.பா.நி.) (1972)

ஊற்றுநீர்ப் பொறியியல் அடிப்படைக் கோட்பாடுகள்
பி. எசு. சேசாத்திரி (த.பா.நி.) (1974)

எக்சிசுடென்சியலிசம்
எசு. வி. ராசதுரை , (கிரியா) சென்னை - 14. (1983)

எக்சு கதிர்கள்
பி. என். அப்புசாமி, சே. பி. மாணிக்கம் (த.பா.நி.) (1960)

எக்சு கதிர்களும் படிகவியலும்
சி. உ. பிள்ளை (த.பா.நி.) (1978)

எண்ணியல்
தமிழியக்கப் பாசறை, காரைக்குடி (1972)

எண்சார் கணிதவியல்
ஆர். இராமகிருட்டிணன் (த.பா.நி.) (1973)

எதிர்கால ஆற்றல் வாயில்கள்
ஏ. ஆர். ராமராசு நியூ செஞ்சுரி புக் கவுசு-சென்னை (1987)

எதிர்காலத்து ஆற்றல் மாற்றுமூலங்கள் :
பிரிட்டிசு முயற்சிகளும் ஐரோப்பிய ஆய்வுகளும்
கே. என். இராமச்சந்திரன் (தினமணி நாளிதழ்) (29.7.1986)

எந்திரவியல்
க. தங்கராசு (த.பா.நி.) (1973)

எந்திரவியல் - சிறப்புப்பாடம் - I
ஆர். நாகராசன் (த.பா.நி.) (1973)

எலக்ட்ரானியல்
க. ப. இரத்தினம் (த.பா.நி.) (1973)

எலக்ட்ரான் நுண்ணோக்கியல்
ஆர். வெள்ளைச்சாமி (த.பா.நி.) (1978)

எலக்ட்ரிக் ரிப்போரிங்
இரா. வேங்கடகிருட்டிணன்,
நியூ செஞ்சுரி புக் கவுசு, சென்னை (1979)

எலும்புப் பாதுகாப்பு
எம். சி. இராசமாணிக்கம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1982)

எழுத்தியல்
சூ. இன்னாசி (த.பா.நி.) (1983)

எழுத்துச் சீர்திருத்தம்
செ. வை. சண்முகம்
(அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழக வெளியீடு) (1978)

எழுத்தும் அச்சும்
மா. சு. சம்பந்தன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை (1981)

எளியோர்க்கு நல்வீடுகள்
கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி நிலையம்,
சென்னை. (1977)

ஏர் உழவன் (இதழ்கள்)
ரா. கிருட்டிணசாமி
(1986, 1987, 1988, 1989) உழவன் அச்சகம் - கோவை

ஏவுகணை நூல்
அ. கி. மூர்த்தி அல்லிப் பதிப்பகம், தஞ்சாவூர் (1979)

ஒட்டுண்ணியியல்
அரசகரும மொழித்திணைக்களம் - இலங்கை (1965)

ஒப்பந்தச் சட்டவியல்
அ. ர. சனகன் (த.பா.நி.) (1973)

ஒப்பியன் மொழிநூல்
ஞா. தேவநேயன்
சை. சி. நூ. ப. கழகம், சென்னை (1940)

ஒப்புமை அரசாங்கங்கள்
ப. ராமசாமி (த.பா.நி.) (1978)

ஒரு நாளிதழ் உருவாகிறது
து. தமிழரசி, சி. எசு. விசயலட்சுமி, என். ரெங்கநாதன்
சங்கப் பலகை வெளியீடு - செனாய் நகர்- மதுரை (1987)

ஒருபடி இயல்முறைக் கணிதம்
ஏ. கோவிந்தராசலு (த.பா.நி.) (1976)

ஒலி
எசு. சோமசுந்தரம் (த.பா.நி.) (1972)

ஒலி - ஓர் அறிமுகம்
த. செயராமன் (த.பா.நி.) (1976)

ஒலி நூல் (சிறப்புப் பாடம்)
பு. முருகையன் (த.பா.நி.) (1970)

ஒலியியல்
ந. இராசாராம்
அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம்,
அண்ணாமலை நகர் (1982)

ஒளி நூல்
சி. ஆர். நோக்சு, தமிழாக்கம் : அ. சாந்து (த.பா.நி.) (1973)

ஒளிப்படம் பிடிக்கும் கலை
எம். எசு. பி. சண்முகம்
நேசனல் ஆர்ட்சு அகாடெமி, புதுடில்லி - 5. (1981)

ஒளிப்படவியல்
வி. சேது (த.பா.நி.) (1973)

ஒளிமின்கலம்
ப. குட்டியப்பன் (த.பா.நி.) (1972)

ஒளியியலும் - நிறமாலையியலும் (முதற் பகுதி)
இரா. செயராம் (த.பா.நி.) (1972)

ஒளியியலும் - நிறமாலையியலும் (இரண்டாம் பகுதி)
இரா. செயராம் (த.பா.நி.) (1980)

ஓமியோபதி : நோயும்-நோய்தீர்க்கும் முறையும்
அ. இராமமூர்த்தி
இமயம் பதிப்பகம் - நாகை (1981)

கட்டிட அமைப்புக்கலை
கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை (1967)

கணக்கியல், கணிதம்
சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (1936)

கணக்கியல் புள்ளியியல் (முதல் பகுதி)
கிருட்டிணவேணி அருணாசலம் (த.பா.நி.) (1974)

கணக்கியல் புள்ளியியல் (துணைப்பாடம்)
கிருட்டிணவேணி அருணாசலம் (த.பா.நி.) (1974)

கணக்கியலின் கோட்பாடுகள்
அ. குமாரராசு (த.பா.நி.) (1973)

கணக்குப் பதிவியற் சொற்றொகுதி
அரசகரும மொழித்திணைக் களம் - இலங்கை (1957)

கணக் கொள்கையும் தொடர்புள்ள தலைப்புகளும்
து. பாசுகரன் (த.பா.நி.) (1977)

கணித இயற்பியல்
அ. தனலட்சுமி, கி. பிரேமா (த.பா.நி.) (1977)

கணிதப் புள்ளியியல்
துரை. இரத்தின சபாபதி (த.பா.நி.) (1973)

கணிதப் பொருளாதாரம் - துணைப்பாடம் - பகுதி 1
துரை. இரத்தின சபாபதி
கா. இர. சந்தான கோபாலன் (த.பா.நி.) (1973)

கணிதப் பொருளாதாரம் - துணைப்பாடம் - பகுதி 2
ஆர். சீனிவாசன் (த.பா.நி.) (1974)

கணிதம்
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1965)

கணிதம் - ஓர் அறிமுகம்
ரா. மகாதேவன் (த.பா.நி.) (1971)

கணிதம் - ஓர் அறிமுகம்
எம். செயராம ஆறுமுகம் (த.பா.நி.) (1977)

கணிதம் கற்பித்தல்
தமயந்தி பாக்கியநாதன் (த.பா.நி.) (1978)

கணிதவியல் நெறிப்படுத்துதல்
அ. இராமகிருட்டிணன் (த.பா.நி.) (1978)

இராம்குமார்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1991)

கணிப்பொறி ஒழுங்கும் - பேசிக் மொழியும்
கா. செ. செல்லமுத்து
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (1985)

கண் சிமிட்டும் விண்மீன்கள்
வே. தமையேந்திரன் புகழ் பதிப்பகம் (1980)

கண் மருத்துவம்
சுப்பிரமணியன்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1975)

கதிரியக்கம்
ஆர். குருநாதன் (த.பா.நி.) (1976)

கதிரியக்கம்
ப. குட்டியப்பன் (த.பா.நி.) (1976)

கம்ப்யூட்டரும் அதன் பயன்களும்
க. விசுவநாதன் (த.பா.நி.) (1975)

கம்போசிங் தொழிலைக் கற்றுக் கொள்ளுங்கள்
மணிமேகலை பிரசுரம் - சென்னை (1987)

கரிமச் சேர்மங்கள் தயாரித்தலும் பண்பறி முறையும்
சொ. அகோரம் (த.பா.நி.) (1973)

கரிம வேதியியல் (முதல் புத்தகம்)
பி. பாவ்லோவ், ஏ. டெரசுட்யென்
தமிழாக்கம் : டி. வி. கிருட்டிணமூர்த்தி (த.பா.நி.) (1976)

கரிம வேதியியல் (துணைப்பாடம்)
கி. கண்ணபிரான் (த.பா.நி.) (1975)

கரிமவேதியியல் (இரண்டாம் புத்தகம்)
உ. இரா. சூரியநாராயணன் (த.பா.நி.) (1975)

கலப்பெண் மாறிகளின் பகுஇயல்
சே. டி. சாமுவேல் (த.பா.நி) (1976)

கலைக்களஞ்சியம்
பெ. தூரன், தமிழ்வளர்ச்சிக் கழகம்
முதல் தொகுதி : 1954 இரண்டாம் தொகுதி : 1955
மூன்றாம் தொகுதி : 1955 நான்காம் தொகுதி : 1956
ஐந்தாம் தொகுதி : 1958 ஆறாம் தொகுதி : 1959
ஏழாம் தொகுதி : 1960 எட்டாம் தொகுதி : 1961
ஒன்பதாம் தொகுதி : 1963 பத்தாம் தொகுதி : 1968

கலைச்சொல் அகராதி
ஆர். தாமோதரன், கலைக்கதிர் வெளியீடு
முதல் பகுதி (1985)
இரண்டாம் பகுதி (1985)
மூன்றாம் பகுதி (1985)

கலைச்சொல் தொகுப்பு நூல்
தமிழ்மன்றம், அழகப்பா பொறியியல் கல்லூரி,
காரைக்குடி (1971)

கலைச்சொல்லாக்கம்
இராதா செல்லப்பன் (1985)

கலைச்சொற் களஞ்சியம்
கால்நடை வளம் - மீன்வளம்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை (1993)

கலைச்சொற்கள் (அரசியல்)
(த.பா.நி.) (1971)

கலைச்சொற்கள் (உளவியல்)
(த.பா.நி.) (1971)

கலைச்சொற்கள் (புவியியல்)
(த.பா.நி.) (1971)

கலைச்சொற்கள் (பொருளாதாரம்)
(த.பா.நி.) (1971)

கலைச்சொற்கள் (பௌதிகம்)
(மதுரைப் பல்கலைக்கழகம்) (1971)

கலைச்சொற்கள் (வரலாறு)
(த.பா.நி.) (1971)

கலைச்சொற்கள் (விலங்கியல்)
(த.பா.நி.) (1971)

கலைச்சொற்கள்
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (1936)

கலைச்சொற்றொகுதி - உயிரியல் விஞ்ஞானம்
அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை (1961)

கல்வி உளவியல்
எக. பாக்கியம் (1987)

கல்வி உளவியல் கோட்பாடுகள்
ந. சுப்பு (1985)

கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும்
எச. சந்தானம் (த.பா.நி.) (1961)

கல்விச் சிந்தனைகள்
வ. பெருமாள் (1988)

கல்வித்துறை உருப்பட....
சூ. இராசநாயகம், க. ப. அறவாணன் (1975)

கல்வியில் அளவிடுதலும் மதிப்பீடும்
எம். ஆர். சந்தானம் (த.பா.நி.) (1976)

கல்வியின் உளவியல் அடிப்படைகள்
எச. சந்தானம் பழனியப்பா பிரதர்க (1981)

கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்
எச. சந்தானம் (1981)

கல்வியும் - உளவியலும் : கலைச்சொற்றொகுதி
அரசகரும மொழித்திணைக்களம் - இலங்கை (1962)

கல்வியும் மனிதசாதன வளர்ச்சியும்
வி. கே. ஆர். வி. ராவ் (1968)

கனிமத் தேட்டம்
ஒய். டி. கிடாய்கக்கி
தமிழாக்கம் : இரா. இராமசாமி (த.பா.நி.) (1977)

கனிமவேதியியல் (துணைப்பாடம்)
சி. ஏ. பத்மநாபன் (த.பா.நி.) (1974)

கனிமவேதியியல் (இரண்டாம் புத்தகம்)
பி. டி. முனியப்பா (த.பா.நி.) (1970)

காசநோய்
அ. கதிரேசன் , தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் (1986)

காசளவில் ஓர் உலகம்
கசாதா, ம. இராசாராமன், வாசகர் வட்டம், சென்னை - 17. ( )

காது மூக்கு தொண்டை நோய்கள்

ஏ. சி. விகசோவ், (மீர் பதிப்பகம்) நியூசெஞ்சுரி புக்கவுசு(1985)

காது மூக்கு தொண்டை கவாசப்பாதை வியாதிகளும் வைத்தியமும்

டி. எம். பரமேசுவரன் நியூ செஞ்சுரி புக் கவுசு (1986)

கார்போகைடிரேட்

க. காலசாமி (த.பா.நி.) (1973)

காலநிலை இயல் (முதல் பாகம்)

டபிள்யூ. சி. கெண்ட்ரு

தமிழாக்கம் : கொ. சேசநரசிம்மன் (த.பா.நி.) (1965)

காலந்தொறும் தமிழ்

இராம. ச்ண்முகம்

தெ. பொ. மீ. கருத்தியல் ஆய்வு மற்றும்

படைப்பியல் ஆய்வு நிறுவனம் - மதுரை (1981)

காலந்தொறும் நாட்டியக்கலை

கார்த்திகா கணேசன்

பாரி புத்தகப் பண்ணை - சென்னை (1980)

கால்நடைக்கதிர்

(இதழ்கள் : 1985, 1986, 1987, 1988, 1989)

க. செயராசு நத்தானியல்

தகவல் தொடர்பு நிலையம் -
கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை

கால்நடைச் சொல்லகராதி
கால்நடைத்துறை, சென்னை அரசாங்கம் (1961)

கிரகங்களுக்குப் பிரயாணம்

ஏ. சுடர்ன் பெல்ட், நியூ செஞ்சுரி புக் கவுசு - சென்னை (1964)

கீழ்வெப்பநிலை இயற்பியல்

பெ. தங்கராசன் (த.பா.நி.) (1972)

குடிசார் எந்திரவியல், பொறிமுறை எந்திரவியற் சொற்றொகுதி
அரசகரும மொழித் திணைக்களம் - இலங்கை (1966)

குடிமையியலும் ஆட்சியியலும்
அரசகரும மொழித் திணைக்களம் - இலங்கை (1958)

குடியிருப்புப் புவியியல்
அ. சிவமூர்த்தி (த.பா.நி.) (1975)

குடும்பக் கட்டுப்பாடு - ஓர் ஆராய்ச்சி
ம. சுந்தரம் இசுடார் பிரகரம், சென்னை

குவாண்டம் எந்திரவியல் தொடக்கப்படிகள்

வி. ரைட்னிக்

தமிழாக்கம் : (த.பா.நி.) (1976)

குழந்தைகள் கலைக்களஞ்சியம்

மா. பெரியசாமித்தூரன் - தமிழ்வளர்ச்சிக் கழகம் - சென்னை

தொகுதி - 1 (1968) தொகுதி - 2 (1970)
தொகுதி - 3 (1971) தொகுதி - 4 (1972)
தொகுதி - 5 (1972) தொகுதி - 6 (1973)
தொகுதி - 7 (1974) தொகுதி - 8 (1974)
தொகுதி - 9 (1975) தொகுதி - 10 (1976)

குழந்தைப் பருவ நோய்களும் குழந்தைநலப் பாதுகாப்பும்

பா. சந்திரா, நியூ செஞ்சுரி புக் கவுசு - சென்னை (1979)

குழந்தை வளர்ப்பும் நோய்த்தடுப்பும்

யு. இராமராவ், பூம்புகார் பிரசுரம், சென்னை -1. (1980)

குழவி உள்ளம்

ஈ. த . இராசேசுவரி
சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளிப் பதிப்பு,
சென்னைத் தமிழ்ச்சங்க வெளியீடு (1950)

குழியுடலிகள்
ச. இராதாகிருட்டிணன் (த.பா.நி.) (1972)

குளிரியல் காற்றுச் சீராக்கல்
சி. ஆறுமுகம் (த.பா.நி.) (1973)

குறைகடத்திகள்
எசு. சோமசுந்தரம் (த.பா.நி.) (1978)

குற்றவியல் சட்டம்
மா. சண்முக சுப்பிரமணியம் (த.பா.நி.) (1966)

குற்றவியல் தத்துவம்
ச. நாராயணசாமி (த.பா.நி.) (1975)

குறைகடத்திகள்

எசு. சோமசுந்தரம் (த.பா.நி.) (1978)

கூட்டுச் சூழ்நிலையியலும் - தாவரப் புவியியலும்
கே. இராசசேகரன் (த.பா.நி.) (1974)

கூட்டுமீன் வளர்ப்பு
வி. சுந்தரராசு - சாமுவேல் பால்ராசு
இசுடார் பிரகரம் - சென்னை. 5 (1985)

கூட்டுறவின் வரலாறும் கொள்கைகளும் - 1

அ. பழநியப்பர்

ஏ. பி. பாலகப்பிரமணியம் (த.பா.நி.) (1976)

கூட்டுறவு
அ. குழந்தை (த.பா.நி.) (1975)

கூட்டுறவுச் சட்டவரலாறும் நடைமுறையும்

அ. பழநியப்பர்

ஏ.பி. பாலசுப்பிரமணியம் (த.பா.நி.) (1976)

கூட்டுறுப்பைச் சாராத முறைகள்
வி. எசு. சம்பத்குமார் (த.பா.நி.) (1976)

கூலி
செ. செல்வநாதன் (த.பா.நி.) (1974)

கூலிக் கோட்பாடுகளும் தொழிலாளர் பிரச்சினைகளும்
கோ. செயராமன் (த.பா.நி.) (1971)

கூறுபரவல்களும் பயன்முறைகளும்
செ. அரங்கநாதன் (த.பா.நி.) (1977)

கைப்பணியும் கைத்தொழிலும் - கலைச்சொற்றொகுதி
